

KASTURI & CO., P.T., MADRAS.

டாக்டர்

# வில்லியம் மில்லர்

அல்லது

# கருணை உள்ள கல்வியாளர்

ACL-TNAL
002691
71

சென்னைத் தொண்டைமண்டலம் துளுவவேளாளர்

உயர்தரப் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர்

எஸ். எஸ். அருணகிரிநாத முதலியார்

எழுதியது

No.
8 OCT 1932
MADRAS

பிரசுரகர்த்தாகள் :

கஸ்தூரி அண்டு கம்பெனியார்

பார்க் டவுண்' சென்னை

து] [இதன் விலை அணா 8

Twm38
N32
58815

TwM38
N32

PRINTERS:

TIRUPATI SRI MAHANT'S PRESS

21, ANDERSON STREET,

MADRAS

3490

923.142

டாக்டர்

# வில்லியம் மில்லர்

# விஷய அட்டவணை


| விஷயம் | பக்கம் |
|---|---|
| டாக்டர் மில்லரின் பெற்றோர்கள் ... ... | 1 |
| டாக்டர் மில்லர் கல்வி கற்றல் ... ... | 3 |
| டாக்டர் மில்லரின் வாலிபப் பருவம்... ... | 7 |
| டாக்டர் மில்லர் சென்னை சேர்தல் ... | 9 |
| டாக்டர் மில்லரும் கிறிஸ்தவக் கல்லூரியும் ... | 13 |
| டாக்டர் மில்லருடைய தினசரி வேலைகள்... | 19 |
| டாக்டர் மில்லருடைய நற்குணங்கள் ... | 24 |
| இந்தியர்களிடத்தில் மில்லர் காட்டிய அனுதாபம் | 30 |
| டாக்டர் மில்லரும் சென்னைச் சர்வ கலாசாலையும் | 35 |
| டாக்டர் மில்லரும்......சீர்திருத்தங்களும்... | 38 |
| டாக்டர் மில்லரும் கல்லூரி போஜன விடுதிகளும் | 42 |
| டாக்டர் மில்லரும் பொதுக் காரியங்களும் | 47 |
| டாக்டர் மில்லரும் கிறிஸ்தவ மதப் பிரசாரமும் ... | 57 |
| கிறிஸ்தவர்கள்......நோக்கம் யாது? ... | 64 |
| டாக்டர் மில்லரும் நற்போதனையும் ... ... | 68 |
| டாக்டர் மில்லர்......தலைவராதல் ... | 71 |
| டாக்டர் மில்லரும் பழைய மாணவர்களும் ... | 76 |
| டாக்டர் மில்லரும் உபாத்தியாயர்களும் ... | 85 |
| டாக்டர் மில்லரின் உறவினர்கள் ... ... | 90 |
| டாக்டர் மில்லரின் அந்தியகாலம் ... | 95 |
| முடிப்புரை ... ... ... ... | 102 |

# முன்னுரை

தோன்று தோன்றித் துறைபல முடிப்பினுந் தான்தற் புகழ்தல் தகுதியன்றாயினும் அவசியம் நோக்கி யான் முன்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன் :

இந்தியாவின் பெருமக்களாய் இருந்தவர்களிலும் இருக்கின்றவர்களிலும் பலர் டாக்டர் வில்லியம் மில்லர் அவர்களின் உழைப்பினால் உயர்ந்தவர்களாவர் என்பது உண்மை. தென்னிந்தியாவில் கல்விக்காக உழைத்த பெருமக்களில் டாக்டர் மில்லர் தலைசிறந்தவ ராவரென் பது மறுக்க முடியாத உண்மையாகும். அவர் தென் னிந்திய மாணவர்களின் கல்வியின் பொருட்டே தமது உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணம் செய்தாரென்பது மிகையாகாது. அவர் வாழ்க்கையி லிருந்தும் அவருடைய போதனைகளிலிருந்தும் எதிர் கால இந்தியப் பிரஜைகளாகிய நமது மாணவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பல இருக்கின் றன. அத்தகைய விஷயங்கள் சிதறிப் போகாதபடி இப்புத்தகத்தில் கவனத்துடன் சேர்க்கப்பட் டிருக்கின் றன. ஆகவே இப்புத்தகத்தைப் படிப்பதால் மாண வர்கள் பெருநல மெய்துவார்க ளென்பது திண்ணம்.

இதுவரையில் இதுபோன்ற வேறு பல நூல்களை எழுதி மாணவருலகத்திற் கனுப்பியுள்ளேன். இனியும் புது புது கருத்துக்களடங்கிய, மாணவர்களுக் கவசிய

மான, இதுபோன்ற பல்வேறு நூல்களை எழுதி மாணவ ருலகத்திற் கனுப்ப யான் எண்ணியுள்ளேன். இத் தகைய துறையிலிறங்கி உழைப்பது எளிதன்று என்பதை அனுபவமுள்ளோர் அறிந்தே இருக்கின்ற னர். நமது மாணவர்கள் ஒழுக்கம், ஊக்கம், தன்னம் பிக்கை, தைரியம் முதலிய பல விஷயங்களில் சிறந்து விளங்கவேண்டு மென்னும் அவாவினுல் இத்தகைய புத்தகங்கள் எழுதுவதை நான் என் கடமையாகக் கொண்டுள்ளேன்.

வித்தியா 'இலாகா' தலைவர்கள் என்னுல் எழுதப் படும் இத்தகைய புஸ்தகங்களை மாணவர்கள் படிக்கு மாறு செய்வார்களாளுல் அத்தகைய அவர்களுடைய செய்கை இத்துறையிலிறங்கி உழைப்பதனுல் எனக்கு உண்டாகக்கூடிய சிரமத்திற்கு ஆறுதலளிப்பதாகும்.

**எஸ். எஸ். அருணகிரி நாதர்**

டாக்டர்

# வில்லியம் மில்லர்

அல்லது

# கருணை உள்ள கல்வியாளர்

## முதலாம் அத்தியாயம்

### டாக்டர் வில்லியம் மில்லரின் பெற்றோர்கள்

'டாக்டர் வில்லியம் மில்லர்' என்பவர் 'ஸ்காட்லண்டு' தேசத்தைச் சேர்ந்தவராவர். அவர் அந்தத் தேசத்திலுள்ள 'கெய்த்னெஸ்' மாகாணத்தைச் சேர்ந்த 'தர்ஸோ' என்னும் பட்டினத்தில் 1838-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 13-ஆந் தேதி யன்று பிறந்தார். அவருடைய வகுப்பினர் ஆதியில் 'நார்வே', 'ஸ்வீடன்' ஆகிய இரு தேசங்களிலிருந்தும் வந்து ஸ்காட்லண்டு தேசத்தில் குடியேறியவர்களாவர்.

டாக்டர் மில்லர் அவர்களுடைய தகப்பனார் பெயரும் 'வில்லியம் மில்லர்' என்பதாகும். அவர் தர்ஸோவில் பிரபல வியாபாரியா யிருந்தார். அவருக்குச் சொந்தமாக அநேகம் கப்பல்கள் இருந்தன. டாக்டர் மில்லர் நல்ல தனவந்தருடைய புத்திரசிகாமணி

யாவர் என்று நாம் சொல்லவும் வேண்டுமோ ? டாக்டர் மில்லருடைய முன்னோர்கள் பிறருக்கு உபகாரம் செய்வதில் பெயர் பெற்றவர்களா யிருந்தார்கள். அவர்கள் காருண்ய சிந்தை உள்ளவர்கள் என்பதற்கு அறிகுறியாகத் தர்ஸோ பட்டினத்தில் அவர்கள் கட்டிய துறைமுகம் இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

டாக்டர் மில்லருடைய தாயார் பெயர் 'எலிஜபெத் கன்' என்பதாகும். அந்த அம்மையாரும் தம் கணவரைப்போலவே நற்குணமும் நற்செய்கையும் வாய்ந்த பரம்பரையைச் சேர்ந்தவராவர். இங்கிலாந்தின் கீர்த்தி வாய்ந்த பிரதம மந்திரிகளில் ஒருவராயிருந்த 'மிஸ்டர் கிளாட்ஸ்டன்' என்பவர் டாக்டர் வில்லியம் மில்லருக்கு உறவினராவர் !

டாக்டர் வில்லியம் மில்லரை அவருடைய இளமைப் பருவத்தில், அவருடையபெற்றோர்கள், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். அவரும் பெற்றோர்கள் தம்மைக் கண்டு மகிழும் வண்ணம் நடந்து கொண்டார். சிறு வயது முதற்கொண்டே அவர் தீவிரமான புத்தியுள்ளவராய் இருந்தார். அவருக்குச் சிறுவயதில் கதைகளைக் கேட்பதில் அதிக பிரியம் ஏற்பட்டிருந்தது. ஆகவே அவர் அநேகம் கதைகளைப் பிறர் சொல்லக் கேட்டுக் கற்றுக் கொண்டார். இலக்கண இலக்கியங்களிலும் ஸ்வீடன் நார்வே தேசங்களில் வழங்கும் கதைகளிலும் சிறு வயது முதற்கொண்டே அவருக்குப் பயிற்சி ஏற்பட்டு அப்பயிற்சி நாளடைவில் வளர்ந்து வந்தது.

டாக்டர் வில்லியம் மில்லர் அவர்கள் தம்முடைய இளம்பிராயத்தைப் பெரும்பாலும் தம்முடைய தாய்ப் பாட்டன் வீட்டிலும் அத்தை வீட்டிலும் கழித்தார். அவரது அத்தையும் பாட்டியும் அவர் மீது அதிக அன்பு கொண்டு அவரைச் சீராட்டிப் பாராட்டி வந்தார்கள். அவர்கள் வசித்துக் கொண்டிருந்த இடமாகிய 'டேல்' என்னும் பிரதேசம் இயற்கை விநோதங்களுக்குப் பெயர் பெற்றிருந்தபடியால் டாக்டர் வில்லியம் மில்லர் தமது இளம் பருவத்தில், தாம் ஓடி ஆடியபோது, அந்த இயற்கை விநோதங்களைக் கண்டு களித்து வந்தார். அவர் அடிக்கடி அருகில் உள்ள மலைகளின் மீது ஏறி மலைகளைச் சுற்றி யுள்ள விநோதங்களைக் காண்பார்.

# இரண்டாம் அத்தியாயம்

## டாக்டர் மில்லர் கல்வி கற்றல்

டாக்டர் மில்லர் கல்வி கற்கவேண்டிய பருவத்தை அடைந்தார். அவருடைய பெற்றோர்கள் தங்கள் பட்டினத்தில் இருந்த மாதாகோயிலைச் சேர்ந்த ஒரு பள்ளிக்கூடத்திற்கு அவரை அனுப்பினார்கள். அவ்விடத்தில் மில்லர் கொஞ்சக்காலம் கல்வி பயின்றார். பிறகு அவருடைய பெற்றோர்கள் அவரை 'அபர்டீன்' பட்டினத்திலுள்ள 'பெல் ஈவ்' என்னும் பெயரையுடைய வித்தியா சாலைக்கு அனுப்பினார்கள். அவ்வித்தியா சாலையில் படிக்கும் மாணவர்கள் அவ்வித்தியா சாலையிலேயே தங்கி இருக்கவேண்டும். அந்த வித்தியா சாலையில்

மில்லர் தமது பதின்மூன்ருவது வயது வரையில் வாசித்துக் கொண்டிருந்தார்.

பிறகு மில்லர் 1852-ஆம் வருஷத்தில் அபர்டீனிலுள்ள 'மாரிஸ் கல்' என்னும் கல்லூரியில் போய்ச் சேர்ந்தார். அக்கல்லூரியில் அவர் நான்கு வருடகாலம் கல்வி பயின்ருர். தம்முடன் கல்வி பயின்ற எல்லாப் பிள்ளைகளிலும் அவர் மிகவும் சிறந்து விளங்கினுர். வயதில் அவர் மற்ற வித்தியார்த்திகளைப் பார்க்கிலும் மிகவும் சிறியவராகவே இருந்தார். அவர் தம் முழு மன விருப்பத்துடன் கல்வி பயின்று வந்தார். அவர் இறக்கும் வரையில், அவர் படித்த காலத்தில், அவர் உபயோகப்படுத்திய 'நோட்டு'ப் புஸ்தகங்களை அவர் பத்திரமாக வைத்திருந்தமை ஒன்றே அவர் கல்வியில் கொண்டிருந்த உறுதியைக் காட்டப் போதுமென்னலாம். அவர் மாரிஸ் கல் என்னும் கல்லூரியில் மத விஷயங்கள், லத்தீன், கிரீக், இயற்கைச் சரித்திரம், கணக்கு, இயற்கைத் தத்துவம், நல்லொழுக்கத் தத்துவம், தர்க்கம் ஆகிய இவைகளைப் பயின்று வந்தார்.

மில்லருடன் கல்வி பயின்ற வித்தியார்த்திகள் பலராவர். அவர்களில் அநேகர் இந்தியா, பர்மா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா முதலிய பிறதேசங்களில் நல்ல உத்தியோகங்களை வகித்துச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர். கல்லூரியில் மில்லர் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதே கல்லூரியில் கல்வி கற்க வந்த 'சார்லஸ் சுப்பர்' என்பார் மில்லருடன் பொது நன்மைக்கு உழைத்தவர்களில் மிகவும் முக்கியமானவராவர்.

## டாக்டர் மில்லர் கல்வி கற்றல்

மில்லர், கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கையில் அநேகம் பரிசுகளைப் பெற்றார். அவர் தத்துவ சாஸ்திரத்தையும் கட்டுரை எழுதுவதையும் பெரிதும் போற்றி அத்தகைய அபிவிருத்தியில் அதிகமாகத் தம் காலத்தைச் செலவிட்டார். 1856-ஆம் வருஷத்தில் மில்லர் 'எம். ஏ.,' பட்டதாரியானார். அதைக் கண்ட அபர்டீன் வாசிகள் அவர்மீது தாங்கள் கொண்ட அன்புக் கறிகுறியாகப் பொற் பதக்கம் ஒன்றை அவருக்குப் பரிசளித்து அவரைக் கௌரவித்தார்கள். மில்லர் தேச சரித்திரத்தையே பெரிதும் விரும்பிக் கற்று வந்தார். இயற்கை விநோதங்களைக் கண்டு களிப்பதில் மில்லர் தம் காலத்தை ஓர் அளவுக்குச் செலவழித்து வந்தார். அவருக்கு ஆங்கிலப் புலவராகிய 'ஜான் ரஸ்கின்' இடத்தில் அதிக பிரியம் ஏற்பட்டிருந்தது. ஆகவே அவர் ரஸ்கின் எழுதிய நூல்களைப் பெரிதும் விரும்பிப் படித்து வந்தார்.

மில்லர் எம். ஏ., பட்டதாரியானவுடன் படிப்பதை விட்டு விடாமல் பின்னும் படித்துப் பல விஷயங்களில் தேர்ச்சியடைய வேண்டுமெனக் கருதி 'எடின்பரோ' சர்வ கலாசாலைக்குச் சென்றார். ஒரு வருஷம் அந்தச் சர்வ கலாசாலையில் சேர்ந்து படித்தார். அப்போது அங்கு அவருக்கு விருப்பமான ஆசிரியர் மரணமடைந்தார். அதனால் மில்லர் 1857-ஆம் வருஷத்தில் 'நீயூ காலேஜ்' என்னும் பெயருள்ள கல்லூரியில் சேர்ந்து மத சம்பந்தமான விஷயங்களை 1861-ஆம் ஆண்டு வரையில் கற்று அப்பரீட்சையில் பிறர் போற்றும்படியாகத் தேர்ச்சி பெற்றார். அந்தக் கல்லூரியில் இருக்கும்

போது அவர் மத சம்பந்தமான விஷயங்களில் அதிக ஆர்வம் காட்டி அவைகளைக் குறித்துத் தம் ஆசிரியர்களுடன் தர்க்கித்துப் பல விஷயங்களை ஐயம் திரிபறக் கற்றுத் தேர்ந்தார். சில சந்தர்ப்பங்களில் அவர் தம் ஆசிரியர்களுடன் சென்று மதப் பிரசங்கங்கள் செய்து வந்தார். இதனால் அவருடைய ஆசிரியர்கள் அவரிடத்தில் அதிக விசுவாசம் உள்ளவர்களாய் இருந்தார்கள்.

அபர்டீன் 'மாரிஸ் கல்' கல்லூரியில் மில்லர் படித்துக் கொண்டிருந்தபோதே அக் கல்லூரியைச் சேர்ந்த இலக்கண இலக்கிய அபிவிருத்தி சங்கத்தில் சேர்ந்து மிகவும் உழைத்ததோடு அச்சங்கத்தின் சார்பாய் நடைபெற்ற பல சொற்பொழிவுகளிலும் ஈடுபட்டு நற்பெயரெடுத்தார். அதைப் போலவே அவர் எடின்பரோ சர்வ கலாசாலையில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தபோதே அச்சர்வ கலாசாலையைச் சேர்ந்த 'டைலெக்டிக் சொசைடி' என்னும் சபையில் ஈடுபட்டு, அநேக விஷயங்களைக் குறித்து வாக்குவாதம் செய்து, நற்பெயரெடுத்தார். அவர் அவ்வாறு பல சபைகளில் அதிக சிரத்தை கொண்டு பல விஷயங்களைச் சாதித்தபடியால்தான் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும் அத்தகைய பல சங்கங்களை நிறுவி அவைகளை நல்ல முறையில் நடத்தி வர அவரால் முடிந்தது.

அவர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் தம் ஓய்வு காலத்தை மலைகளின் மீது ஏறி இயற்கை விநோதங்களைக் கண்டு களிப்பதில் கழித்து வந்தார். மில்லர் எடின்பரோ சர்வ கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு ஏற்பட்டிருந்த

ஆசிரியர் பலராவர். அவர்களில் ஒருவர் 'வில்லியம் இ. ஐடன்' என்பவர் ஆவர். அவர் பாஷா ஞானத்திலும் பாக்கள் இயற்றுவதிலும் சிறந்தவராவர். அவருடைய சேர்க்கையால்தான் மில்லர் பாஷா ஞானத்திலும் கவி கட்டுவதிலும் நிபுணரானுர். மில்லர், சென்னைக் கிறிஸ் தவக் கல்லூரி மாதாந்தச் சஞ்சிகையில், அவர் காலத் தில், அநேகம் பாக்கள் பாடி வெளியிட்டிருக்கிறுர் என் பது ஈண்டு குறிப்பிடத் தக்கதாம்.

## மூன்றம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரின் வாலிபப் பருவம்

டாக்டர் மில்லர் மத சம்பந்தமான விஷயங்களை நன்கு கற்ற பிறகு எடின்பரோவிலுள்ள 'ப்ரீ செயின்ட் ஜார்ஜ் சர்ச்' என்னும் கோயில் பாதிரியா ருக்கு உதவியாய் இருந்து வந்தார். பிறகு அவர் அவ் விடத்திலுள்ள 'செயின்ட் டேவிட் மிஷ'னுக்கு அதி காரியானுர். மேற்கூறிய இரண்டு பதவிகளிலும் மில்லர் பிறர் மெச்சத்தக்க விதமாய் நடந்து கொண்டார். அதனுல் அவரை அனைவரும் கொண்டாடினுர்கள்.

மில்லர், ஸ்காட்லாண்டில் இருக்கும்போது, இரண்டு பிரசங்கங்கள் செய்தார். அவ்விரண்டு பிரசங்கங்களி லிருந்து அவர் தொடர்ச்சியான எண்ணம் உள்ளவர் என்றும் அவர் தாமே விஷயங்களைக் கிரகிக்கும் சக்தி வாய்ந்தவர் என்றும் தெரிகிறது. அவர் செய்த இரண்டு பிரசங்கங்களில் ஒன்று 'நமது "ஸ்கேண்டிநேவியா"

முன்னோர்கள்' என்பதாகும். அப்பிரசங்கத்தில் அவர், 'ஸ்காட்லாண்டின் வட பாகத்தில் உள்ளவர்கள் "கெல்டிக்" ஜாதியைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் நார்வே, ஸ்வீடன் முதலான ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறியவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் பேசும் பாஷை ஸ்காட்லாண்டிலுள்ள மற்ற மகாகாண வாசிகள் பேசும் "கேலிக்" பாஷையாயிருக்கவில்லை; ஆங்கிலமாயிருக்கிறது. என்னுடைய தாயாரின் முன்னோர்கள் பன்னிரண்டாவது நூற்றாண்டில் நார்வேயிலிருந்து ஸ்காட்லாண்டின் வட பாகத்தில் குடியேறினார்கள். என்னுடைய முன்னோர்களில் ஒருவர் கடற்கொள்ளைக்காரராய் இருந்தார். அவர் பிடிக்கப்பட்டு 1174-ஆம் வருஷத்தில் சிரச்சேதம் செய்யப்பட்டார்; என் முன்னோர்கள் ஓய்வின்றி உழைப்பவர்களா யிருந்தார்கள். "கெல்ட்" ஜாதியார் மனோ ராஜ்ஜியம் செய்பவராவர். "சாக்சன்" ஜாதியார் தூங்குபவர் ஆவர். "ஸ்கேண்டிநேவியர்" உழைக்க வேண்டும் என்னும் எண்ணம் உள்ளவராவர்,' என்று கூறி இருக்கின்றார். 'வில்லியம் மாரிஸ்' என்பவரால் எழுதப்பட்ட 'சைகார்ட் தி வால் சங்' என்னும் பாட்டினிடத்தில் மில்லருக்கு அதிக விருப்பம் ஏற்பட்டு இருந்தது. டாக்டர் மில்லர் 'ஸ்கேண்டிநேவியர்' பரம்பரையைச் சேர்ந்தவரா யிருந்தபடியால்தான் அவருக்கு அளவு கடந்த ஊக்கமும், தைரியமும், உழைக்க வேண்டும் என்னும் எண்ணமும் ஏற்பட்டு இருந்தது. ஆகவே, தாம் ஆரம்பித்த எல்லா வேலைகளையும் பூர்த்தி செய்ய அவரால் முடிந்தது.

மில்லர் செய்த மற்றொரு பிரசங்கம் 'ப்ளான் ஆப் இஸ்டரி' — சரித்திரத்தின் ஒழுங்கு—என்பதாகும். இப்பிரசங்கத்தில் அவர் மனிதனைப் பொறுத்தவரையில் எல்லா விஷயங்களிலும் ஓர் ஒழுங்கு ஏற்பட்டு இருக்கிற தென்றும், ஒரு சமூகமோ அல்லது ஒரு மனிதனோ இந்த ஒழுங்குக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்றும், உலகம் என்பது ஒரு வித்தியாசாலை போன்றதாகு மென்றும், அந்த உலகத்திலுள்ள பல்வேறு பிரிவுகள் அவ்வித்தியாசாலையில் உள்ள பலவகுப்புகளைப் போன்ற தாகும் என்றும், அங்குப் பல பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன வென்றும், அப்பாடங்களாலேற்படும் செல்வாக்கு இவ்வுலகம் அழியும் வரை நிலைபெற்று இருக்கின்றன வென்றும் கூறியுள்ளார்.

## நான்காம் அத்தியாயம்

### டாக்டர் மில்லர் சென்னை சேர்தல்

1835-ஆம் வருஷத்தில் 'செயின்ட் ஆண்ட்ரூஸ்' மாதா கோயிலைச் சேர்ந்த அதிகாரிகள் சென்னபட்டினத்தில் உள்ள வேப்பேரியில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார்கள். அதன் பிறகு 1837-ஆம் வருஷத்தில் ஸ்காட்லண்டிலிருந்து 'மிஸ்டர் அண்டர்சன்' என்பவர் சென்னைக்கு வந்து இந்தப் பள்ளிக்கூடத்தை நிருவகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பிறகு அவர் வேப்பேரியில் இருந்த இப் பள்ளிக்கூடத்தை 'ஜார்ஜ் டவுனு'க்கு மாற்றி விட்டார்.

ஆரம்ப காலத்தில் இப் பள்ளிக்கூடம் ஒழுங்காக நடைபெற்று வந்தது. இவ்விஷயம் இவ்வாறு இருக்கையில் 1843-ஆம் வருஷத்தில் ஸ்காட்லண்டு மாதாகோயில் நடைமுறை காரணமாகத் தலைவர்களுக்குள் பிளவு ஏற்பட்டது. உடனே 'ப்ரீ சர்ச் ஆப் ஸ்காட்லண்ட்' என்ற ஒரு சங்கம் சிலரால் ஏற்படுத்தப்பட்டது. அப்போது சென்னையிலிருந்த ஸ்காட்லண்டு தேசத்துப் பாதிரிமார்கள் அச்சங்கத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

நாம் யேலே கூறிய பள்ளிக்கூடமானது வேப்பேரியில் இருந்து 1847-ஆம் வருஷத்தில் இப்போது கிறிஸ்தவக் கல்லூரி இருக்கும் இடத்திற்கு மாற்றப்பட்ட பிறகு சிறிது காலம் நடைபெற்று வந்தது. பிறகு 1857-ஆம் வருஷத்தில் சென்னையில் ஒரு சர்வ கலாசாலை ஏற்படுத்தப் பட்டது. ஆனால் நாம் மேலே கூறிய வித்தியாசாலையைச் சேர்ந்தவர்களில் ஒருவராவது 'மெட்ரிக்குலேஷன்' பரீட்சைக்குச் செல்ல அருகதையுடையவராகக் காணப்படவில்லை. இன்னும் இது போன்ற வேறு பலவிதக் காரணங்களால் நாம் மேற்கூறிய வித்தியாசாலையானது 1862-ஆம் வருஷத்திற்குள் க்ஷீண மடையத்தக்க நிலைக்கு வந்து விட்டது.

நாம் மேற்கூறிய பள்ளிக்கூடமானது க்ஷீணமடையத்தக்க நிலைக்குவந்து விடவே அதை மறுபடியும் முன்னிருந்த உன்னத நிலைக்குக் கொண்டு வர அப்பள்ளிக்கூட அதிகாரிகள் எண்ணி, 'அதற்காக என்ன செய்யலாம்?' என்று ஆலோசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களுக்கு டாக்டர் மில்லருடைய ஞாபகம் வந்தது. ஆகவே அவர்கள் மில்லரைச் சென்

னைக்குச் சென்று நாம் மேற் கூறிய பள்ளிக்கூடத்தை நன்ருக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு முன் மில்லர், 'இந்தியாவுக்குச் செல்ல வேண்டும்,' என்று எண்ணவேயில்லை. அது வரையில் அவர் இந்தியாவில் உள்ள பாதிரிமார்களின் விஷயத்தைக் குறித்தாவது அவர்கள் இந்தியாவில் கல்வி அபிவிருத்திக்காக எத்தகைய பாடுபடுகிருர்கள் என்பதை நினைத்தாவது விசேஷமாக ஒன்றும் ஆராய்ச்சி செய்யவில்லை.

அப்படியானுல் டாக்டர் மில்லர் சென்னைக்கு வருவதற்கு எவ்வாறு ஒப்புக்கொண்டார் என்ற கேள்வி பிறக்கக் கூடுமல்லவா ? அதைக் குறித்து டாக்டர் மில்லர் ஒரு சந்தர்ப்பத்தில், 'எந்த இடத்தில் ஒருவனுடைய உதவி நாடப்படுகிறதோ அந்த இடத்தில் அவன் சென்று உதவவேண்டும். அப்படிச் சென்று உதவாமல் இருப்பவனுக்கு நேரக்கூடிய பாவங்களைக் குறித்து என் மத ஆசிரியர்கள் எனக்குக் கூறியுள்ள விஷயங்கள் என் மனத்தில் பதிந்திருக்கின்றன. சென்னைக்கு வருவதற்கு என்னைத் தவிர வேறு ஒருவரும் இல்லாதபோது நானே இங்கு வருவது முறையான காரியமாகுமென்று நான் எண்ணியபடியால் எனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை நான் மறுக்காமல் ஏற்றுக் கொண்டு சென்னைக்கு வந்தேன்,' என்று சொல்லியிருக்கின்ருர்.

இத்தகைய எண்ணத்தோடு டாக்டர் மில்லர் தம்முடைய இருபத்து நான்காவது வயதில், 1862-ஆம் வருஷம் டிசம்பர் மாதம், சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

சென்னைக்கு வந்து சேர்ந்த டாக்டர் மில்லர் அவர்கள் 'ப்ரீ சர்ச்' என்னும் மதபோதன சங்கத்தின் முக்கிய பிரதிநிதியாக இருக்கவேண்டியவ ரானார். ஆகவே அவர் அச்சங்கத்தின் பிரதிநிதியாக வெளி இடங்களுக் குச் சென்று மதப் பிரசங்கம் செய்யவேண்டியதும் அவ சியமாயிற்று. பின்னும் அவர் மதபோதன சங்க வேலை களையும், வைத்திய உதவி சம்பந்தமான வேலைகளையும், பெண் கல்வி சம்பந்தமான வேலைகளையும், பள்ளிக்கூட சம்பந்தமான விஷயங்களையும் கவனிக்க வேண்டியவ ரானார். அவர் இவ்வேலைகளை யெல்லாம் தைரியத்தை யும் இறைவனுடைய துணையையும் ஆதாரவாகக் கொண்டு நடத்தி வந்தார்.

மில்லர் சென்னைக்கு வந்தபோது இராயபுரத்தி லுள்ள காசிமேடு என்னுமிடத்தில் வசித்துக்கொண் டிருந்ததாகத் தெரிகிறது. அப்போது அவர் இளையவரா யிருந்தும் தாடி வைத்திருந்தார். தினந்தோறும் அவர் காலையில் பள்ளிக்கூடத்துப் போஜன சாலையைச் சேர்ந்த அங்கத்தினர்களில் ஒருவரையேனும் இருவரை யேனும் தம்முடன் அழைத்துக் கொண்டு உலாவச் செல்வது வழக்கம் என்றும் தெரிகிறது.

டாக்டர் மில்லர் தம்முடைய அரிய முயற்சியினால் பள்ளிக்கூடத்தை நன்னிலைமைக்குக் கொண்டுவந்து 1864-ஆம் வருஷத்தில் தம் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த, மூன்று பிள்ளைகளை 'மெட்ரிக்குலேஷன்' பரீட்சையில் தேறும்படி செய்தார். பிறகு மறு வருஷத்தில் 'ப்ரீ சர்ச்' சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் 'எப். ஏ.,' பரீட்சை யில் தேறினர். 1867-ஆம் வருஷத்தில் 'பி. ஏ.,' வகுப்பும்

ஏற்படுத்தப்பட்டது. அது முதற்கொண்டு நாம் மேற் கூறிய பாடசாலையானது முதல்தரக் கல்லூரியாயிற்று.

டாக்டர் மில்லர் தம்முடைய முயற்சியினால் அழியும் நிலையிலிருந்த பள்ளிக்கூடத்தைத் தாம் இந்தியாவுக்கு வந்தபிறகு, ஐந்தாண்டுகளுக்குள், முதல்தரக் கல்லூரியாகச் செய்தமை பெரிதும் போற்றத்தக்க செய்கை யன்றோ? இவ்வாறாகச் செயற்கரிய காரியத்தைச் செய்து முடித்த பெரியாராகிய டாக்டர் மில்லர் அவர்கள், தாம் தென் இந்தியாவில் கல்வி விஷயமாக உழைக்க ஆரம்பித்த பிறகு, ஐந்து வருடம் முடிவடைந்தவுடன், 'பர்லோ' என்னும் நீண்டநாள் விடுமுறை பெற்றுக்கொண்டு தம் சுதேசமாகிய ஸ்காட்லண்டுக்குப் பிரயாணமானார். சுதேசம் சென்ற டாக்டர் மில்லர் தாம் இந்தியாவில் கண்ட விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கலானார். அப்போது அவர் இந்தியாவுக்கு இனி எவ்வாறு உதவி செய்யலாம் என்பதைக் குறித்தே அதிகம் சிந்திக்கலானார்.

## ஐந்தாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும் கிறிஸ்தவக் கல்லூரியும்

1835-ஆம் வருஷத்தில் 'செயின்ட் ஆண்ட்ரூஸ்' மாதாகோயில் அதிகாரிகளால் வேப்பேரியில் ஸ்தாபிக்கப்பட்டுப் பின்னர் 1837-ஆம் வருஷத்தில் மிஸ்டர் ஆண்டர்சன் என்பவரால் ஜார்ஜ் டவுனுக்கு மாற்றப்பட்டுக் கொஞ்சக்காலம் வரையில் நன்னிலையில் இருந்து

1862-ஆம் வருஷத் தொடக்கத்தில் அழியும் நிலையை யடைந்து பின்னர் மில்லருடைய அரிய முயற்சியினால் முன்னுக்கு வந்த கல்வி ஸ்தாபனமே பிறகு தென்னிந்தியாவுக்கே ஒரு நடு நாயகமாய் விளங்குவதாயிற்று. ஆகவே அதைக் குறித்தும் சிறிது கவனிப்போம்.

டாக்டர் மில்லர் துரையவர்கள் மேற்கூறிய வித்தியா சாலையைத் தமது அரிய முயற்சியினாலும் இடையறு உழைப்பினாலும் 1867-ஆம் வருஷத்தில் முதல்தரக் கல்லூரி யாக்கினார் என்று மேல் அத்தியாயத்தில் கூறினோ மல்லவா?

அந்தக் கல்லூரியை நன்னிலைக்குக் கொண்டுவந்த பிறகு மில்லர் துரையவர்கள் தம் சொந்த தேசமாகிய ஸ்காட்லண்டு தேசத்திற்குப் 'பர்லோ' என்னும் நீண்டநாள் விடுமுறை பெற்றுக்கொண்டுபோய் மறுபடியும் 1869-ஆம் வருஷத்தில் சென்னைக்குத் திரும்பி வந்தார். வந்து முன் போலவே கல்லூரியின் அபிவிருத்தியை நாடி அல்லும் பகலும் ஓயாது உழைத்து வந்தார். இவ்வாறு அவர் உழைத்து வந்ததன் பயனால் 1876-ஆம் வருஷத்தில் கல்லூரிக்கு வேண்டிய அளவுக்கு ஆசிரியர்களும் மற்றும் அவசியமான உபகரணங்கள் பலவும் ஏற்படவே பிறகு அவர் கல்லூரியை 'பிரீ சர்ச்' மிஷனைச் சேர்ந்த மற்ற 'இலாக்கா'க்களிலிருந்து வேறு பிரித்துத் தனி 'இலாக்கா' வாகச் செய்துவிட்டார். இவ்வாறு அவர் செய்து விடவே இக்கல்லூரியானது தென்னிந்தியாவிலுள்ள கிறிஸ்தவக் கல்லூரிகளில் தலை சிறந்து விளங்குவதாயிற்று. அதைக் கண்ட மில்லர் துரையவர்கள் இக்கல்லூரியைப்

'பிரீ சர்ச் மிஷனை'ச் சேர்ந்ததாக மாத்திர மில்லாதபடி தென்னிந்தியாவில் கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபடும் எல்லாக் கிறிஸ்தவ மிஷன்களுடனும் சம்பந்தப்படுத்தி விட்டால் மிகவும் நலமா யிருக்குமென்று கருதினர். இவ்வாறு கருதிய மில்லர் தமது அபிப்பிராயத்தை ஸ்காட்லண்டில் இருந்த 'பிரீ சர்ச் மிஷன்' அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். அதோடு அவர் தம் கருத்துக்களைச் 'சர்ச் மிஷனரி சொஸைடி' என்னும் கிறிஸ்தவ மதப் பிரசார சங்கத்தினருக்கும், 'வெஸ்லியன் மிஷனரி சொஸைடி' என்னும் மதப் பிரசார சங்கத்தினருக்கும் விளக்கமாகத் தெரிவித்தார். இவ்விரு சங்கத்தினரும் ஸ்காட் லண்டைச் சேர்ந்த 'பிரீ சர்ச் மிஷன்' என்னும் கிறிஸ்துவ மதப் பிரசார சங்கத்தாருடன் கலந்து இக்கல்லூரியைக் கிறிஸ்தவர்களின் பொது ஸ்தாபனமாக்கி அதன் நிருவாகத்தில் ஈடுபட்டு உழைத்துவரின் அதனால் ஏற்படக்கூடிய நன்மை அதிகமாகும் என்றும் அறிவித்தனர்.

மில்லர் துரையவர்கள் கூறியவை முறையான விஷயமாகும் என்று அவர்களுக்குத் தெரியவே அவர்கள் அவருடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டார்கள். அதன்மேல் ஜான் ஆண்டர்சனால் முதலில் நடத்தப்பட்டு வந்த மேற்கூறிய கல்விச் சாலையானது 1877-ஆம் வருஷத்தில் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி என்னும் நாமதேயத்துடன் விளங்குவதா யிற்று.

பிறகு மில்லர் துரையவர்கள் இக்கல்லூரியின் நிருவாகத்துக்கென ஒரு சபையை ஏற்படுத்தினர். அச்சபைக்குக் 'காலேஜ் கௌன்சில்' என்று பெயர். அச்

சபையில் மேற்கூறிய மூன்று மதப் பிரசார சபையைச் சேர்ந்தவர்களின் பிரதிநிதிகள் அங்கம் பெற்ருர்கள்.

இவ்வாருக மில்லர் துரையவர்கள் தென்னிந்தியாவில் கல்வி அபிவிருத்திக்காக அரும்பாடுபட்ட பிறகு மறுபடியும் 1878-ஆம் வருஷத்தில் 'பர்லோ' என்னும் நீண்ட நாள் விடுமுறை பெற்றுக்கொண்டு தம் சுதேசமாகிய ஸ்காட்லண்டுக்குப் போனர். போனவர் தாம் சென்னையில் செய்தவைகளைக் குறித்தும் இந்தியாவுக்குக் கல்வி சம்பந்தமான பிரசார வேலைகளைச் செய்ய 'மிஷன்'கள் என்னும்படியான சங்கங்களை அனுப்புவதைக் குறித்தும் பல பிரசங்கங்கள் செய்தார். அவர் செய்த பிரசங்கங்களின் கருத்துகளை, 'பிரீ சர்ச்'சைச் சேர்ந்த 'பாரின் மிஷன்ஸ் கமிட்டி'யார் என்னும் அயல் நாட்டுப் பிரசார சபையினர், 'இந்தியன் மிஷன்ஸ்' 'இந்தியாவில் பிரசாரம்—அதனை எவ்வாறு பாராட்டுவது' என்ற தலைப்பின் கீழ் அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

மில்லர் தாம் ஸ்காட்லண்டில் செய்த பிரசங்கங்களில், "சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் சாதாரண படிப்போடு மத சம்பந்தமான படிப்பும் போதிக்கப்பட்டு வருகிறது,' என்று கூறினர். 'இன்னும் அரசாங்கக் கல்லூரிகளில், "மத விஷயங்களில் ஆங்கிலேயர்கள் தலையிட மாட்டார்கள்" என்று விக்டோரியா மகாராணியார் கூறியுள்ளபடியால் மத சம்பந்தமான கல்வி நீக்கப்பட்டு மற்றக் கல்விகளே போதிக்கப்பட்டு வருகின்றன,' என்றும் அவர் கூறியுள்ளார்.

இவ்விஷயங்கள் சென்னைக்கு எட்டியவுடன் சென்னைப் 'பிரஸிடென்ஸி காலேஜ்'ல் ஆசிரியாகவும்

பிறகு சென்னை மாகாண கல்வி இலாகா தலைவராகவு மிருந்த 'டாக்டர் டங்கன்' துரையவர்கள் டாக்டர் மில்லருடைய அபிப்பிராயங்களைக் கண்டித்து, 'கல்லூரி களில் மத போதனைகளால் உண்டாகக் கூடிய நன்மை யாது மில்லை,' என்று சென்னை 'மெயில்' பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதினர். உடனே மில்லர் துரையவர் கள், 'ஒழுக்கத்துக்கு அடிப்படையாக இருப்பது மத சம்பந்தமான கல்வியே,' என்ருர். ஆனல், டாக்டர் டங் கன் துரையவர்களோ, 'மத சம்பந்தமான கல்வி ஒழுக் கத்துக்கு அடிப்படையான தன்று,' என்ருர். இவ் வாருக மில்லருக்கும் டாக்டர் டங்கனுக்கும் ஏற்பட்ட அபிப்பிராய பேதங் காரணமாக வெளிவந்த விஷயங் கள், 'டங்கன்-மில்லர் அபிப்பிராய பேதங்கள்,' என்று பெயர் பெற்றன.

மில்லர் துரையவர்கள் கொண்டிருந்த அபிப் பிராயத்தைக் குறித்து அவருடைய சகாக்களில் ஒருவ ரான டாக்டர் கூப்பர், 'கிறிஸ்தவ மதத்திலிருந்து எவ ரேனும் ஒழுக்கத்தை வேறு பிரிக்க முயன்ருலும் மற்ற மதங்களிலிருந்து ஒழுக்கத்தை வேறு பிரிக்க முடியாது. "கடவுள் ஒருவர் இருக்கின்ருர்" என்ற தத்துவத்தை உடைய மதங்களிலிருந்து ஒழுக்கத்தை வேறு பிரிக்க முடியாது. மேல் உலகம் ஒன்று உண்டு; ஆன்மா அழிவற்றது; அவரவர் செய்யும் நன்மை தீமைகளுக் குரிய பலாபலனை அவரவர் அனுபவிப்பர் என்ற தத்து வங்களிலிருந்து ஒழுக்கத்தை வேறு பிரிக்க முடியாது. இந்தத் தத்துவங்கள் யாவும் கிறிஸ்தவ மதத்திற்கு மாத்திரமே யன்று; மற்றெல்லா மதங்களுக்குமே

பொதுவானவைகளாய் இருக்கின்றன,' என்று கூறி யுள்ளார்.

கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்து வாசிக்கும் வித்தி யார்த்திகளின் தொகை நாளடைவில் அதிகமாயிற்று. ஆகவே அதற்குத் தக்கபடி கட்டடமும் அபிவிருத்தி யடைய வேண்டியதாயிற்று. இதை உத்தேசித்துக் கல்லூரியின் அதிகாரிகள் 1871-ஆம் வருஷத்தில் ஏறக் குறைய ஐம்பதினுயிரம் ரூபா செலவழித்துக் கட்ட டத்தை அபிவிருத்தி செய்தார்கள். பிறகு சில ஆண்டு கள் கழிந்தன. மறுபடியும் இடம் போதவில்லை. ஆகவே, 1883—1887-ஆம் வருஷங்களுக் கிடையில் சுமார் ஒன்றேகால் இலக்ஷ ரூபாவுக்கு அதிகமாகச் செலவழித் துக் கட்டடம் கட்டினுர்கள். பிறகு 1891—1896-ஆம் வருஷங்களுக் கிடையிலும் கட்டட அபிவிருத்தி வேலை நடைபெற்றது. இவ்வாருக டாக்டர் மில்லர் துரை யவர்கள் கிறிஸ்தவக் கல்லூரியை அரும்பாடுபட்டு முன்னுக்குக் கொண்டு வந்தார். அவர் இந்தியாவை விட்டுச் சென்றபிறகுகூட 1907-ஆம் வருஷத்தில் மூன் றரை இலட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுக் கட்டடங் கள் கட்டப்பட்டன. மில்லர் காலத்திலும் அவருக் குப் பிறகும் கிறிஸ்தவக் கல்லூரிக்கு ஏற்பட்ட ஆசிரி யர்கள் அனைவருமே அக்கல்லூரியின் அபிவிருத்தியில் பெரிதும் கருத்துள்ளவர்களாவர். இப்போது அக் கல்லூரியில் 'பி.ஏ., ஹானர்ஸ்' வகுப்பும் ஏற்பட்டிருக் கிறது. சென்னை இராஜதானியிலுள்ள கல்லூரிகளில் மிகவும் சிறந்த கல்லூரிகளில் ஒன்ருக இக்கல்லூரி விளங்கி வருகிறது. பல நூறு மாணவர்கள் இக்

கல்லூரியில் கல்வி பயின்று வருகிறார்கள். சர்வகலா சாலைப் பரீட்சைகளிலும் இக்கல்லூரி சிறந்தே விளங்கு கின்றது.

## ஆறும் அத்தியாயம்

### டாக்டர் மில்லருடைய தினசரி வேலைகள்

டாக்டர் மில்லர் துரையவர்கள், 'வைகறைத் துயி லெழு,' என்பதற்கேற்ப அதி காலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அன்று செய்யவேண்டிய வேலைகளைக் கவ னிக்க ஆரம்பிப்பார். அவர் காலை ஏழுமணிக்குள் தாம் கல்லூரியில் செய்யவேண்டிய பிரசங்கங்களுக்குரிய விஷயங்களைக் கவனித்து விடுவார். எப்பொழுதும் அவர் வேலை செய்துகொண்டே இருப்பார். அவர் ஒருபோதும் தம் கடமைகளைக் காலந் தவறிச் செய்த தில்லை. அவருக்குப் படிப்பதில் அளவற்ற ஆசை ஏற்பட்டிருந்தபடியால் அவர் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருப்பார். அவருக்கு ஒரு சமயம் தலை நோய் ஏற்பட்டபோது அவர் அந்நோயை ஓய்ந்திருந்து போக்கிக் கொள்வதற்குப் பதிலாக 'ஸ்காட்' என்பார் எழுதியதொரு கதையைப் படித்து நீக்கிக் கொண்ட தாக அவரே சொல்லி இருக்கிறார். அவர் பல விஷயங் களை எழுதிக்கொண்டே தம்மைக் காணவருவாருடன் மிகச் சுலபமாகச் சம்பாஷித்துக் கொண்டிருப்பார்.

டாக்டர் மில்லர் அவர்கள் காலை எட்டேமுக்கால் மணிக்குள் தம்மைக் காண வருகிறவர்களையும் தம் கடிதப் போக்கு வரத்துக்களையும் கவனித்துக்கொண்டு பிறகு ஒன்பதே முக்கால் மணிக்குச் சரியாகக் கல்லூரிக்குள் வந்திருப்பார். வந்ததும் அவர் தம் வருகையைப் பிள்ளைகள் எல்லாரும் அறியும்படியாகச் செய்வார். பிள்ளைகளிடத்தில் அவருக்கு விசேஷ அன்புண்டு. அவர்களும் அவரைக் கண்டு பயப்படாமல் அன்புடன் அவரைத் தொட்டுக் காலை வந்தனம் செய்வார்கள். பிள்ளைகள் இளம் வயது முதற்கொண்டே நற்குண நற்செய்கைகளில் ஈடுபட்டால்தான் அவர்கள் பிற்காலத்தில் நல்லவர்களா யிருப்பார்கள் என்பதை உணர்ந்திருந்த டாக்டர் மில்லர் துரையவர்கள் சிறுவர்களுக்கு எப்பொழுதும் நற்பழக்கங்களைக் கற்பித்து வருவார். அவர் பிள்ளைகளைக் கண்டால் உடனே அவர்களுக்குக் 'காலை வந்தனம்' செய்வார். இவ்வாறே அவர் அநேகம் நல்ல பழக்கங்களைப் பிள்ளைகளுக்கு உண்டாக்குவார். தாம் தமது வகுப்பில் பாடம் போதிக்காமல் இருக்கும் நேரங்களில் அவர் பள்ளிக்கூடத்தின் பல பாகங்களிலும் சென்று கல்லூரியின் நடைமுறைகளைக் கவனித்து வருவார்.

மில்லர் காலை ஒன்பதேமுக்கால் மணிக்குப் பள்ளிக்கூடம் சென்றவுடன் ஓர் இடத்தில் உட்கார்ந்து தம்மைக் காண வரும் பெற்றோர்களையும், மாணவர்களையும், மற்றவர்களையும் கண்டு சமாசாரங்களை விசாரித்துத் தகுந்த பதில் அளித்து அவர்களை அனுப்புவார். பிறகு அவர் மணி பத்து அடித்தவுடன் தம் கையில் வேத

புத்தகமாகிய 'பைபிலே' யும் வேறு ஒரு குறிப்புப் புத்த கத்தையும் எடுத்துக்கொண்டு தம் அறையைவிட்டுப் புறப்பட்டு 'அப்பர் ஸ்கூல் ஹாலில்' 'செகிண்டரி ஸ்கூல்' மாணவர்கள் ஒன்று கூடியுள்ள இடத்திற்குச் சென்று ஒவ்வொரு வகுப்பிலும் வந்திருக்கும் மாணவர் களின் தொகையைத் தம்கையிலுள்ள குறிப்புப் புத்தகத் தில் குறித்துக்கொண்டு பிறகு பைபிலேத் திறந்து, 'ஓ! கடவுளே! தங்களுடைய கடைக்கண் பார்வையின் ஒளியை எங்கள் மீது செலுத்துவீராக,' என்று பிரார்த் திப்பார். இப்பிரார்த்தனே முடிந்தவுடன் பிள்ளேகள் எல்லோரும் தங்கள் தங்களுடைய வகுப்புகளுக்குச் சென்று விடுவார்கள்.

பிறகு மில்லர் துரையவர்கள் கல்லூரி வகுப்புகள் இருக்கு மிடத்திற்குச் சென்று தாம் கவனிக்க வேண் டிய காரியங்கள் ஏதாவது இருந்தால் அவைகளேக் கவனித்து விட்டுப் பிறகு பகல் பன்னிரண்டு மணிக்கு மறுபடியும் 'ஸ்கூல் ஹா'லில் வந்து சேருவார். அவ ருக்குக் கூர்மையான நோக்கமும் ஆழ்ந்து அகன்ற விசாலமான எண்ணமும் உண்டு. தம்மிடத்தில் விசா ரணேக்காக அனுப்பப்படும் தவறு செய்த மாணவர்கள் விஷயத்தில் அவர் அதிக அக்கரை செலுத்துவது வழக்கம். அவர், நன்ருகப் படித்து முன்னுக்கு வரக் கூடியவன் என்று எந்த மாணவனே நினேக்கின்ருரோ அந்த மாணவனே, அவனுடைய அபிவிருத்தியை உத் தேசித்து, அவன் ஏதாவது தவறு செய்தால் நன்ருய்த் தண்டிப்பது வழக்கம். அவர் கல்லூரி வகுப்புகளுக்கு மாத்திரம் பாடம் போதிப்பதுடன்

நின்று விடாமல் 'அப்பர் ஸ்கூல்' வகுப்புகளிலும் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தார். வாரத்தில் ஒரு நாள் அவர் வகுப்புகளில் ஏதேனும் ஒன்றில் அமர்ந்து பாடம் கற்பிப்பார்.

மில்லர் தம் கையில் வைத்திருக்கும் குறிப்புப் புத்தகத்தில் தாம் கவனிக்க வேண்டிய வேலைகளைக் குறித்துக் குறிப்புகள் எழுதி வைத்திருப்பார். புதிதாகத் தமக்கு யாரேனும் சிநேகிதர்கள் ஏற்பட்டால் அவர்களைப் பற்றியும் அவர் தம் குறிப்புப் புஸ்தகத்தில் குறித்து வைத்துக் கொள்வார். தினந்தோறும் அவர் பகல் பன்னிரண்டு மணி முதல் ஒரு மணி வரையில் 'ஆபீஸ்' அறையில் இருந்து கொண்டு ஒவ்வொரு வகுப்பிலும் அன்றைய தினம் எத்தனைப் பிள்ளைகள் வந்தார்கள் என்னும் விஷயத்தையும், சம்பள இரசீதுகளையும், 'லீவ்' வேண்டுமென்று பிள்ளைகள் அல்லது அவர்கள் சார்பாகப் பெற்றோர்கள் எழுதி அனுப்பிய கடிதங்களையும், உபாத்தியாயர்கள் 'லீவ்' வேண்டுமென்று எழுதி அனுப்பிய கடிதங்களையும், குற்றஞ் செய்யும் பிள்ளைகளுக்குத் தண்டனை விதிக்கும் விஷயத்தையும் கவனித்து வருவார். அவர் தினந்தோறும் மாலையில் ஐந்து மணிக்குக் கல்லூரியை விட்டுப் புறப்பட்டு வெளியிற் செல்லுவார். இவ்வாறு அவர் வெளியிற் செல்லுமுன் தம்மைக் காண வந்திருக்கும் பெற்றோர்களையும், மற்றவர்களையும், பிள்ளைகளையும் கண்டு சம்பாஷிப்பார். பிறகு அவர் தம் இருப்பிடத்திற்குச் சென்று 'தேத்தண்ணீர்' பருகிவிட்டு வேறு வேலை இல்லாவிட்டால் படிக்கத் தொடங்குவார்.

அவர் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லும்போது இடை இடையே அநேகம் பழமொழிகளையும், நீதிகளையும், சிறு கதைகளையும் எடுத்துரைத்துத் தாம் சொல்லும் விஷயம் பிள்ளைகளின் மனத்தில் பசு மரத்து ஆணியைப்போலப் பதியும்படி செய்வார். அவர் பிள்ளைகளிடத்தில் விசேஷ அன்பு காட்டி அவர்களை மகிழ்விப்பார். பிள்ளைகளும் அவரை மிகவும் நேசித்துப் புகழ்வது வழக்கம். பெரும்பாலும் அவர் சிறுவர்களை அன்பினால் தம் வழிக்குக் கொண்டு வர முயற்சிப்பாரேயன்றித் துன்புறுத்தி ஒருபோதும் தம் வழிக்குக் கொண்டு வர நினைக்க மாட்டார். அவரிடம் படித்த மாணவர்கள் அனைவருடைய பெயரும் உருவமும் அவர் மனத்தில் நிலைத்து இருந்தன. அவர் தம் கையினாலேயே பிள்ளைகளுடைய பெயர்களை 'ரிஜிஸ்டரில்' கஷ்டத்தைக் கவனியாமல் எழுதி வருவது வழக்கம். பிள்ளைகள் பெரிய குற்றங்களைச் செய்யும்போது அவர் அவர்களைச் சும்மா விடாமல் நன்றாய்த் தண்டித்து அவர்கள் செய்த குற்றங்களை அவர்கள் உணரும்படி செய்வார். அவருக்குப் 'பைபி'ளின் ஒரு பகுதியாகிய சங்கீதத்தில் இருபத்து மூன்றாவது பகுதியினிடத்தில் விசேஷ ஆர்வம் உண்டு. அதனால் அவர் அந்தப் பகுதியை அடிக்கடி விரும்பிப் படித்து வருவார்.

## ஏழாம் அத்தியாயம்

### மில்லருடைய நற்குணங்கள்

மில்லர் தம்மால் கூடியவரையில் தம் வேலைகளைத் தாமே பிறருக்குக் கஷ்டங் கொடுக்காமல் செய்து கொள்ள வேண்டுமென்னும் கருத்து உள்ளவராவர். ஆகவே அவர் தமக்குக் களைப்பு ஏற்பட்டாலும் விசிறுவதாகிய சிறு வேலையைக் கூடத் தமக்காக ஒருவரையும் செய்யச் சொல்லுவதில்லை.

ஒரு முறை மில்லருக்கு உடம்பெல்லாம் தடித்துக் காய்ச்சல் கண்டது. சூடு 105 'டிக்கிரி' இருந்தது. அதைக் கேள்வியுற்ற ஸ்ரீமதி 'மெக்பெயில்' அம்மையார் என்பவரொருவர் அவரைப் பார்க்க வந்தார். அப்போது அவருக்குச் சூடு 103 டிக்கிரி இருந்தது. அதைப் பொருட்படுத்தாமல் அவர் பரீட்சை காகிதங்களைத் திருத்திக் கொண்டிருந்தார். அதைக் கண்ட ஸ்ரீமதி மெக்பெயில் அம்மையார் அவரை நோக்கி, 'இஃதென்ன! தாங்கள் இப்படியும் செய்யலாமா?' என்றார். அதைக் கேட்ட மில்லர் அந்த அம்மையாரை நோக்கி, 'ஒரு மனிதன் வேலை செய்யாமல் வேறென் செய்வது?' என்று கூறினார்.

மில்லர் துரை அவர்கள் தம் தகப்பனார் பெயரால் சென்னைச் சர்வ கலாசாலையில் பொற் பதக்கப் பரிசு ஒன்றை ஏற்படுத்தி அதை பீ. ஏ., பரீட்சையில் தத்துவ சாஸ்திரத்தில் கீர்த்தியுடன் தேறுகின்ற வித்தியார்த்திக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்.

இந்தியாவில் இராஜப் பிரதிநிதியாயிருந்த ‘இந்தியாவின் அப்பன்’ என்று நம்மனோரால் கொண்டாடப்படும் நற்குணம் வாய்ந்தவரான ‘லார்டு ரிப்பன்’ இந்திய மக்களின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார். அவர் சென்னைக்கு விஜயம் செய்தபோது சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரிக்குச் சென்று அதைப் பார்வையிட்டார். அவர் கல்விக்காகப் பாடுபட்டதையும் தம்முடைய கல்லூரிக்கு விஜயம் செய்ததையும் எண்ணி மில்லர் அவருடைய பெயரால் கிறிஸ்தவக் கல்லூரிக் கௌன்சில் மூலமாகச் சென்னைச் சர்வ கலாசாலையில் பொற் பதக்கப் பரிசு ஒன்றை ஏற்படுத்தி அதை ஆண்டுதோறும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களில் எவர் பி. ஏ., பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிக ‘மார்க்கு’ வாங்குகின்றாரோ அவருக்குக் கொடுக்கும்படி செய்தார்.

மில்லர் துரை அவர்கள் எப்போதும் தம்முடைய கடமை யாதென்பதைச் செவ்வையாய் உணர்ந்தவராவர். அவர் கஷ்டம் வந்தபோது மனமுடைந்தும் இலாபம் வந்தபோது மன மகிழ்ந்தும் வாழும் இயல்புள்ளவரல்லர். அவர் எப்போதும் ஒரே நிதானமாக இருக்கக் கூடியவராவர்.

இங்கிலாந்தின் சமஸ்தான கவியாயிருந்த ‘லார்டு டெனிசன்’ என்பார் இறந்த மறு தினம் மில்லர் துரையவர்களுடைய தாயார் இறந்துவிட்டார். ஆனாலும் மில்லர் லார்டு டெனிசன் இறந்தமையால் கல்வி உலகத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அறிவிக்கச் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஒரு கூட்டம் கூட்டினார். அப்

போது மில்லர் துரையவர்கள் தமக்குத் தம் தாயார் இறந்தமையினுல் ஏற்பட்ட துன்பத்தையும் கவனியாது லார்டு டெனிசன் மாணத்தினுல் ஏற்பட்ட நஷ்டத்தைக் குறித்து மிகவும் உருக்கமாகப் பேசினுர்.

இப்போது சென்னையில் அநேக குடும்பங்கள் நல்ல நிலைமையில் இருப்பதற்கு டாக்டர் மில்லர் துரை அவர்களே காரணராவர். அவர் தகுந்த சந்தர்ப்பத்தில் அநேகருக்கு உதவி புரிந்திருக்கிறுர். அவர்களுக்கு மில்லர் உதவி செய்திராவிட்டால் அவர்களால் அவர்கள் இப்போது அடைந்துள்ள உன்னத நிலையை ஒரு போதும் அடைய முடியாது. பலர் இப்போதும் டாக்டர் மில்லர் செய்த உபகாரத்தைப் பாராட்டி, ‘அந்த மகானுபாவன் ஏற்றி வைத்த விளக்குதான் இப் போதும் எரிந்து கொண்டிருக்கிறது,’ என்று கூறுகிறுர் கள். மில்லர் துரையவர்கள் எத்தனையோ வித்தியார்த்தி களுக்குத் தம் சொந்தச் சம்பளத்திலிருந்தே பள்ளிக் கூடச் சம்பளம் கொடுத்து உதவி இருக்கின்றுர். ஊக்கமுள்ள மாணவர்களுக்கு என்றும் அவர் பெரிதும் உதவி செய்வார். ‘பாத்திர மறிந்து பிச்சை இடு,’ என்னும் பழமொழியை அவர் அனுசரித்து வந்தார்.

ஒரு முறை பத்தாவது வகுப்பில் படித்துக்கொண் டிருந்த வித்தியார்த்தி ஒருவன் கலாசாலைக்கு நேரங் கழித்து வந்தான். அதைக் கண்ட மில்லர் துரை அவர் கள் அவன் அவ்வாறு வந்தமைக்குக் காரணம் என்ன வென்று கேட்டார். அதற்கு அந்த வித்தியார்த்தி தான் நேரம் சென்று வந்தமைக்குரிய காரணத்தை வகுப்பு முடிந்தவுடன் தெரிவிப்பதாகச் சொன்னுன்.

பிறகு வகுப்பு முடிந்தது. மில்லர் துரை அவனைத் தம் அறைக்கு அழைத்துக் கொண்டுபோய்க் காரணம் என்னவென்று கேட்டார். அப்போது அந்த மாண வன் தன் வீட்டில் அரிசி யில்லையென்றும் வேறு வீட் டிற்குச் சென்று அரிசி வாங்கி வந்து சமையல் செய்து சாப்பிட்டு வருவதற்கு நேரமாய் விட்டதென்றும் சொல்லி அழுதான். அவனுடைய ஏழ்மை நிலைக்கு இரங்கிய மில்லர் துரையவர்களும் கண்ணீர் விட்டுக் கலங்கினார்; பிறகு அவர் அந்த மாணவனுக்கு வேண் டிய உதவியைச் செய்தார். மாணவர்களே, நீங்கள் மில்லரின் அருங்குணத்தைக் கவனித்து அதைக் கருத்தில் வையுங்கள்.

ஒரு சமயம் சென்னை இராஜதானிக் கல்லூரியில் 'மிடில் ஸ்கூல் பரீட்சை' நடைபெற்றது. அப்பரீட் சைக்குக் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்தும் மாணவர்கள் அநேகர் சென்றனர். இவ்வாறு சென்ற மாணவர்களில் ஒருவன் பரீட்சையில் 'காபி' அடித்து விட்டான். அதை அந்தக் கல்லூரித் தலைமை ஆசிரியர் கண்டுபிடித்து அவனைப் பரீட்சையிலிருந்து நீக்கி வீட்டிற்கு அனுப்பி விட்டார். இந்தச் சமாசாரத்தைக் கேள்விப்பட்ட மில்லர் துரையவர்கள் அந்தப் பையனுடைய அறியாமையைக் குறித்தும் அவனால் கல்லூரிக்கு ஏற்பட்ட அகௌரவத் தைக் கருதியும் பெரிதும் துன்பப்பட்டார்.

**மில்லர் துரையவர்கள் பிறருக்கு வரும் நோயைக் கண்டு அந்நோய் தமக்கு வந்ததாகக் கருதி மனம் வருந் தும் சுபாவமுள்ளவர்.**

ஒரு சமயம் மில்லர் துரையவர்களுடைய அநு தாபத்தைப்பெற்றிருந்த மாணவன் ஒருவன் கல்லூரியை விட்டு நீங்கிய சில தினங்களுக்குப் பிறகு 'வாந்தி பேதி'யால் பீடிக்கப்பட்டான். அவன் கல்லூரியில் இருந்து நான்கு மைல் தூரத்தில் வசித்துக் கொண்டிருந் தான். அவன் வீட்டில் அவனைச் சரியாகக் கவனிக்கக் கூடியவர்கள் ஒருவரும் இல்லை யென்பதையும் சரி யாகக் கவனியா விட்டால் அவன் அந்த நோய்க்கு இரையாவது நிச்சயம் என்றும் மில்லர் தெரிந்து கொண்டார். ஆகவே அவர் அவனைச் சரியாகக் கவ னித்து அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய் வதற்குரிய ஏற்பாடுகளை உடனே செய்தார். அதோடு அவர் நின்று விடாமல் அந்த நோயாளியைக் காலை யிலும் மாலையிலும் அவன் இருந்த இடத்திற்குச் சென்று பார்த்து வந்தார். அது மட்டுமா? பள்ளிக் கூட நேரத்திலும் அவர் அந்த நோயாளி இருக்கும் இடத்திலிருந்து வரும் மாணவர்கள் மூலம் நோயாளி யின் சௌகரியத்தைப் பற்றி விசாரித்து வந்தார். அவர் தம் கையினாலேயே அந்த நோயாளிக்குப் பல முறைக் கர்ப்பூரத் தைலத்தைத் தேய்த்தார்! அதிக மென்ன? 'நோயாளிக்கான சௌகரியங்கள் யாவும் சரியாய் இருக்கின்றன' என்னும் திருப்தி ஏற்பட்ட பிறகே அவர் நோயாளியின் இருப்பிடத்தை விட்டுப் புறப்படுவார்.

ஒரு நாள் திடீரென்று அந்த நோயாளியின் தேக நிலை கவலைக்கிடமாயிற்று. அதனால் மில்லர் துரையவர் கள் அன்று இரவு முழுவதும் தூங்காமல் உலாவிக்

கொண்டும் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டும் இருந்தார். அடிக்கடி அவர் 'பைபிளை' எடுத்துப் படித்துக்கொண்டும் கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்துகொண்டும் இருந்தார். அவர் அன்று இரவு அடைந்த துன்பம் அளவு கடந்ததாகும்.

பிறகு இரண்டு வாரத்திற்குள் நாம் மேற் கூறிய நோயாளி குண மடைந்தான். அப்போது மில்லருக்கு உண்டான ஆனந்தத்திற்கோர் அளவே இல்லை.

டாக்டர் மில்லர் சென்னைக்கு முதன் முதலாக வந்தபோது அவரிடத்தில் ஒரு 'பட்லர்' வேலை செய்து கொண்டிருந்தார். அந்தப் பட்லருக்குத் தம் பணத்தி லிருந்து உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டு மென்று மில்லர் துரையவர்கள் இந்தியாவை விட்டுத் தம் சுவதேசம் செல்லுமுன் ஏற்பாடு செய்து வைத்துப் போனார்.

1885-ஆம் வருஷத்தில், டிசம்பர் மாதத்தில், கிறிஸ் மஸ் பண்டிகையின் போது, 'பீபில்ஸ் பார்க்'கில் நடை பெறும் வருடாந்த கொண்டாட்டத்தின்போது திடீ ரென்று ஒரு நாள் அங்கிருந்த கீற்றுக் கொட்டகையில் தீப்பற்றிக் கொண்டது. அதைக் கண்ட ஜனங்கள் உள்ளங்கலங்கிச் செய்வது இன்னதென்று தோன்றா மல் பைத்தியம் பிடித்தவர்களைப்போலப் பல பக்கங்களி லிருந்தும் தீயிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒருவர் மீது ஒருவர் வீழ்ந்துகொண்டு வாயிலை நோக்கித் தலைவிரி கோலமாய் ஓடினார்கள். அச்சந்தர்ப்பத்தில் மில்லர் துரை யவர்களும் அக்கூட்டத்தில் இருந்தார். அவர் மனங் கலங்காமல் தைரியமாய் இருந்துகொண்டு ஜனங்கள்

அநியாயமாய் ஓடி விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளாமல் இருப்பதற்கு வேண்டிய தைரிய வார்த்தைகளை எடுத்துக் கூறித் தம் வார்த்தைகளைக் கேட்ட ஜனங்களைக் காப்பாற்றித் தம்மருகிலேயே வைத்துக் கொண்டிருந்தார். பிறகு நெருப்பணைக்கும் இயந்திரம் வந்து நெருப்பை அணைத்து நெருப்பு உட்புறத்திலும் புகுந்து நாசம் செய்யாமல் காப்பாற்றியது. அதன் மேல் மில்லர் துரையவர்கள் தம்மால் கூடிய உதவிகளையெல்லாம் அல்லல் பட்டுக்கொண்டிருந்த ஜனங்களுக்குச் செய்துவிட்டுப் பிறகு தம் வண்டியில் ஏறிக் கொண்டு தெருத் தெருவாக அன்றிரவெல்லாம் சென்று தாம் 'பீபில்ஸ் பார்க்கில்' கண்ட மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்கள் இடையூறு ஒன்றுமின்றி வந்து வீடு சேர்ந்தார்களா என்று விசாரிக்கலானார். இத்தகைய அருங்குணம் எல்லோரிடத்திலும் அமைவது விசேஷமல்லவா?

## எட்டாம் அத்தியாயம்

### இந்தியர்களிடத்தில் மில்லர் காட்டிய அநுதாபம்

மில்லர் துரையவர்கள் இந்தியக் கிறிஸ்தவர்கள் அபிவிருத்தி விஷயத்தில் போதுமான சிரத்தை காட்டவில்லை யென்று அவர்மீது ஒரு சாரார் குறைகூறி வந்தனர். அந்தக் குறை ஆதாரமற்றது என்று பின் வரும் விஷயங்களால் தெரியவரும்.

## இந்தியர்களிடத்தில் மில்லர் காட்டிய அநுதாபம்

இந்தியக் கிறிஸ்துவ மாணவர்களுக்கென அவர் கிறிஸ்தவக் கல்லூரியின் கல்லூரி வகுப்புகளில் உபகாரச் சம்பளத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்து அதனால் அவர்கள் நன்மை யடையும்படி செய்தார். பின்னும் அவர் பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்ட 'கிறிஸ்டியன் ரெஸிடென்ஷியல் ஹைஸ்கூ'லுக்கு ஆயிரம் பவுன் நன்கொடை அளித்திருக்கிறார். இக்கல்விச்சாலை இந்தியக் கிறிஸ்தவர்களின் முன்னேற்றத்தைக் கருதியே ஏற்பட்டதாகும். இப்போது இக்கல்விச்சாலையானது வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள திருப்பத்தூரில் இருக்கின்றது.

இந்தியர்களைப் பற்றி எவரேனும் குறையாகவோ இழிவாகவோ சொல்லி விட்டால் அவர்களை மில்லர் துரையவர்கள் இலேசில் விடமாட்டார். டாக்டர் மில்லர் சேர்வராயன் மலையைச் சேர்ந்த ஏர்க்காடு என்னும் இடத்திலுள்ள 'எச்சின் காடு' என்னுமிடத்தில் கோடைகால வாசத்திற்காகப் 'பங்களா' ஒன்றைக் கட்டியிருந்தார். அந்தப் பங்களாவை அடுத்துக் கோடைகாலத்தில் தம்முடன் வசிக்கப் பிரியப்படும் மாணவர்களின் உபயோகத்துக்கென ஒரு விடுதியையும் கட்டியிருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் கோடைகால விடுமுறையின் போது டாக்டர் மில்லர் ஏர்க்காட்டிலுள்ள தமது பங்களாவில் தங்கி யிருந்தார். அப்போது ஐரோப்பியத் தோட்டக்காரர் ஒருவர் அநேக கனவான்கள் கூடியுள்ள ஒரு கூட்டத்தில் 'இந்திய தேசிய மகா சபை' என்னும்படியான 'இந்தியன் நேஷனல் காங்கிர'ஸையும்

இந்தியர்கள் பெருத்த உத்தியோகங்களுக்கு அவாவி நிற்பதைக் குறித்தும் இழிவாகப் பேசினர். உடனே டாக்டர் மில்லர், 'அநேக தலைமுறைகளாக ஆங்கிலேயர்கள் செய்து வந்த வேலைகளையே இந்தியர்கள் இப்போது செய்து வர ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களின் கடமை என்னவென்றால் இந்தியர்கள் கொண்டுள்ள முயற்சியில் அவர்களுக்கு அதைரியத்தை உண்டாக்காமல் தைரியத்தை உண்டாக்கி அவர்கள் தங்களுடைய தேசத்தைத் தாங்களே ஆளுமாறு அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியதேயாம்,' என்றார். இதைக் கேட்டவுடன் அந்தக் கூட்டத்தில் இருந்த அறிவாளிகள் மில்லருடைய கருத்து முறையானவையாகுமென்று தீர்மானித்து அவர் கருத்துப்படியே நடந்து வந்தார்கள்.

டாக்டர் மில்லரின் எதிரில் ஒருவரும் இந்தியர்களை இழிவாகப் பேசத் துணியமாட்டார்கள். டாக்டர் மில்லர் ஆண்டுதோறும் கோடைகால விடுமுறையின் போது அநேக மாணவர்களைத் தம்மோடு ஏர்க்காட்டுக்கு அழைத்துக்கொண்டு போவது வழக்கம். இதைக் காணும் அங்குள்ள ஐரோப்பியர்களிற் சிலர், 'டாக்டர் மில்லர் விரும்பத்தகாதவர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு வந்து மலையின் மீது நிரப்பி விடுகிறார்,' என்று மில்லரைக் காணாதவிடத்தில் சொல்வது வழக்கம். ஆனால் ஒருவராவது அவர் முன்னால் இவ்வாறு சொல்லத் துணிவது இல்லை. டாக்டர் மில்லருக்கு இவ்வாறு அவர்கள் நினைப்பது தெரியும். அதற்காக அவர் மாணவர்களைத் தம்முடன் அழைத்துக்

கொண்டு செல்லாமல் இருப்பதும் இல்லை. எப்பொழுதும் அவருக்கு மாணவர்கள் இடையில் இருப்பதே பிரிய மான காரியமாகும். சில சமயங்களில் அவர் தம் மாண வர்களை அழைத்துக்கொண்டு அவர்களைப்போலவே தாமும் கையில் நீண்டதொரு கழியுடன் அவர்களோடு பேசிக்கொண்டு உலாவச் செல்வார்.

டாக்டர் மில்லர் உள்ளொன்று வைத்துப் புறம் பொன்று பேசக் கூடியவர் அல்லர். ஒரு சந்தர்ப்பத் தில் அவர் ஏர்க்காட்டிலுள்ள தம்முடைய பங்களாவில் இருக்கையில் சந்திர கிரகணம் ஏற்பட்டது. சந்திர கிரகணம் விடும் சமயத்தில் அவரும் மாணவன் ஒரு வனும் அந்த மலையின் அழகைக் கவனித்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது அந்த மாணவன் அவரைப் பார்த்து, 'ஐயா! இது எங்களுடைய நாடு; ஆயினும் இத்தகைய அழகைக் கண்டு களிக்க நாங்கள் இதுவரை யில் இவ்விடத்திற்கு வந்தது கிடையாது,' என்றான். அதைக் கேட்ட மில்லர் துரையவர்கள் சிறிது நேரஞ் சும்மா இருந்து விட்டுப் பிறகு அம்மாணவனைப் பார்த்து, 'மலைகளுக்குச் செல்வது என்ற வழக்கம் ஐரோப்பாவிலும் சமீப காலத்தில்தான் ஏற்பட்டது. "வொர்ட்ஸ் வொர்த்" என்ற கவியினால்தான் இவ் வழக்கம் ஏற்பட்டது. என்னுடைய சொந்த நாட்டி லுள்ள ஒரு தனவந்தர் தாம் வசிக்கும் இடத்திலிருந்து சுற்றளவில் பத்து மைல் தூரத்திற்கப்பால் சென்றதே கிடையாது,' என்று சொன்னார்.

இந்தியா சம்பந்தப்பட்ட 'மாண்டேகு செம்ஸ் போர்ட்' சீர்திருத்தத்தைக் குறித்து, 'லண்டன் ஸ்பெக்

டேட்டர்' பத்திரிகை எழுதுகையில் கல்வி யறிவு வாய்ந்த இந்தியர்களை ஒருவாறு தூஷித்து எழுதியது. அதைக் கண்ட மில்லர் அவ்விஷயத்தைக் கண்டித்து அந்தப் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதினர். பிறகு அப் பத்திரிகாசிரியர் தாம் இந்தியர்களைத் தூஷிக்க வேண்டும் என்னும் கருத்துக்கொண்டு அவ்வாறு எழுத வில்லையென்றும் தம்முடைய கருத்து வேருகுமென்றும் கூறித் தப்பித்துக் கொண்டார்.

டாக்டர் மில்லர் ஜாதி மதம் நிறம் முதலான வித்தியாசங்களைக் கவனியாமல் பொதுவாக எதையும் செய்யக் கூடியவர் ஆவர். ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியக் கனவான் ஒருவர், ஓர் ஐரோப்பியரும் ஒரு சுதேசியும் ஒரு வழக்கில் வாதி பிரதிவாதியாக இருக்கையில், அவ்வழக்கைக் குறித்துச் சட்ட ஞானத்தில் மிகவும் கெட்டிக்காரர் என்று போற்றப்பட்டு வந்த சர். வி. பாஷ்யம் அய்யங்கார் இடத்தில் பேசி அவரை அந்த வழக்கைச் சுதேசியின் சார்பாக நடத்தும்படி சொல்வதற்கு வில்லியம் மில்லரிடத்திலிருந்து சிபாரிசுக் கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டுபோய் அதைப் பாஷியம் ஐயங்காரிடத்தில் கொடுத்தார். அக் கடிதத்தைப் படித்துப் பார்த்த சர். வி. பாஷியம் ஐயங்கார் அந்தக் கனவானை நோக்கித் தாம் அவ்வழக்கை எடுத்துக் கொள்ளுவதாகக் கூறினர். அதன்மேல் அந்தக் கனவான் ஐயங்கார் அவர்களை நோக்கி, 'வழக்கைத் தாங்கள் நடத்துவதற்குத் தங்களுக்குரிய கட்டணம் எவ்வளவு?' என்று கேட்டார். அவர் இவ்வாறு கேட்கவே ஐயங்கார் அவர்கள், 'எதிர் கட்சியைச்

சேர்ந்த ஐரோப்பியருடைய இனத்தவராய் இருந்தும் டாக்டர் மில்லர் நியாயப்படி நடக்கவேண்டுமென்னும் கருத்துக்கொண்டு தங்களை ஆதரித்து இந்தக் கடிதத்தை எனக்கு எழுதி அனுப்பியதாலும் தாங்கள் என் நாட்டினரா யிருப்பதாலும் நான் தங்களிடத்தில் பணம் வாங்கிக் கொள்ளாமல் நியாயத்தை நிலை நிறுத்த வழக்கை நடத்துகிறேன்,' என்றார். இந்த விஷயத்திலிருந்து டாக்டர் மில்லர் தம் மனிதரென்றும் பிறர் மனிதரென்றும் வித்தியாசம் பாராட்டுவதில்லை என்று தெரிகிறது அல்லவா ?

## ஒன்பதாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும் சென்னைச் சர்வகலாசாலையும்

டாக்டர் மில்லர் அறிவாற்றல்களில் மிகவும் சிறந்தவர் என்று கூறினோமல்லவா ? அத்தகைய ஒரு பெரியார் சர்வ கலாசாலையுடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் இருக்கக் கூடுமோ ?

அநேக வருஷகாலம் அவர் சென்னை சர்வகலாசாலையின் பரீட்சாதிகாரியாய் இருந்தார். சிறப்பாக அவர் சரித்திரம் ஆங்கிலம் ஆகிய இவைகளுக்கே பெரும்பாலும் பரீட்சாதிகாரியாய் இருந்தார். அவருக்குத் தாமே எப்பொழுதும் பரீட்சாதிகாரியாய் இருக்க வேண்டுமென்னும் எண்ணம் கிடையாது. பரீட்சாதிகாரி பதவிக்கு யோக்கியதையுடைய பலருக்கும் அவ்வுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்பது அவருடைய கருத்தாகும். ஆகவே, அவர் பலமுறை அந்தப் பதவி

தமக்கு அளிக்கப்பட்டபோது அதை மறுத்து இருக்கின்றூர்.

1867-ஆம் வருஷத்தில் டாக்டர் மில்லர் சென்னைச் சர்வ கலாசாலையின் 'பெல்லோ' என்னும்படியான ஓர் அங்கத்தினராஞர். அப்போது சென்னைக் கவர்னரா யிருந்த 'நேப்பியர்' பிரபுக்கு டாக்டர் மில்லர் விஷயத்தில் விசேஷ மதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே அவர், 1871-ஆம் வருஷத்தில், டாக்டர் மில்லரைச் சென்னைச் சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவின் போது பட்டதாரிகளுக்கு 'கான்வகேஷன் அட்ரஸ்' என்னும்படியான உபந்நியாசத்தைச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அவர் வேண்டுகோளுக்கு இணங்கி டாக்டர் மில்லர் அர்த்தபுஷ்டியையும் ஊக்கத்திற்குரிய விஷயங்களையும் தன்னகத்துக் கொண்ட அரியதோர் உபந்நியாசத்தைப் பட்டதாரிகளுக்குச் செய்து முடித்தார்.

டாக்டர் மில்லர் முப்பது வருட காலம் சென்னைச் சர்வ கலாசாலை 'சிண்டிகேட்'டில் ஓர் அங்கத்தினராய் இருந்தார். ஒரு மனிதனுக்கு முதுகெலும்பு எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமாக டாக்டர் மில்லர் 'சிண்டிகேட்'டில் இருந்தார் என்று பெங்களூர் 'செண்டிரல்' கல்லூரியைச் சேர்ந்த மிஸ்டர் 'குக்' (Mr. Cook) என்பார் கூறியிருக்கிறூர். மில்லருடைய சகாக்கள் மில்லருடைய உழைப்பைப்பற்றி எப்போதும் மனமாரப் புகழுவது வழக்கம். மில்லர் சென்னைச் சர்வ கலா சாலையார் ஏற்படுத்திய பல 'கமிட்டி'களில் அங்கம் வகித்துத் திறமையாகக் காரியங்களைச் செய்து

வந்தார். ஆங்கிலம் சரித்திரம் ஆகிய இவ்விரு பரீட்சாதிகாரக் குழுவினரின் தலைவராகப் பல ஆண்டுகள் இருந்தார். 'பப்ளிக் காம்பிடிடிவ் எக்ஸாமினேஷன்ஸ்' என்னும்படியான போட்டிப் பரீட்சைகளை நடத்தும் விஷயத்தில் சென்னை அரசாங்கத்தாரும் மைசூர் அரசாங்கத்தாரும் டாக்டர் மில்லருடைய ஆலோசனைகளைப் பலமுறை நாடியது உண்டு. மறுபடியும் 1894-ஆம் வருஷத்தில் டாக்டர் மில்லர் சென்னைச் சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு உபந்நியசிக்கும் பெருமையைப் பெற்றார். இந்த உபந்நியாசத்தில் அவர் மாணவர்களுக்கு ஒழுக்கத்தின் அவசியத்தைத் தெளிவாய் எடுத்துக் கூறி இந்தியாவின் பிற்கால வாழ்க்கை கீர்த்தி வாய்ந்ததா யிருக்குமென்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

1901-ஆம் வருஷத்தில் டாக்டர் மில்லர் சென்னைச் சர்வகலா சாலையின் 'வைஸ்-சான்சலர்' பதவியில் நியமிக்கப்பட்டார். இவருக்கு முன் உத்தியோகப் பற்றற்ற ஒருவரும் அப்பதவிக்கு நியமிக்கப்படவில்லை. ஆகவே உத்தியோகப் பற்றற்ற கனவான்களில் முதல் முதலாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர் நமது டாக்டர் மில்லரேயாவர். பின்னர் மில்லர் சென்னைச் சர்வகலாசாலையின் பிரதிநிதியாகச் சென்னைச் சட்டசபையில் ஓர் அங்கம் பெற்றார். 'சிண்டிகேட்' சபையின் நடைமுறைகளில் அவர் கலந்து கொள்ளாத நாளே கிடையாது. அவர் தம் வாக்கு வன்மையினால் தம் கருத்துகளை மற்ற அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய வல்லவராவர்.

# பத்தாம் அத்தியாயம்

## டாக்டர் மில்லரும் கல்வி சம்பந்தமான சீர் திருத்தங்களும்

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவுக்கு 1854-ஆம் வருஷத்தில் அனுப்பிய 'ஹாலிபாக்ஸ் டெஸ்பாச்' என்னும் இராஜ விளம்பரத்தில், 'நாளடைவில் கல்வி சம்பந்தமான ஏற்பாடுகளை யெல்லாம் இந்தியர்கள் வசமே ஒப்புவிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தாரின் நோக்கமாகும். அரசாங்கக் கல்லூரிகள், கல்வி எவ்வாறு போதிக்கப்படவேண்டும் என்பன போன்ற இன்னும் பல விஷயங்களை இந்தியர்களுக்குக் காண்பித்து அவர்களுக்கு உதவி செய்யவே நியமிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன,' என்று கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும் மில்லர் காலத்தில் சென்னை அரசாங்கத்தினர் அவ் விளம்பரத்தில் கண்ட விஷயங்களுக்கு மாருக நடந்து வருவாராயினர். ஆகவே, சிறப்பாகக் கிறிஸ்தவக் கல்லூரியும் பொதுவாக மற்ற அரசாங்க உதவி பெற்ற பாடசாலைகளும் மிகுந்த கஷ்டத்தை அடைந்தன. ஆகவே டாக்டர் மில்லர் அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிக்கூடங்கள் விஷயமாக அரசாங்கத்தாரோடு போராட வேண்டியவரானர்.

இங்கிலாந்து தேசத்திலும் ஒரு சிலர் ஏற்பட்டு டாக்டர் மில்லர் கட்சியை ஆதரித்தனர்.

இவற்றை யெல்லாம் கண்ட அப்போதைய இராஜப் பிரதிநிதியாகிய லார்டு ரிப்பன் 1882-ஆம் வருஷத்தில்

இந்தியாவின் கல்வி நிலைமையைப் பற்றி ஆராய்ந்து ஓர் அறிக்கையைத் தயார் செய்வதற்காக ஒரு 'கமிஷனை' நியமித்தார். இக்கமிஷனின் தலைவர் 'சர் வில்லியம் ஹண்டர்' என்பவர் ஆவர். அவர் கல்வி சம்பந்தமான விஷயங்களில் மிகவும் நிபுணர். இக் கமிஷனில் டாக்டர் மில்லரும் ஓர் அங்கத்தினராய் நியமிக்கப்பட்டார். இக்கமிஷனில் டாக்டர் மில்லர் ஸ்தானம் வகித்து அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிக்கூடங்களுக்குப் பெருத்த நன்மை ஏற்படும்படி வேலைகளைப் பட்சபாதமின்றிச் செய்யலானார். அவர், 'இதுதான் தக்க சமயம்' என்று தாம் இதுவரையில் கருதிய விஷயங்களுக்கெல்லாம் ஆதரவு தேடிக் கொள்ளாமல் முறையான வழியிலேயே பாடுபட்டு வந்தார். டாக்டர் மில்லர் தம்முடைய வரம்புக்கு உட்பட்டுக் காரியங்களைச் செய்துகொண்டு வந்தபடியால் அவர் கமிஷனில் அதிக செல்வாக்குடன் விளங்கினார்.

கமிஷனில் அங்கம் வகித்து டாக்டர் மில்லர் செய்த சேவைகளைப் பாராட்டிக் 'கமிஷன் பிரஸிடெண்டு'ம் மற்ற அங்கத்தினர்களும் பேசி இருக்கிறார்கள்.

நாம் மேற்கூறிய கமிஷனைச் சேர்ந்த அங்கத்தினர்கள் தங்கள் அறிக்கையைத் தயார் செய்வதற்காக வேறு ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்று தீர்மானித்தபோது புதிய கமிட்டியில் அங்கம் வகிக்க டாக்டர் மில்லரையே முதல் முதலாகத் தேர்ந்தெடுத்தார்கள். இதனால் அந்தக் கமிஷன் அங்கத்தினர்கள் டாக்டர் மில்லரிடத்தில் மிகவும் கௌரவம் வைத்திருந்தனர் என்று விளங்குகிறதல்லவா? அந்த அறிக்கையில்

பெரும் பகுதியான பாகத்தைத் தயாரிக்கும் வேலை டாக்டர் மில்லருக்குக் கொடுக்கப்பட்டது. ஆயினும் அவர் தமக்கிடப்பட்ட வேலையை மற்ற அங்கத்தினர்களைக் காட்டிலும் சீக்கிரத்தில் முடித்து விட்டுச் சென்னைக்குத் திரும்பி விட்டார்.

டாக்டர் மில்லர் மேற்கூறிய கமிஷனில் செய்த வேலையைப் பற்றிச் சிம்லாவாசியான ஒருவர் பின் வருமாறு கூறியுள்ளார் :

'கல்கத்தாவிலும் இங்கும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த பாதிரியார் மில்லர் துரையவர்கள் மெச்சத்தக்க விதமாகக் காரியங்களைச் செய்தார். அவருடைய திறமையையும் அவருடைய செல்வாக்கையும் அறிந்தவர்கள் அவர் இத்தகைய பெருத்த காரியத்தைச் செய்து முடிப்பார் என்றே நம்பி யிருந்தார்கள். அதற்கேற்பத் தமது அபிப்பிராயத்திற்கு விரோதமான அபிப்பிராயம் கொண்ட அங்கத்தினர்கள் உள்பட மற்ற எல்லா அங்கத்தினர்களாலும் கமிஷன் தலைவராலும் மில்லர் பாராட்டப்பட்டார்.'

இன்னும் கமிஷனில் ஓர் அங்கத்தினரா யிருந்த 'ஐ. சி. எஸ்.' உத்தியோகஸ்தர் ஒருவரும் டாக்டர் மில்லருடைய வேலைகளைக் குறித்துப் பின் வருமாறு சொல்லுகிறார் :

'கமிஷன் அங்கத்தினர்களுக்குள் நடந்த வாக்குவாதங்களில் டாக்டர் மில்லருக்கேற்பட்டிருந்த செல்வாக்கைக் கண்டு நான் அதிசயமடைந்தேன். அங்கத்தினர்களுக்குள் வாக்குவாதம் நடை பெறும்போது

அபிப்பிராய பேதம் காரணமாய் மனவருத்தம் உண்டாகக் கூடிய சமயங்களிலெல்லாம் டாக்டர் மில்லர் கூறும் ஆலோசனை மனவருத்தத்திற்கு இடமில்லாமற் செய்துவிடும்.'

இக்கமிஷன் நடை முறை விஷயத்திலும் அங்கத்தினர்கள் விஷயத்திலும் இராஜப்பிரதிநிதியாகிய லார்டு ரிப்பன் அதிக அன்பும் ஆதரவும் காட்டியமை மெச்சத்தக்கதாம்.

மில்லர் எல்லாப் பள்ளிக்கூடங்களும், பள்ளிக்கூடத்தில் ஒழுங்கு அமைதி இவை போன்ற விஷயங்களை நிலைநிறுத்தும் விஷயத்தில், பொதுவான ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்று கருதி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்து வந்தார். அவருடைய உழைப்பின் பயனாகச் சென்னை அரசாங்கத்தினர் 'சென்னை கல்வி இலாகா விதிகள்' என்ற சில விதிகளைத் தயாரித்து அவைகளைப் பள்ளிக்கூடத்திற்குப் பண உதவி செய்ய ஏற்படுத்தப்பட்ட விதிகளோடு சேர்த்து விட்டார்கள்.

கல்லூரிகள் சர்வ கலாசாலையுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு வேலைகளைச் செய்வதற்காகச் சில விதிகளைச் சர்வ கலாசாலையார் ஏற்படுத்தியதற்கு மில்லர் மூலகாரணராவர். முதலில் இவ்விதிகள் ஏற்பட்டமைக்காகச் சில பள்ளிக்கூடத் தலைவர்கள் டாக்டர் மில்லரை வெறுத்தார்களானாலும் நாள் செல்லச் செல்ல அவர்கள் அவ்விதிகளின் அத்தியாவசியத்தை உணர்ந்து டாக்டரைப் பாராட்டுவாராயினர். டாக்டர் மில்லர்

தம் கடமையை நிறைவேற்றும் விஷயத்தில் பிறருடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் கவனிக்கமாட்டார். தம் மனசாட்கிக்கு முறை என்று பட்டதை அவர் செய்து முடிப்பார். இதனால்தான் அவரை மாணவர்கள் பெரிதும் போற்றினர்கள்.

## பதினொன்றாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும், கல்லூரி போஜனவிடுதிகளும், பிறவும்

டாக்டர் மில்லர் தம்முடைய இடையரு உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் முன்னுக்குக் கொண்டுவந்த கிறிஸ்தவக் கல்லூரியின் பெருமை தென்னிந்தியா முழுவதும் பரவிற்று. ஆகவே தென்னிந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்கும் நிமித்தம் சென்னையம் பதியிலுள்ள கிறிஸ்தவக் கல்லூரிக்கு அனுப்பி வந்தார்கள். இப்பிள்ளைகளில் பலர் 'ஹோட்டல்'களில் உண்டுவந்தார்கள். அதனால் அவர்களுடைய தேகநிலை சரியானதாயில்லை. பின்னும் அவர்களுடைய ஒழுக்கங்களைக் கவனித்து அவர்கள் கெட்ட வழிகளில் ஈடுபட்டுக் காலத்தை வீணே கழிக்கின்றபோது அவர்களை அடக்கி அவர்களுக்கு நற்புத்தி புகட்டுவாரும் இலராயினர். இதையெல்லாம் உத்தேசித்து டாக்டர் மில்லர் கல்லூரியைச் சேர்ந்தாற்போல மாணவர்களுக்கென்று போஜன சாலையும் தங்குமிடமும்

ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினர். இவ்வாறு எண்ணியவர் சும்மா இராமல் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்திருந்தார்.

டாக்டர் மில்லர் 1882-ஆம் வருஷத்தில் கல்லூரியை அடுத்தாற்போல இருந்த ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் பிராமண மாணவர்களுக்கென்று ஒரு போஜனசாலையை (Hostel) ஏற்படுத்தினர். அப்போஜன சாலை நன்றாய் நடைபெற்றது. அதைக்கண்ட டாக்டர் மில்லர் 1884-ஆம் வருஷத்தில் தம் சொந்தச் செலவிலேயே தம்புச் செட்டி தெருவில் காலி நிலத்தை விலைக்கு வாங்கி அதில் போஜன சாலையும் தங்குமிடமும் அமைத்தார். அந்தப் போஜன விடுதிச் சாலைக்கு 'சென்னை மாணவர் விடுதி' என்னும் பெயர் இட்டார்கள். இவ்வாறாக டாக்டர் மில்லர் அவர்கள் ஒரு விடுதிச் சாலையை ஏற்படுத்தி அதன் மூலமாக இந்திய மாணவர்களைத் தங்களுடைய விஷயங்களைப் பெரியவர்களுடைய மேற்பார்வையில் தாங்களே கவனித்துக் கொள்ளும் விஷயத்தில் பயிற்சி அடையச் செய்தார். இவ்வாறு அவர் செய்வதற்கு முன் தென்னிந்தியாவில் இத்தகைய விடுதிச்சாலை ஒன்றுமில்லை. இப்போது தென்னிந்தியாவின் பல பாகங்களிலும் இத்தகைய விடுதிச் சாலைகள் பல ஏற்பட்டிருக்கின்றன. முதலில் இவ்விடுதிச்சாலைகளின் அவசியத்தை உணர்ந்து அவைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தவர் டாக்டர் மில்லரேயாவர். இந்தச் சந்தர்ப்பத்தில் பண்டைக்கால இந்தியாவில் இத்தகைய விடுதிச்சாலைகள் இருந்தன வென்பதும் அவைகளுக்குக் குருகுலவாசம் என்னும்

பெயர் ஏற்பட்டிருந்தன வென்பதும் கவனிக்கத்தக் கவையாம்.

டாக்டர் மில்லர் பள்ளிக்கூட வேலைகள் முடிந்த வுடன் மாலைநேரத்தில் கையில் ஒரு தடியைப் பிடித்துக் கொண்டு இவ்விடுதிச் சாலைக்குப்போய்ப் பார்வையிடு வார்; மாணவர்களுடன் கலந்து அளவளாவிப் பேசு வார்; அவர்கள் ஏதேனும் குறை கூறினால் அக்குறை களைக் கேட்பார்; அவைகளை நீக்க என்ன ஏற்பாடு செய்யலாம் என்பதைக் குறித்து மாணவர்களுடன் சம்பாஷிப்பார்; பிறகு அவர்களுக்கு நற்புத்தி கூறித் தம் இருப்பிடத்திற்குப் போவார்.

டாக்டர் மில்லர் இந்தியக் கிறிஸ்துவ மாணவர் களைக் கொஞ்சமும் மறந்துவிடவில்லை. அவர்களுக் கென அவர் தம் சொந்தச் செலவில், 'பென் ஹாஸ்டல்' என்ற ஒரு விடுதிச் சாலையைக் கட்டிக் கொடுத்தார்.

நாம் மேற்கூறிய இரண்டு விடுதிச் சாலைகளும் அநேக ஆண்டுகள் வரையில் டாக்டர் மில்லருடைய சொந்தச் சொத்துக்களாவே யிருந்துவந்தன. பிறகு அவைகளிரண்டும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத் தில், அரசாங்கத்தாரின் உதவியினால், 'கிறிஸ்டியன் காலேஜ் கௌன்சிலர்' களால் கல்லூரிக்குச் சொந்த மாக வாங்கப்பட்டன.

டாக்டர் மில்லர் பிராமணர் அல்லாத மாணவர் களுக்காகவும் ஒரு விடுதிச் சாலையைத் தனியே ஏற் படுத்த முயன்றார். ஆனாலும் பிராமணர் அல்லாத (Non-brahmin) மாணவர்களுக்கிடையில் ஏற்பட்

டிருந்த அபிப்பிராய பேதம் காரணமாய் அவரால் கூடிய விரைவில் அவ்வாறு ஒரு விடுதிச் சாலையை ஏற்படுத்த முடியவில்லை. எனினும் டாக்டர் மில்லர் 1895-ஆம் வருஷத்தில் பிராமணரல்லாத மாணவர்களுக்குக்கென்று ஒரு விடுதிச் சாலையை ஏற்படுத்தி அதற்கு 'இரண்டாவது மாணவர் விடுதி' என்னும் பெயரை இட்டார். இவ்விடுதி கட்டுவதற்கு உதவியவர்கள் புண்ணிய சீலர்களான இராமநாதபுரத்து அரசரும் அப்பாய் நாயுடுகாரு அவர்களுமேயாவர்.

டாக்டர் மில்லர் அரசாங்கத்தாரிடமிருந்து உதவி பெற்று 'கெய்த்னஸ் ஹால்' என்னும் பெயரைக் கொண்ட ஒரு விடுதியைக்கட்டி அதைக் கல்லூரிக்குத் தானம் செய்துவிட்டார்.

டாக்டர் மில்லர் 1863-ஆம் வருஷத்தில் கல்லூரிக்கென்று புத்தக நிலயம் (Library) ஒன்றை ஏற்படுத்தி அதை நாளடைவில் விருத்தி செய்துகொண்டுவந்தார்.

மாணவர்கள் பேசுவதிலும் எழுதுவதிலும் கெட்டிக்காரர்களா யிருக்கவேண்டு மென்னும் கருத்துக் கொண்டு மில்லர் 1877-ஆம் வருஷத்தில், 'மாணவர் விவாத சங்கம்' என்னும் பெயருடன் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினர். அந்தச் சங்கத்தைச் சேர்ந்த இன்னும் அநேக சங்கங்களும் இருக்கின்றன.

மாணவர்களுக்குப் படிப்பு எவ்வளவு அவசியமானதோ விளையாட்டும் அவ்வளவு அவசியமானது என்று உணர்ந்த டாக்டர் மில்லர் விளையாட்டுப் பயிற்சி

சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதில் மாணவர்கள் சேர்ந்து திடகாத்திரர்களா யிருக்கச்செய்தார்.

டாக்டர் மில்லர் நாம் முன்னே கூறிய 'மாணவர் விவாத சங்க'த்திற்கென 'பென் ஹாஸ்ட'லுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய அறையைக் கொடுத்துத் தமக்கு அச் சங்க அபிவிருத்தி விஷயத்திலுள்ள அக்கரையைக் காட்டியுள்ளார். அந்தச் சங்கத்தில் பேசும் மாணவர்கள் பயப்படாமல் எவ்விஷயத்திலும் தங்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துக் கூறலாம் என்று மில்லர் தெரிவித்திருந்தார். ஒரு நாள் அந்தச் சங்கத்தில், 'பாதிரிகள் கல்வி அபிவிருத்திக்காகப் படும்பாடு' என்பதைக் குறித்து ஓர் உபந்நியாசம் நடைபெற்றது. அது சமயம் டாக்டர் மில்லர் அவைத்தலைமை வகித்திருந்தார். அப்போது பேசிய மாணவர்களில் ஒருவர், 'பாதிரிகள் பள்ளிக்கூடங்களை இந்தத் தேசத்து மக்களிடத்தில் ஒப்படைத்து விட்டுத் தங்களுக் குண்டானவைகளைச் சுருட்டி எடுத்துக்கொண்டு சென்னைத் துறைமுகத்தை விட்டுச் செல்லும் அடுத்த கப்பலிலேயே தங்களுடைய சுதேசம் சென்றுவிடவேண்டும்,' என்று கூறினார். டாக்டர் மில்லர் தம்முடைய முடிவுரையில், "இந்தியாவிலுள்ள மக்கள் தங்கள் கல்வி அபிவிருத்திக்காகத் தாங்களே பாடுபட முன்வருவார்களானால் அதைக் காட்டிலும் கிறிஸ்தவப் பாதிரிமார்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கக்கூடிய விஷயம் வேறொன்றுமில்லை,' என்று சந்தோஷத்துடன் கூறினார்.

டாக்டர் மில்லருடைய பெரு முயற்சியினால், கிறிஸ்தவக் கல்லூரியில் பத்திரிகை ஒன்றும் ஆரம்ப

மாயிற்று. மில்லருடைய பெருமுயற்சியினுல் அநேக மாணவர்களுக்கு உபகாரச்சம்பள ஏற்பாடுகளும் நடைபெற்றன.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும் பொதுக்காரியங்களும்

டாக்டர் மில்லர் கல்வி சம்பந்தமான விஷயங்களுடன் நின்றுவிடாமல் அரசியல் விஷயங்களிலும் பொதுஜன நன்மைக்கான விஷயங்களிலும் சம்பந்தப்பட்டு உழைக்கலானுர்.

அவர் பல வருடகாலம் சென்னை நகர பரிபாலன சங்கத்தின் அங்கத்தினராயிருந்து பல நல்ல வேலைகளைச் செய்திருக்கிறுர். 'காஸ்மாபாலிட்டன் கிளப்' என்னும் சங்கத்தைத் ஸ்தாபித்த அங்கத்தினர்களில் மில்லரும் ஒருவர் ஆவர். மில்லர் சம்பந்தப்பட்ட எந்தக் கூட்டத்திற்கும் விசேஷ மதிப்புண்டு. லண்டனில் 'லார்டு' சபையில் நடந்த விவாதத்தின்போது மில்லரைப்பற்றிக் கூற வேண்டிய சந்தர்ப்பம் வந்தபோது ஓர் அங்கத்தினர் அவரை, 'தென்னிந்தியாவில் பிரபலம்வாய்ந்த உபாத்தியாயர்,' என்று அடைமொழி கொடுத்துக் கூறியுள்ளார்.

'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' முன்னிலையில் சாட்சியம் கொடுத்தவர்களில் டாக்டர் மில்லரும் ஒருவர் ஆவர். அவர் தமது சாட்சியத்தின்போது பல விஷயங்களைக் குறித்துப் பேசினுர். அவர் கூறிய விஷயங்கள்

கமிஷன் அங்கத்தினர்களுக்குப் பெருந்துணை செய்தன. மில்லர் ஜனசமுதாய சீர்திருத்த விஷயங்களிலும் ஈடுபட்டுள்ளார்.

ஒரு சமயம் நாட்டியக் கச்சேரி முதலானவைகளைக் கண்டிக்க ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு டாக்டர் மில்லர் தலைமை வகித்துப் பிரசங்கித்தார். முதலில் இந்த இயக்கத்தில் ஈடுபட அஞ்சிக் கொண்டிருந்தவர்களாகிய படித்தவர்களும் மில்லர் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு அவர் காட்டிய வழியைப் பின்பற்றி உழைக்கலானார்கள். பின்னும் மில்லர் சென்னை ஜன சமுதாயச் சீர்திருத்தச் சங்கத்தின் நடவடிக்கைகளிலும் கலந்து உழைத்தார். அந்தச் சங்கத்தின் கூட்டங்களுக்காக அவர் கல்லூரி மண்டபத்தையும் அவ்வப்போது கொடுத்துதவினார். ஜன சமுதாயச் சீர்திருத்தச் சங்கங்களில் மட்டுமன்றி ஜன சமுதாயச் சீர்திருத்த வேலைகளிலும் ஈடுபட்ட ஜனங்கள் அவருடைய ஆதரவையும் அநுதாபத்தையும் பெற்றார்கள். சில புத்தக ஆசிரியர்களுக்கும் அவர் ஒரு நண்பரைப் போல இருந்து அவ்வப்போது நற்புத்தி புகட்டிவந்தார்.

1891-ஆம் வருஷத்தில், சென்னை நகர வாசிகள், 'விக்டோரியா பொதுஜன மண்டபத்தில்' ஒரு கூட்டங் கூடிச் சென்னை நகரின் சுகாதாரக் கேட்டைப்பற்றியும் மக்கள் அதிகமாக மரணமடைவதைக் குறித்தும் அதிகாரிகள் கவனித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினார்கள். இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த டாக்டர் மில்லர்

மேற்கூறிய விஷயங்களைக் குறித்து விவரமாகவும் தெளிவாகவும் ஜனங்களுக்கு எடுத்துரைத்தார்.

ஒரு சமயம் இசைப் பயிற்சிப் பள்ளிக்கூடம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை அரசாங்க மாளிகையில் ஒரு கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் பேசிய டாக்டர் மில்லர் அவர்கள் இசைப்பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் இந்திய இசைப்பயிற்சி சம்பந்தமான விஷயங்களும் போதிக்கப்பட வேண்டுமென்றும் அவ்வாறு போதிக்கப்படாவிட்டால் அந்தப் பள்ளிக்கூடத்தினுல் நல்ல பிரயோஜனம் ஏற்படாதென்றும் தெரிவித்தார். டாக்டர் மில்லர் பெண்கல்விக்காகவும் பெரிதும் பாடுபட்டார். அவர், பெண்களுக்கும் உயர்தரக் கல்வியைப் போதிக்கவேண்டுமென்றும் ஆனுல் அக்கல்வி ஆண்களுக்குப் போதிக்கப்படுகிற கல்வியைப்போல இருக்கக் கூடாதென்றும் பேசினுர்.

இந்தியர்கள் இந்தியாவின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு ஆடைகளை அணிந்துகொள்ள வேண்டுமென்றும் அவர்கள் ஐரோப்பா முதலான மேனுடுகளில் சுற்றுப் பிரயாணஞ்செய்யும்போது வேண்டுமானுல் அந்த நாட்டவரைப்போலத் தொப்பி முதலியவைகளைத் தரித்துக்கொள்ளலா மென்றும் கூறியிருக்கிறுர். இந்தியர்கள் படிப்பை உத்தேசித்து மேல்நாடுகளுக்குச் செல்ல வேண்டியதில்லை யென்றும், வைத்திய விஷயமான படிப்புக்காக மாத்திரம் மேல் நாடுகளுக்குச் செல்லலாம் என்றும், அதற்கு 'எடின்பரோ'வுக்குச் செல்வது மிகவும் உத்தமம் என்றும் மில்லர் தெரிவித்துள்ளார்.

மில்லர் துரையவர்கள் மாணவர்களைச் சிறுவயதில் 'பப்ளிக் எக்ஸாமினேஷன்' என்னும் பொதுப் பரீட்சைகளுக்கு அனுப்பக்கூடாது என்று கூறியுள்ளார். இப் பரீட்சைகளில் தேறிவிட்டால் தாங்கள் எல்லாக் காரியங்களையும் செய்துவிட்டதாக மாணவர்கள் நினைக்கக் கூடாதென்றும் அவர் கூறியுள்ளார். மாணவர்களிடத்தில் ஒழுக்கம் நிலைபெற்றிருக்கச் செய்வதே கல்வி சம்பந்தமான அதிகாரிகளின் முக்கிய கடமையாகுமென்றும் அக்கடமையை அவர்கள் நிறைவேற்றினால்தான் இந்தியா முன்னேற்றம் அடையும் என்றும் அவர் கூறியிருக்கின்றார். அரசியல் விஷயங்களிலும் அவர் தலையிட்டு உழைத்து வந்தார்.

இந்தியர்கள் சுய ஆட்சி பெறவேண்டுமென்று செய்து வரும் முயற்சியைப்பற்றி அவர் கூறுகையில், 'இந்தியர்கள் சுய ஆட்சிபெற அவாவி நின்று அதற்கான முயற்சிகளை ஒழுங்கான வழியில் செய்வதை நான் மனமார வரவேற்கின்றேன்,' என்று கூறியுள்ளார்.

1901-ஆம் வருஷத்தில் சர்வ கலாசாலை சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க 'லார்டு கர்ஸன்' ஒரு மகாநாட்டைக் கூட்டினார்; அம்மகாநாட்டுக்கு டாக்டர் மில்லரையும் வரவழைத்து அவருடைய அபிப்பிராயத்தையும் கேட்டார். பிறகு 1902-ஆம் வருஷத்தில் லார்டு கர்ஸன் 'இந்தியன் யூனிவர்சிடீஸ் கமிஷன்' என்னும் ஒரு கமிஷனை நியமித்து அக்கமிஷன் சர்வ கலாசாலை சம்பந்தமான விஷயங்களையெல்லாம் ஆராய்ந்து ஓர் அறிக்கை வெளியிடுமாறு ஏற்பாடுசெய்தார். கமிஷன் அங்கத்தினர்கள் சென்னைக்கு விஜயம் செய்த

போது அவர்கள் டாக்டர் மில்லரை முதல் சாட்சியாக விசாரித்தார்கள். அவர் கூறிய விஷயங்கள் கமிஷனுக்குப் பெருந்துணை செய்யக்கூடியவைகளாயிருந்தன. கமிஷன் பல மாகாணங்களுக்கும் சென்று பலதிறப்பட்ட அபிப்பிராய முடையவர்களையும் சாட்சிகளாக விசாரித்துக் கடைசியில் ஓர் அறிக்கையைத் தயார் செய்தது. அவ்வறிக்கையில் கமிஷன் அங்கத்தினர்கள் பின்வருமாறு கூறி இருக்கிறார்கள் :

'சர்வ கலாசாலையினர் பரீட்சாதிகாரிகளாக மாத்திரம் இருக்கக்கூடாது. சர்வகலாசாலைகள் நல் விஷயங்களைப் போதிக்கும் சாலைகளாக இருக்கவேண்டும். சர்வ கலாசாலையில் தேர்ந்த ஆசிரியர்களை அமர்த்த வேண்டும். இவ்வாசிரியர்கள் மாணவர்களுக்கு அவ்வப்போது உபந்நியாசம் செய்துவரவேண்டும். சர்வ கலாசாலைகளில் புத்தக நிலையங்களும் பூதபௌதிகப் பரீட்சை சாலைகளும் ஏற்பட்டிருக்கவேண்டும். சர்வ கலாசாலைகளுக்கும் அவைகளைச் சேர்ந்த கல்லூரிகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டும். சர்வ கலா சாலை 'சிண்டிகேட்'டைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஆண்டுக்கொருதரம் கல்லூரிகளைச் சென்று பார்வையிடவேண்டும். 'செனட்'டில் கல்வி சம்பந்தமான விஷயங்களில் ஈடுபட்டவர்களுக்கும் சர்வ கலாசாலைப் பட்டதாரிகளுக்கும் போதுமான பிரதிநிதித்துவம் ஏற்படவேண்டும். கல்லூரி மாணவர்கள் விஷயத்தில் சர்வ கலாசாலையினர் மேற்பார்வை செலுத்தவேண்டும்.'

மேற்கூறிய சிபாரிசுகளைத் தன்னகத்துக் கொண்ட மசோதா இந்திய சட்ட சபையில் விவாதத்திற்கு

58815



TWM38

எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது இந்திய சட்ட சபையில் பிரபல அங்கத்தினரும் ஜனங்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தவருமான ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் இம்மசோதாவை எதிர்த்தார். அவர் அவ்வாறு செய்தமைக்குக் காரணம், இந்திய சட்டசபையில் இம்மசோதாவைக் கொண்டுவந்த இந்திய அரசாங்க நிர்வாக அங்கத்தினர் ஒருவர் தம் பிரசங்கத்தில், 'அரசாங்கத்தார் சர்வ கலாசாலைகளை அரசாங்க அதிகாரத்துக்குட்படுத்திப் பெரும்பாலரான இந்தியர்கள் உயர்தரக் கல்வி கற்பதைத் தடுத்துவிட உத்தேசித்திருக்கின்றார்கள்,' என்று பொருள்படும்படி பேசியதேயாகும்.

கடைசியில் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டு அதன் பயனாக 1904-ஆம் வருஷத்திய 'சர்வ கலாசாலைச் சட்டம்' என்று வழங்கும் 'யூனிவர்சிட்டீஸ் ஆக்ட்' ஏற்பட்டது.

மில்லர், 'சர்வ கலாசாலையார் தலையிடாமலே கல்லூரியைச் சேர்ந்த அதிகாரிகள் மாணவர்களின் அபிவிருத்திக்கான விஷயங்களில் பாடுபடவேண்டும்,' என்று கூறியுள்ளார். அதேவிதமாக அவர் தம் கல்லூரியில் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கென அநேகம் சௌகரியங்களைச் சர்வ கலாசாலையாரின் உதவி இல்லாமலே செய்து இருக்கின்றார்.

டாக்டர் மில்லர் இத்தகைய அரிய வேலைகளைச் செய்து இருக்கின்றாரல்லவா! ஆகவே அவர் நம்மனோரால் பாராட்டப்பட வேண்டும் என்பது அவசியமென்று

தோன்றுகிறதல்லவா! டாக்டர் மில்லர் படித்த சர்வ கலாசாலையாகிய அபர்டீன் சர்வ கலாசாலை மில்லருக்கு 'டி. லி. எல்.,' என்னும் பட்டத்தை அளித்தது. அது முதற்கொண்டு அவர் டாக்டர் மில்லர் என்று அழைக்கப் படலானார். சென்னைச் சர்வ கலாசாலையும் டாக்டர் மில்லருக்கு 'டி. லி. எல்.,' என்னும் டாக்டர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. அரசாங்கத்தினரும் டாக்டர் மில்லருடைய அரிய சேவைகளைப் பாராட்டி அவருக்கு 'ஸி. ஐ. இ.,' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தனர். பொது ஜனங்களும் அவர் செய்த அரிய சேவைகளைப் பாராட்டி அவரைப்போல உருவச் சிலை ஒன்று செய்து அதைக் கிறிஸ்தவக் கல்லூரிக்கு எதிரிலுள்ள சென்னை உயர்தர நீதி மன்றத்திற்கு வெளியில் வைத்து இருக்கிறார்கள்.

அந்த உருவச்சிலையின் கீழ், 'இவர் பொது விஷயங்களிலும் மத சம்பந்தமான விஷயங்களிலும் தலையிட்டு ஜனங்களால் பெரிதும் மதிக்கப்பட்டு வந்த ஒரு பாதிரி உபாத்தியாயர் ஆவர். இவரைப்போல இந்தியாவில் உயர்தரக் கல்விக்காகப் பாடுபட்டவர் வேறு ஒருவரும் இலர் என்று ஒருவாறு கூறிவிடலாம்,' என்று லண்டன் 'பார்லிமெண்ட்'டில் பிரபுக்கள் சபையில் லார்டு நேப்பியர் சொல்லிய மொழிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் மில்லர் சென்னைச் சட்ட சபையில் சென்னைச் சர்வ கலாசாலையின் பிரதிநிதியாக அங்கம் பெற்றார் என்றோமல்லவா? இவ்வாறு அங்கம் பெற்ற

டாக்டர் மில்லர் அச்சபையில் செய்த வேலைகளைக் குறித்தும் சிறிது கவனிப்போம்:

அவர் சென்னைச் சட்ட சபையின் நடவடிக்கைகளில் ஒரு முக்கிய பாகத்தை எடுத்துக்கொண்டார். அவர் கல்வி சம்பந்தமான விஷயங்கள் விவாதத்திற்கு வந்தபோதெல்லாம் தயை தாட்சண்யம் ஒன்றும் பாராமல் தாம் சர்வ கலாசாலையின் பிரதிநிதி என்பதை எண்ணித் தம் கருத்தைக் கம்பீரமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்து வந்தார். அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிக்கூடங்களின் பிரதிநிதியாகவும் அவர் சட்ட சபையில் உழைத்தார். அவர் சில சமயங்களில் அரசாங்கத்தார், அரசாங்க ஆதரவு பெறும் பாடசாலைகள் விஷயமாக அன்பு குறைந்த மாற்றாந்தாய் முறையில் நடந்து வருவதைக் கண்டித்து வந்தார். கல்வி சம்பந்தமான விஷயங்களோடு மற்ற விஷயங்களிலும் அவர் சட்ட சபையில் பங்கெடுத்துக்கொண்டு பாடுபட்டார். அவர் வெறும் அரசியல் வாதியைப்போல நடவாமல் ஒரு சிறந்த இராஜ தந்திர நிபுணனைப்போலச் சட்ட சபையில் தமது வேலைகளைச் செய்து வந்தார். அரசியல் வாதிக்கும் இராஜ தந்திர நிபுண னுக்குமுள்ள வித்தியாசம் யாதெனில், 'அரசியல் வாதி அவ்வப்போது வரக்கூடிய பலாபலன்களை மாத்திரம் கவனித்துத் திருப்தியடைவான்; இராஜ தந்திர நிபுணனோ தான் செய்யும் காரியம் நிலைத்து இருக்கும்படி பார்த்துக்கொள்ளுவான்,' என்பதேயாகும். மில்லர் எப்போதும் விஷயங்களை ஆராய்வதில் நிபுணராகையால் தக்க சமயங்களில் அவர் முன் யோசனையுடன் எதைப்பற்றியும் எச்சரிக்கை செய்வதோடு

தம்மால் கூடிய உதவியையும் செய்து வருவார். அரசாங்க அங்கத்தினர்களுக்கும் ஜனப் பிரதிநிதிகளுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு அவற்றால் கஷ்டம் ஏற்படுவதாய் இருந்தால் மில்லர் தாம் தலையிட்டு மனவருத்தம் ஏற்படாதவாறு செய்து விடுவார். அவர், அரசாங்க அங்கத்தினர்கள் பொது ஜனங்களின் பிரதிநிதிகளாகிய அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களை மதித்து நடக்க வேண்டுமென்றும் பொது ஜனங்களின் பிரதிநிதிகளும் அரசாங்க அங்கத்தினர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து ஒருவாறு அமைதியாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் அடிக்கடி கூறுவார்.

டாக்டர் மில்லரை, அவரிடத்தில் படித்த மாணவர்களே யன்றித் தென்னிந்தியாவைச் சேர்ந்த பிரபல கனவான்களாகிய திவான்பகதூர் இரகுநாதராயர், சென்னை இராஜதானிக் கல்லூரி அறிஞர் பூண்டி அரங்கநாத முதலியார், சர். டி. மாதவராயர் முதலானவர்களும் புகழ்ந்துரைத்திருக்கின்றார்கள்.

சென்னையில் பிரசுரமாகும் தினசரிப் பத்திரிகை ஒன்று டாக்டர் மில்லரை, அவர் காலத்தில், 'சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைமை ஆசிரியரான கனம் பொருந்திய பாதிரியார் வில்லியம் மில்லரைப்போலத் தென்னிந்தியா முழுவதும் தெரிந்தவரும் ஜனங்களால் போற்றப்பட்டு வந்தவரும் ஒருவரும் இல்லையென்றே கூறலாம். அவரைச் சுதேசிகளும் ஐரோப்பியர்களும் நேசித்துக் கொண்டாடி வருகிறார்கள். பிரதி உபகாரம் ஒன்றையும் எதிர்பாராமல் டாக்டர் மில்லர் அநேக கஷ்டங்களுக்கிடையில் கடந்த முப்பது வருஷங்களாக

இந்திய மக்களின் முன்னேற்றத்தை நாடி உழைத்து வந்திருக்கிறார். அவருடைய உழைப்பின் பயனாக அநேகர் செல்வாக்கும் அதிகாரமும் வாய்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் பிற்கால வாழ்க்கையை ஒழுங்கு படுத்தக்கூடியவர்களாயு மிருக் கிறார்கள். தென்னிந்திய மக்களுக்கு அளவற்ற நன் மையைச் செய்து கொண்டிருக்கும் ஒரு கல்லூரியின் தலைவராக இருப்பதோடு அவர் தம்மை அறியாமலே தாம் தம்முடைய செல்வாக்கினால் சூழப்பட்டவராயு மிருக்கிறார். படித்த ஜனங்களுக்கு அவர் ஒரு சூத்திர தாரியாகவும், நண்பராகவும், தத்துவ சாஸ்திரியாகவும் இருந்து வருகிறார். அவரிடத்தில் எல்லா வகுப்பினரும் நம்பிக்கை வைத்திருக்கின்றனர். அவர் சம்பந்தத்தால் எந்த இயக்கத்திற்கும் செல்வாக்கு ஏற்படுகின்றது. அவர் ஒரு விஷயத்தை ஆதரிக்கிறார் என்ற காரணத் தினாலேயே அவ்விஷயம் முறையுள்ளதும் அநுபவத் துக்கு ஒத்ததுமாகுமென்று அறிவாளர்களால் தீர் மானிக்கப்படுகிறது,' என்று புகழ்ந்து உரைத்து இருக் கிறது.

டாக்டர் மில்லரைக் குறித்து ஒரு சந்தர்ப்பத்தில் திவான் பகதூர் இரகுநாதராயர் பேசுகையில், 'ஜனங் களின் பொது நன்மைக்காகப் பாடு படும் விஷயத்தில் டாக்டர் மில்லர் தன்னல மற்ற ஒரு தியாகியாவர். அவர் தாம் மேற்கொண்ட காரியங்களைச் சிரத்தை யுடன் செய்யக்கூடியவர்,' என்று கூறியுள்ளார்.

# பதின்மூன்றும் அத்தியாயம்

## டாக்டர் மில்லரும் கிறிஸ்தவ மதப்பிரசாரமும்

டாக்டர் மில்லர் சென்னையில் கிறிஸ்தவ வாலிபச் சங்கம் நிறுவப்பட்டபோது கிறிஸ்தவக் கல்லூரியில் செய்த பிரசங்கத்தில், 'சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி யின் நோக்கம் மாணவர்களுக்கிடையில் முறையான கொள்கைகளும், நல்ல பழக்க வழக்கங்களும், உயர்ந்த ஒழுக்கமும் ஏற்படப் பாடுபடுவதாகும். ஒரு சிலர் கருதுவதைப்போல இயேசு கிறிஸ்துவானவர் மற்ற மதங்களை நசுக்க வந்தவர் அல்லர். அவரைப்பற்றி மற்ற மதத்தினர் அவ்வாறு எண்ணுவது தவறு. கிறிஸ்துவானவர் எல்லா மதங்களிலுமுள்ள நல்ல கொள்கைகளைப் பாராட்டி யிருக்கின்றார். கிறிஸ்துவின் நற்போதனைகளை மக்களுக்குப் போதிக்கக் கிறிஸ் தவக் கோயில்கள் பல இருக்கவேண்டும். கிறிஸ்தவக் கோயில்களைச் சேர்ந்தவர்கள் மற்ற மதத்தினர்களை நேசித்து அவர்கள்பால் அன்பு பாராட்டி அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும். ஒருசில கிறிஸ்தவர்கள் மற்றக் கிறிஸ்தவர் அல்லாதாருடன் சண்டை சச்சரவு விளைக்கவேண்டு மென்று கருதுகிறார்கள். அவ்வாறு கருதுவது சரியன்று. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவன் தன்னிடத்திலுள்ள காமம், குரோதம், மோகம், மதம், லோபம், மாச்சர்யம் ஆகிய இவைகளுடன் சண்டை யிட வேண்டுமென்று சொல்லப்பட் டிருக்கிறதேயன்றி மற்ற மதஸ்தர்களுடன் சண்டையிட வேண்டுமென்று

சொல்லப்பட் டிருக்கவில்லை. கிறிஸ்தவன் ஒருவன் கிறிஸ்தவர்கள் அல்லாதாருடன் சண்டை இடவேண்டு மென்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. இன் னும் கிறிஸ்தவன் ஒருவன் மற்ற மதத்தினருக்கு நன்மை செய்யும் தூதனைப்போல இருக்கவேண்டும். கிறிஸ்தவன் தற்பெருமை கொள்ளக்கூடாது. அவன் அடக்கம் பணிவு ஆகிய நற்குணங்களை ஆபரணமாகக் கொண்டிருக்கவேண்டும். அவன் பிறருக்கு உண்டாகக் கூடிய கஷ்டங்களைக் கிறிஸ்துவைப்போல நீக்கக்கூடிய வனாயிருக்க வேண்டும்,' என்று பேசியுள்ளார்.

டாக்டர் மில்லர் இவ்வாறு பிரசங்கம் செய்தமை சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர்கள் டாக்டர் மில்லரைக் குறை கூறுவாராயினர். இதற்கு டாக்டர் மில்லர் அஞ்சவேயில்லை. அவர் தம் மனசாட்சி கூறிய படி நடந்துகொண்டார். இச்சந்தர்ப்பத்தில் டாக்டர் மில்லருக்குப் பெருந் துணையாயிருந்தவர் 'டாக்டர் ஸ்கின்னர்' ஆவர். அவரும் பரந்த அறிவும் ஆழ்ந்த ஞானமும் கைவரப் பெற்றவராவர்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் டாக்டர் மில்லர் தம் மதப் பிரசங்கம் ஒன்றில்,

'இறைவன் கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்லாமல் உலகிலுள்ள பல்வேறு மதத்தினருக்கும் இறைவனா வான். உலகில் யார் எந்த வாழ்க்கையில் ஈடுபட்டிருந் தாலும் கடவுளைத் துதிக்கலாம். நிலத்தை உழுது கொண்டிருக்கும்போதும், காரியாலயத்தில் வேலைபார்த் துக்கொண் டிருக்கும்போதும், மாணவர்களுக்கு வகுப்

பில் பாடஞ்சொல்லிக் கொண்டிருக்கும்போதும், வேறு வேலைகளைச் செய்துகொண்டு இருக்கும்போதும் கடவுளைத் துதித்துக் கொண்டிருக்கலாம்,' என்று கூறியுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் பிரபந்தத்தில் வந்துள்ள, 'மார்வமென்னுமோர் கோயில் அமைத்து மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு அரவதண்டத்தில் உய்யலும் ஆமே,' என்ற பாசுரமும் குட்டித் திருவாசகம் என்னும் திருக் கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியில் வந்துள்ள, 'இருக்கினும் நிற்கும்போதும் இரவுகண் துயிலும்போதும்........ சிந்தைஉன் பாலதாமே,' என்ற பாடலும் கவனிக்கத் தக்கவையன்றோ?

மனித வர்க்கத்தினருடன் கடவுள் எத்தகைய சம்பந்தத்தைக் கொண்டிருக்கின்றார் என்பதைக் குறித்துக் கிறிஸ்தவர்களுடைய அபிப்பிராயம் யாது என்பதைப் பற்றி டாக்டர் மில்லர் நான்கு பிரசங்கங்கள் செய்தார். அவைகளின் முக்கிய சாராம்சம் கீழ்க் குறிக்கப்பட்டிருக்கின்றன:

'எல்லா மக்களும் பாவம் செய்தவர்கள் ஆவர். கடவுள் அவர்கள்மீது இரக்கங் காட்டுகிறார். மனித சமூகம் என்பது முதலில் பிளவுபடாத ஏக சமூகமாக இருந்தது. மனிதனோ அல்லது சமூகமோ பிறருடன் சம்பந்தங்கொள்ளாமல் வாழ்ந்திருக்க முடியாது. தேகத்தினுடைய அவயவங்கள் பல்வேறாயிருந்தாலும் அவை தேகத்துடன் ஒன்றியவைகளாயிருக்கின்றன அல்லவா?

அவைபோலவே மானிட வர்க்கத்தினரும் ஏகமாயிருந்து கொண்டே தங்களுக்குள் பிளவுபட்டு இயற்கைக் குணங்களாலும், தங்களுக்குள் ஏற்பட்டுள்ள பந்தங் களாலும், பழக்க வழக்கங்களாலும், சட்ட திட்டங் களாலும், கட்டுப் பாடுகளுடன் கூடியவர்களாகத் தொகுதி தொகுதியாகப் பிரிந்து வந்தனர். கடவுள் நல்லோருக்கு எளியராயிருந்தாலும் அவரை அடையச் சிற்சில பயிற்சிகள் இன்றியமையாதவைகளாய் இருக் கின்றன. இறைவன் எல்லாருடைய நன்மைக்காகவுமே அன்பைச் சதா சொரிந்து கொண்டிருக்கின்ருர். கட வுள் எல்லோருடைய உள்ளத்திலும் நிலவியிருந்தாலும் அவர் சிற்சில மானிடப் பிரிவினருள் ஆக்கம் பெற் றிருந்து அவர்கள் மூலமாய் ஏனைய மக்களுக்கெல்லாம் நன்மை உண்டாகும்படி செய்கிருர். உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் நன்மை செய்வதற்காகவே கடவுள் ஒவ்வொரு இனத்தவருக்கும் ஒவ்வொரு விதமான கட மையை உண்டாக்கி யிருக்கிருர் என்பதை மறவாமல் மனத்தில் இருத்திக்கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டும். கிறிஸ்தவர்கள், எல்லாரிடையிலும் கடவுள் இருக்கின்ருர் என்பதை உணர்ந்து அவர்களாலும் உல கத்துக்கு நன்மை ஏற்படுமென்று எண்ணி அவர்களை வெறுக்காமல் நேசிக்கவேண்டும். கிறிஸ்தவர் அல்லா தவர் கடவுள் தமக்கு ஒன்றும் சொல்ல வில்லையே என்று எண்ணக்கூடாது. ஒருவர் தாம் கிறிஸ்தவராஞல் தான் தமக்கு மோட்சம் கிடைக்குமென்று கடவுள் சொல்வதாக நினைக்கக்கூடாது. கடவுள் ஒவ்வொரு வருடைய உள்ளத்திலும் இருந்து அவரைத் தன்வயத்த

ராக்கி அவரால் பிறருக்கு நன்மை ஏற்படச்செய்கிறார். கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்களால் கடவுள் உண்மையைக் காணமுடியாது என்ற கூற்றானது தவறானதாகும். ஈப்ரு தீர்க்கதரிசிகளாலும் கிறிஸ்துநாதராலும் எடுத்துக் கூறப்பட்ட உண்மைகள் அவர்களுக்கு முன்னரோ அல்லது அவர்கள் காலத்திலேயோ எகிப்து, கிரீஸ், இந்தியா முதலான நாடுகளிலிருந்த பெரியோர்களால் கூறப்பட்டிருக்குமானால் அவைகளைக் கண்டு கிறிஸ்தவர்கள் ஆயாசம் கொள்ள வேண்டுவதில்லை.

உலகுக்கெல்லாம் ஒரே கடவுள் தலைவராக உளர் என்பது மறுக்க இயலாததோர் உண்மையாகும். அக்கடவுள் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வகையான மக்களிடத்தில் மிகுதியும் பிரகாசித்து அவர்கள் மூலமாய் அநேக நன்மைகளை உலகுக்குச் செய்கிறார். ஆகவே கிறிஸ்தவர்கள் மற்ற மதங்களைத் தழுவும் மக்களிடையில் காணப்படும் நல்ல விஷயங்களை ஏற்றுக்கொள்ளுதல் தவறாகாது. கடவுளைப் பற்றியும் அவர் மனிதர்களோடு எத்தகைய சம்பந்தத்தைக் கொண்டிருக்கிறார் என்பதைக் குறித்தும் மனிதர்கள் பல யுகங்களாக ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவ்வாறு ஆராய்ச்சி செய்து வருகிறவர்களுக்கு விரோதமாகக் கிறிஸ்தவ மதம் ஏற்பட்டதன்று. கிறிஸ்தவ மதம் மனிதர்களுக்கு நன்மை செய்து அவர்கள் பெரும் பேற்றை அடையச் செய்வதற்கு ஏற்பட்ட ஒரு மதமாகும். ஒரு மதம் உயர்ந்தது; மற்றொரு மதம் தாழ்ந்தது என்ற பேதம் எவர் மனத்திலும் இருக்க வேண்டியதில்லை. மதங்கள் ஒன்றுக்கொன்று உதவி

செய்து கொண்டு இருப்பதோடு குறைவை நிறைவாக்கிக் கொண்டு மிருக்க வேண்டும். மதங்கள் ஒன்றை மற்றொன்று அழித்தல் கூடாது.'

டாக்டர் வில்லியம் மில்லர் 1895-ஆம் ஆண்டில் 'ஆண்டர்சன் ஹாலி'ல் இந்து மதத்தைக் குறித்து அரியதொரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் அவர், 'மற்ற மதங்களுக்குத் தான் ஒரு வழிகாட்டியாய் இருப்பதாக இந்து மதம் கூறிக்கொள்ளவில்லை. இந்து மதம் இந்தியா தேசத்திற்கு மாத்திரம் உரித்தானதாயிருப்பதுடன் நின்றிருக்கின்றது. அது மற்ற நாடுகளிலுள்ளவர்களுக்கெல்லாம் தன்னை ஏற்றுக்கொள்ளும்படி சொல்ல வில்லை. அது தன்னுடைய நாட்டில் தான் செய்த சீர்திருத்த அளவிலேயே திருப்தி அடைந்து இருக்கிறது. மற்ற நாட்டி லுள்ளவர்களுக்கு அந்த நாட்டு மதங்களே முறையானவை யென்று அது நினைக்கின்றது. ஆகவே இந்துமதம் மற்ற மதங்களைத் தூஷிக்காமல் அவைகளையும் வளரச் செய்கிறது என்பது பெறப்படுகிறது.

'இந்துக்கள் கடவுள் எங்கும் நிறைந்தவர் என்ற உண்மையையும் கடவுளுக்கும் மனிதனுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பதையும் கண்டு பிடித்திருக்கின்றார்கள். ஆனல் பிற்காலத்தில் இந்து மதத்தில் சில குறைகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. உலகின் நன்மைக்காக இந்தியாவும் மற்ற தேசங்களைப்போல அநேக நற்காரியங்களைச் செய்திருக்கின்றது. இதை நாம் பாராட்ட வேண்டும்,' என்று சொன்னர்.

டாக்டர் மில்லர் இவ்வாறு கூறியதைக் கேட்டுச் சிலர் அவரைப் பலவாறு கண்டித்தனர். ஒருவர் டாக்டர் மில்லரைக் கிறிஸ்தவமதத் துரோகியாவர் என்றும் துணிந்து கூறினர். ஆனல் டாக்டர் மில்லர் இவைகளையெல்லாம் கண்டு சோர்வு அடைந்து விடவில்லை. அவர் தம்மன சாட்சி சென்ற வழி நின்று காரியங்களைச் செய்துகொண்டு வந்தார்.

டாக்டர் மில்லருடைய சேவைகளை ஸ்காட்லண்டு தேசத்திலுள்ள 'ப்ரீ சர்ச் அசம்பிளி'யைச் சேர்ந்தவர்கள் பாராட்டி அவருக்கு மிகவும் கண்ணியம் வாய்ந்த 'மாடரேடர்' என்னும் பதவியை அளித்தார்கள். இப்பதவி கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களில் மிகவும் கீர்த்தி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படுவதாகும். 'மாடரேடர்' என்ற பதத்திற்கு 'ஸ்காட்லண்டு தேசத்திய மாதாகோயில் மதத் தலைவர்களுக்குள் முக்கியமானவர்' என்பது பொருளாகும். டாக்டர் மில்லருக்கு முன்னர் இப்பதவிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் கல்கத்தாவைச் சேர்ந்த 'டாக்டர் டப்' என்ற பாதிரியாரும், பம்பாயைச் சேர்ந்த 'டாக்டர் வில்சன்' என்ற பாதிரியாருமாவர். ஆனல் டாக்டர் மில்லருக்கு இப்பதவி மற்றவர்களைக் காட்டிலும் சிறு பிராயத்திலேயே வழங்கப்பட்டது போற்றத்தக்கதாம்.

# பதினான்காம் அத்தியாயம்

## கிறிஸ்தவர்கள் போதிக்கும் கல்வியின் நோக்கம் யாது?

டாக்டர் மில்லர் 'கிறிஸ்தவர்கள் போதிக்கும் கல்வியின் நோக்கம் யாது?' என்பதைக் குறித்து அரியதொரு பிரசங்கம் செய்தார். அப்போது அவர், 'கிறிஸ்தவர்கள் போதிக்கும் கல்வியின் பிரதான நோக்கமாயிருப்பது ஒழுக்கத்தை மாணவர்களிடையில் நிலை நிறுத்தப் பாடு படுவதேயாகும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி நிலவி வருகிறது. இன்னும் இக்கல்லூரியில் கடவுளின் அருள் இல்லாமல் இந்த உலகில் எக்காரியமும் நடைபெறாது என்ற உண்மையினை மாணவர்கள் அறியுமாறு செய்யப்படுகின்றது. ஞானஸ்நாநம் பெற்றவர்கள்தாம் மோட்ச சாம்ராஜ்யத்தை அடைவார்களென்றும் மற்றவர்கள் அடையமாட்டார்களென்றும் சொல்வது பொருந்தாததாகும். கடவுளை நேசித்து அவர் காட்டும் முறையில் நடக்கின்றவர்கள் அனைவருக்கும் கட்டாயமாக மோட்ச சாம்ராஜ்யம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. கடவுள் எல்லாருடைய உள்ளத்திலும் இருந்து அவர்களை வாழ்விக்கின்றார். எவ்விஷயத்திலும் கடவுளுடைய எண்ணமே மேலோங்கி நிற்குமேயன்றி மனிதனுடைய எண்ணம் கடவுள் அருள் இன்றி ஒருபோதும் நடைபெறாது. ஆகவே மக்களுக்கு எப்போதும் இறைவனுடைய துணை இன்றியமையாததாகும். இதைக்கொண்டே

## கிறிஸ்தவர்கள் போதிக்கும் கல்வியின் நோக்கம் யாது?

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' 'எல்லாம் தெய்வச் செயல்' என்னும் பழமொழிகள் ஏற்பட்டிருக்கின்றன. மனிதர்களுக்குக் கடவுள் துணை ஏற்பட்டால்தான் அவர்கள் இவ்வுலகில் சரிவரக் காரியங்களைச் செய்துகொண்டு வருவார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுள் துணை கட்டாயம் இருக்க வேண்டும். கடவுள் துணை இல்லாவிட்டால் மனிதன் பிரயோசனமற்றவனாகின்றான். அருள் என்பது மனிதனுக்குக் கடவுள் மூலமாக வரவேண்டுமேயல்லாமல் அவனைப் போன்ற பிற மனிதர்களால் வரக்கூடியதன்று. கிறிஸ்தவர்கள் ஞானஸ்நாநம் பெற்றுக்கொள்ள வேண்டுமா வேண்டாவா என்பதைக் குறித்துச் சாதாரண மனிதர்கள், 'வேண்டும்; வேண்டா,' வென்று சொல்லிவிட முடியாது. 'ஞானஸ்நாநம் வேண்டும் வேண்டா,' வென்று பிறர் எடுத்துக் கூறுவதானது மக்களுடைய அறியாமையைக் காட்டுவதாகின்றது. ஞானஸ்நாநம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஒரு மனிதனுக்கு அவன் மனசாட்சி கூறினால் அவன் அதன்படியே நடக்கலாம். இந்த விஷயத்தில் பிறருடைய அபிப்பிராயத்தைக் கேட்டு நடப்பதென்பது கூடாத காரியமாகும். ஞானஸ்நாநம் பெற்றுக்கொள்ளாதவன் கடவுளுடைய அருளுக்குப் பாத்திரனாகமாட்டானென்று கூறுவது உண்மைக்கு மாறுபட்ட வார்த்தையாகும். ஒவ்வொருவரும் தம் மனசாட்சியின் வழியில் நின்று தங்கள் வேலைகளைச் செய்ய வேண்டும். அவ்வாறின்றி, 'அவர்கள் சொன்னார்கள்; இவர்கள் சொன்னார்கள்; அதனால்தான் நான் ஞானஸ்நாநம் பெற்றுக்

கொண்டேன்,' என்று எவர்மீதும் குறைகூறக் கூடாது. எதையும் அவசரப்பட்டுச் செய்துவிடாமல் ஆலோசனை யோடு செய்தால் பின்னர் வருந்துவதற்கு இடம் இல்லாமல் இருக்கும்.

'இந்து மதம், முகம்மதிய மதம், கிறிஸ்து மதம் ஆகிய இம்மூன்று மதங்களினுடைய கொள்கைகளைக் கவனிக்கின் அவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உடையவைகளாகவே இருக்கின்றன என்பது விளங்கும். இந்த மூன்று மதங்களும் ஒன்றோடொன்று ஒத்துழைக்கக் கூடாதென்று எங்கும் சொல்லப்படவில்லை. கிறிஸ்து மதக் கொள்கைகளும் முகம்மதிய மதக் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று சம்பந்தப் பட்டவை களாகவே இருக்கின்றன. அதைப் போலவே இந்து மதத்திற்கும் கிறிஸ்து மதத்திற்கும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அவைகளைப் பொறுத்த மட்டிலேனும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஒத்துழைக்கலாம். அப்படி அவர்கள் ஒத்துழைப்பதால் அதிக பிரயோசனம் உண்டாகும். இந்து மதம் அநேகம் நல்ல கொள்கை களைத் தள்ளிவிடாமல் தனக்குத் தகுந்தபடி அவைகளைத் திரித்துத் தன்னுள் சேர்த்துக் கொண்டிருக்கின்றது.

'கிறிஸ்துமதமும் மற்ற மதங்களிலுள்ள நல்ல விஷயங்களைத் தன்னகத்துச் சேர்த்துக்கொண் டிருக்கின்றது. அது அவைகளை வேண்டாமென்று தள்ளிவிட வில்லை. எங்கெங்கும் காணப்படுகின்ற நன்மைகளையெல்லாம் கிறிஸ்து மதம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சொல்லவில்லை. அவர்கள் கிறிஸ்துநாதரைப் பிரதான

புருஷராகக் கொண்டிருக்கிறார்களென்றாலும் உலகில் மற்ற மதங்களிலுள்ள உண்மைகளையும் தள்ளிவிடாமல் அவைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் மற்ற மதஸ்தர்களைச் சகோதரர்களாகப் பாவித்து அவர்கள் மதங்களிலுள்ள நல்ல விஷயங்களை ஏற்றுக்கொள்ளுவார்கள். கடவுள் மக்களை அந்தகாரத்தினின்றும் வெளிப்படுத்தி ஞான சூரியன் அவர்களிடையே உதிக்கும்படி செய்பவர் ஆவர். ஆகவே மற்ற மதங்களில் காணப்படும் நல்ல விஷயங்களை ஏற்றுக்கொள்ளுவதில் ஒருவிதமான தவறுதலும் உண்டாகாது. இதை ஒவ்வொருவரும் உய்த்து உணர்தல் வேண்டும்.

'சில இடங்களிலுள்ளவர்கள் கிறிஸ்தவக்கல்லூரிகள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கென்றே ஏற்பட்டவையாகுமென்று கருதுகிறார்கள். அவர்கள் அவ்வாறு கருதுவது தவறான எண்ணமாகும். கிறிஸ்தவர்கள் ஜனங்களுக்குத் தங்களாலான நன்மைகளைச் செய்யவே கல்லூரி, வைத்தியசாலை முதலியவைகளை ஏற்படுத்தி நடத்தி வருகின்றார்கள். அவர்களை மற்றவர்கள் ஜனங்களுக்கு நன்மை செய்ய ஏற்பட்ட தொண்டர்கள் என்று கருதவேண்டுமேயல்லாமல் அவர்கள் மற்றவர்களை அடக்கி ஆளுவதற்காக ஏற்பட்ட எஜமானர்கள் என்று கருதக்கூடாது. நிற்க.

'நமது நாட்டில் பரீட்சைகளைப் பொறுத்தமட்டில் ஒரு தவறான கொள்கை இருந்துவருகிறது. அத்தவறான கொள்கையை ஒழிக்க அனைவரும் பாடுபடவேண்டும். மாணவர்கள் பரீட்சையில் தேறிவிட்டால் அதோடு எல்லாம் தீர்ந்துவிட்டதென்று கருதுகிறார்கள். அது

முற்றிலும் தவறான எண்ணமாகும். இவ்வெண்ணம் மாணவர்களிடமிருந்து ஒழிய நாம் பாடுபடவேண்டும். அப்போதுதான் இந்திய நாடானது நன்மை அடையும். பிள்ளைகள் சிறுவயது முதற்கொண்டே பரீட்சையில் தேறுவதோடு எல்லாவற்றுக்கும் மேலான பரம்பொருளின் அருளைப் பெறவும் முயற்சித்தல் வேண்டும். இவ்வருள்தான் உயர்தர வாழ்க்கைக்கு இன்றியமையாததாக வேண்டப் படுவதாகும். இவ்வருள் மாணவர்களுக்கிடையில் ஏற்படப் பாடுபடுவதே கல்வியின் பிரதான நோக்கமாகும். இத்தகைய நோக்கத்தை அடிப்படையாகக் கொள்ளாத கல்வி, கல்வியாக ஒருபோதும் கருதப்பட மாட்டாது. அதற்காகச் செலவழிக்கப்படும் பணமும் வீண் விரயமேயாகும். ஆகவே ஒவ்வொரு கல்விச் சாலையும் இந்த நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு நடைபெற வேண்டும்,' என்று பிரசங்கித்தார்.

## பதினைந்தாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும் நற்போதனையும்

டாக்டர் மில்லர் நற்போதனையை அடிப்படையாகக் கொள்ளாத கல்வி கல்வியாக மாட்டாதென்று அடிக்கடி கூறியுள்ளார் அல்லவா? ஆகவே அதைக் குறித்தும் ஒரு சிறிது கவனிப்போம்:

'இந்தியாவில் அநேக மதங்கள், ஜாதிகள், வகுப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே கல்விச் சாலைகளில் மத-

சம்பந்தமான கல்வி போதிக்கப்படுவதற்கில்லை,' என்று ஒரு சாரார் கூறுகின்றனர். அக்கூற்று முறையான தன்று. பள்ளிக்கூடங்களை வைத்து நடத்துகிறவர்கள், பள்ளிக்கூடங்களின் அடிப்படையான நோக்கம் மாண வர்களுக் கிடையில் ஒழுக்கம் நிலவப் பாடுபடுவதாகு மென்று கூறுகிறார்களல்லவா? நாம் அவ்வொழுக்கம் மதசம்பந்தமான கல்வி இல்லாமல் எவ்வாறு கைகூடப் பெறுவோம்? ஆகவே மத சம்பந்தமான கல்வி இன்றி யமையாத தென்று விளங்குகிறது. மதசம்பந்தமான கல்வி பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட்டு வந்தால் பள்ளிக்கூடங்களிலிருந்து வெளியேறும் மாணவர்கள் தங்களுடைய பிற்கால வாழ்க்கையில் தாங்கள் பள்ளிக் கூடங்களில் கற்றுக்கொண்ட நல்ல விஷயங்களைப் பின் பற்றி நடந்துகொள்ளுவார்கள். அவர்கள் மற்ற மதங் களைத் தூஷிக்காமல் இருப்பதோடு மற்றவர்களுடைய கொள்கைகளையோ, அபிப்பிராயங்களையோ, நம்பிக்கை களையோ மதித்தும் நடப்பார்கள். பிறருக்கு மனவருத் தம் உண்டாகும்படி அவர்கள் நடந்துகொள்ள மாட் டார்கள். இவ்வாறெல்லாம் நடந்து கொள்ளுவதற்கு ஏற்ற விஷயங்கள் மாணவர்களுக்குப் பள்ளிக்கூடங் களில் போதிக்கப்படுதல் வேண்டும். நல்ல எண்ணங் களை மாணவர்களுக் கிடையில் பரப்பிவருவது எவ் வளவோ பிரயோசனத்தைத் தரத்தகுந்த காரியமாகும். இவைகளையெல்லாம் உத்தேசித்துக் கல்வி அபிவிருத்தி யில் நாட்டமுடையவர்கள் மதசம்பந்தமான கல்வியை மாணவர்களுக்குப் புகட்ட முயற்சிக்க வேண்டும். மாணவர்களுக்குக் கல்வியைப் போதிக்கும் எல்லாக்

கல்விச் சாலைகளிலும் மதசம்பந்தமான கல்வி போதிக்கப் படவேண்டியது இன்றியமையாத விஷயமாகும். 'மதசம்பந்தமான கல்விபோதிக்கக்கூடாது,' என்று கூறுகிறவர்களை 'விரோதிகள்' என்று எண்ண இடமுண்டு. ஒரு சிலர் கல்விச் சாலைகளிலும் கல்லூரிகளிலும் மதசம்பந்தமான கல்விபோதிக்கக் கூடாதென்று கூறுகின்றனர். இக்கூற்று ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று. மாணவர்களுக் கிடையில் ஒழுக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமானால் அதற்குப் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளுமே ஏற்ற இடமாகும். 'அவ்விஷயத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்,' என்று ஆசிரியர்கள் கூறுவது தகுதியன்று. 'ஐந்தில் வளையாதது ஐம்பதிலும் வளையாது?' என்பது பழமொழி அல்லவா? ஆகவே சிறுவர்களுக்கு மதசம்பந்தமான கல்வியைச் சிறுவயதிலேயே போதிக்க வேண்டும். 'அவர்கள் பெரியவர்களான பிறகு அவ் விஷயத்தைத் தாங்களே பார்த்துக் கொள்ளுவார்கள்,' என்று கூறுவது அறிவுடையார் வார்த்தையாகாது.

ஒழுக்கத்தின் மேன்மையை விளக்குவான் வேண்டித் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் தாம் இயற்றிய திருக்குறள் என்னும் நூலில்,' 'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்,' என்று தெளிவாகக் கூறிய வாக்கியம் நம்மனோரால் கவனிக்கத்தக்கதே யன்றோ?

'பள்ளிக்கூடங்களுக்கும் மதசம்பந்தமான விஷயங்களுக்கும் ஒருவிதமான தொடர்பும் இல்லை,'யென்று கூறுவது அறிவுடையவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வார்த்தையன்று. 'ஒழுக்கம் பள்ளிக்கூடப் படிப்

புக்குப் பின்னர் ஏற்படவேண்டியதாகும்,' என்று சிலர் கருதுகின்றனர். இக்கூற்று முறையானதன்று. ஒழுக்கம் வயதேறிய பிறகுதான் ஏற்படவேண்டுமென்ற நியதி கிடையாது.

இது காலைப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் மதசம்பந்தமான கல்வி ஓரளவுக்குப் போதிக்கப்பட்டு வருவது மனத்திற்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடியதொரு விஷயமாகும்.

## பதினாறம் அத்தியாயம்

### டாக்டர் மில்லர் 'ஜேனரல் அசம்பிளி' தலைவராதல்

சென்ற அத்தியாயங்களிலொன்றில் நாம் டாக்டர் மில்லர் ஸ்காட்லண்டு ஜெனரல் அசம்பிளி என்னும் கிறிஸ்துமதச் சபையினரால் 'மாடரேடர்' என்னும் கண்ணியம் வாய்ந்த பதவிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார் என்று கூறினேமல்லவா? அதைக் குறித்தும் இங்கு நாம் ஒரு சிறிது கவனிப்போம்:

டாக்டர் மில்லர் எதையும் வெளிப்படையாகக் கூறுகிறவர் என்று முன்னரே நாம் கூறினேமல்லவா? அதற்கேற்ப அவர் தம்முடைய பிரசங்கங்களில் அநேக விஷயங்களைப் பிறருடைய போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் செவி சாய்க்காமல் எடுத்துச் சொன்னர். அவர் தம்முடைய பிரசங்கத்தில் இந்தியாவுக்குக் கிறிஸ்தவப் பாதிரிமாரின் உதவியின் அவசியத்தைக் குறித்தும்

சொன்னர். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கடவுளிடத்தில் நம்பிக்கைகொண்டு தங்களுடைய காரியங்களைச் செய்ய வேண்டுமென்றும் அவர்கள் பிறருடைய போற்றுதலை யேனும் தூற்றுதலையேனும் கவனிக்கக் கூடாதென் றும் அவர் கூறினர். 'கிறிஸ்து மதப் பிரசாரகர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் இடையில் பிரசாரம் செய்வது அகௌரவமான காரியம் என்று எண்ணக் கூடாது. கடவுளுக்கு ஒருவன் உயர்ந்தவன் மற்றொரு வன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகிடையாது. மக்களுக் குச் செய்யும் ஊழியமே கடவுளுக்குச் செய்யும் ஊழிய மாகும். கிறிஸ்து மதப் பிரசாரகர்கள் தாங்கள் பிர சாரம் செய்யும் மக்களின் மனேபாவத்துக்குத் தகுந்த படி காரியங்களைச் செய்து கொண்டுபோக வேண்டும். ஆனல் அவர்கள் தங்களுடைய நிலைக்கு மற்றவர் களை ஒரே நிமிடத்தில் கொண்டு வர முயற்சிப்பதும் இயலாத காரியமாகும். நல்ல வேலைக்கு அநேகம் இடை யூறுகள் ஏற்படுவது இயற்கையே. ஆகவே, கடவுள் சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட்டு வேலை செய்கிற வர்களுக்கும் அநேகம் இடையூறுகள் ஏற்படும். ஆகவே அவர்கள் தாம் மேற்கொண்ட வேலையில் நம்பிக்கை கொண்டு அதை ஊக்கத்தோடு செய்துகொண்டு போக வேண்டுமே யல்லாமல் துன்பங் கண்டு மனமுடைந்து முயற்சியைக் கைவிட்டு ஏங்கி யிருக்கக்கூடாது. எவ் வளவு கஷ்டம் வந்தபோதிலும் பொறுமையை இழக்கா மல் இருக்கவேண்டும். அப்போதுதான் நமது வேலைக் குத் தகுந்த பலன் நமக்குக் கிடைக்கும். இதனல்தான் 'பொறுத்தவர் பூமியாள்வார்' 'பொறுமைக் கடலினும்

பெரிது' என்பனபோன்ற பல பொன்மொழிகள் பொறு மையின் பெருமையைக் காட்ட ஏற்பட்டிருக்கின்றன.

'கிறிஸ்து மதத்தைத் தழுவிய மக்களுக்கு மாத் திரமே மோட்ச சாம்ராஜ்ஜியம் கிடைக்குமென்றும் மற்றவர்களுக்கு அம்மோட்ச சாம்ராஜ்ஜியம் கிடைக்கா தென்றும் எண்ணுவது தவறான காரியம்,' என்று மில்லர் வற்புறுத்திக் கூறியுள்ளார். கிறிஸ்தவர்கள் அல்லாதார் இடையிலும் கடவுள் நிலவித் தம் அரு ளொளியினைச் சொரிந்து அவர்களைச் சன்மார்க்கர்க ளாக்குகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

'கிறிஸ்து மதம் அல்லாத மற்ற மதங்கள் அனைத் தும் பிரயோசன மற்றதென்று கருதக்கூடாது,' என்று அவர் தம் உபந்நியாசத்தில் வற்புறுத்திக் கூறியிருக் கின்றார். 'எல்லா மதங்களும் கடவுளுடைய அருளைப் பெற்றவையாகும்,' என்பதை அவர் ஒப்புக்கொண் டிருப்பதுடன் அதை அவர் தம் பிரசங்கத்தில் மற்றவர் களுக்கும் தெரிவித்திருக்கின்றார். 'எந்த மதங்களும் இப்பூவுலகில் நிலவி இருக்கத்தக்கவை யன்று,' எனச் சிலர் கூறுவதும் முறையான வார்த்தையாக மாட்டா தென்றும் மில்லர் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். கடவுள் ஒரு சாராரிடத்தில்மட்டும் அன்பாய் இருக்கிறார் என்றும் மற்றவர்களிடத்தில் அன்பா யில்லையென்றும் எண்ணுவது பெருந்தவறென்றும் அவ்வாறு எண்ணுவ தனால்தான் அநேகம் தீங்குகள் ஏற்பட்டு வருகின்றன வென்றும் அவர் கூறியுள்ளார்.

'கடவுள் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோரிடத்தில் மக்களுக்கு நற்போதனைகளை அம்மக்களிற் சிலர் வாயி

லாகவே உபதேசித்துக் கொண்டு வருகிறார்,' என்று முன்னே கூறினோமல்லவா? ஆகவே, 'மற்ற மதங்களில் சொல்லப்பட்டுள்ள நல்ல விஷயங்களைக் கிறிஸ்து மதம் ஏற்றுக்கொள்ளுவது தனக்கு ஆக்கம் தேடிக்கொள்ளும் செய்கையாகும்,' என்று மில்லர் கூறினார். பின்னும் அவர், 'ஆரம்பத்தில் இந்தியாவில் கல்வியைப் பரப்ப முன் வந்த கிறிஸ்தவர்கள் ஸ்காட்லண்டு தேசத்தைச் சேர்ந்தவர்களாவரென்றும் அவர்களுக்குப் பின்னரே உரோமாபுரி முதலான மற்ற நாட்டினர் இந்தியாவில் கிறிஸ்து மதக் கல்வியைப் பரப்ப முயற்சித்தனர் என்றும் தம் பிரசங்கத்தில் கூறினார். 'கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கால தேச வர்த்தமானங்களை அநுசரித்துக் காரியங்களைச் செய்துகொண்டு போகவேண்டுமென்றும் அவ்வாறு செய்துகொண்டு போவதுதான் முறையாகும்,' என்றும் அவர் கூறியுள்ளார். பின்னும் அவர், கிறிஸ்தவப் பாதிரிமார்கள் மக்களுக்குத் தாங்கள் நன்மை செய்ய ஏற்பட்டவர்களென்று கருத வேண்டுமென்றும் மற்ற மதங்களையோ ஜாதியினரையோ தூஷிக்காமல் அவர்கள்பால் அன்பு கொண்டு எவ்விஷயங்களையும் செய்வதே முறையாகும் என்றும் கூறியுள்ளார்.

'ஜெனரல் அசம்பிளி' என்னும் மகா சபையின் நடை முறையின்போது மில்லர் சம்பந்தமாக நடந்தேறிய ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். கிறிஸ்தவக் கல்லூரியையும் 'ப்ரீ சர்ச்' சபையையும் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் மாணவர்கள் தாங்கள் எழுதிய ஒரு கடிதத்தில் தாங்கள் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கீழ் நாட்டிலும் மேல் நாட்டிலும்

ஜனங்களுக்கிடையில் சகோதர உணர்ச்சியை யுண்டாக்கப் பாடுபட்டு வருவதைக் கண்டு சந்தோஷப் படுவதாகவும், மேல் நாட்டிலிருந்து கீழ் நாட்டுக்கு வந்த பாதிரிமார்கள் கீழ் நாட்டின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் சிரத்தை கொண்டு பாடுபட்டு வருவதைப் பாராட்டுவதாகவும் எழுதி இருக்கின்றார்கள். பின்னும் அவர்கள் 'ரெவரெண்ட் ஜான் அண்டர்சன்' டாக்டர் மில்லர் ஆகிய இவர்களும் மற்றுமுள்ளவர்களும் தென்னிந்தியாவின் கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபட்டு வந்ததை மிகவும் பாராட்டி யிருக்கின்றார்கள். கல்லூரியை விட்டு வெளியேறிய பின்னருங்கூட அவர்களைக் கலாசாலை மாதாந்தச் சஞ்சிகையும் ஆண்டுதோறும் நடைபெறும் கல்லூரி வருடாந்தக் கொண்டாட்டமும் கட்டுப்படுத்திக் கல்லூரி விஷயத்தில் சிரத்தை பாராட்டும்படி செய்து வருகின்றனவென்றும் அவர்கள் தங்களுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பின்னும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி அநேக விஷயங்களில் தென்னிந்திய வித்தியார்த்திகளுக்கு நன்மை செய்திருக்கிறதென்றும் அந்த நன்மைகள் மறக்கத் தக்கவையல்லவென்றும் அவர்கள் தங்களுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நிற்க.

டாக்டர் மில்லர் ஒரு பிரசங்கத்தில், தம்முடைய முடிவுரையில், கூறிய விஷயங்களின் சாராம்சம்:

"கடவுளுடைய அருளானது நம்மிடத்திலும் நம்மைச் சுற்றிலும் இருந்துகொண்டு நம்மை நடத்தி வருகிற தென்பதை யாராலும் மறுக்க முடியாது.

கடவுளுடைய அருளினுல்தான் இவ்வுலகில் எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன. எல்லா மதங்களிலும் உள்ள நல்ல விஷயங்களை நாம் மேற்கொள்ள வேண்டுமேயன்றி அவைகளைத் தூஷித்துத் தள்ளி விடக் கூடாது."

## பதினேழாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும் பழைய மாணவர்களும்

டாக்டர் மில்லர் தம் கல்லூரியில் படித்த மாணவர்களிடம் அதிக அன்பு பாராட்டி வந்தார் என்று நாம் அடிக்கடி கூறி வந்தோமல்லவா? அதைக் குறித்தும் ஒரு சிறிது ஆராய்வோம்:

டாக்டர் மில்லர் தம் பழைய மாணவர்களை மறந்து விடாமல் அவர்களுக்கு அடிக்கடி கடிதம் எழுதிவந்தார். அவர் தம்முடைய காலத்தின் பெரும் பகுதியைத் தம் பழைய மாணவர்களுக்குக் கடிதம் எழுதுவதிலேயே கழித்து வந்தார். அவர் தம் பழைய மாணவர்களைப் பார்க்க வேண்டுமென்ற அவா மிகுதியினுலேயே 'டிசம்பர்' மாத விடுமுறையின்போது சென்னையை விட்டு எங்கும் செல்லாமல் சென்னையிலேயே இருந்து தம் பழைய மாணவர்களைக் கண்டு அவர்களுடன் அளவளாவிப் பேசி அவர்களுடைய க்ஷேம லாபத்தைக் கேட்டு இன்புறுவார். இப்பொழுது 'கிறிஸ்மஸ்' பண்டிகையின்போது சென்னைப் 'பீபில்ஸ் பார்க்'கில் வருடாந்த வைபவம் நடைபெறுகிறபோது வெளியூர்களி

விருந்தும் அநேக ஜனங்கள் அதைக்காண வருகிறார்கள் அல்லவா? இதுபோலவே மில்லர் காலத்திலும் சென்னைப் பீபில்ஸ் பார்க்கில் ஆண்டுதோறும் கொண்டாட்டம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. அதற்கு ஏராளமான ஜனங்கள் உள்ளூர் வெளியூர்களிலிருந்து வருவது வழக்கம். அப்போது அங்குத் தமது பழைய மாணவர்களும் வருவார்கள், அவர்களைக் காணலாம் என்று டாக்டர் மில்லர் அங்குச் செல்வார்; அங்கே தம் பழைய மாணவர்களைச் சந்திப்பார்; அவர்களுடன் அளவளாவிப் பேசுவார். அவர்களும் தங்கள் பழைய ஆசிரியரைக் காணும் பாக்கியம் தாங்கள் செய்தமைக்கு மகிழ்ந்து அவரைப் போற்றிக் கொண்டாடி அவர் கூறும் நன்மதிகளை உள்ளன்புடன் ஏற்று அதன்படி நடந்துகொள்ளுவார்கள்.

இவ்வாறு இருக்கையில் பீபில்ஸ் பார்க்கில் தீ விபத்து ஏற்பட்டதனால் சில ஆண்டுகள்வரை அங்கு நடைபெறும் வருடாந்த வைபவம் நின்று விட்டது. அதனால் டாக்டர் மில்லருக்கு டிசம்பர்மாத விடுமுறையில் தம் பழைய மாணவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் இல்லாமற் போய்விட்டது. அதற்காக டாக்டர் மில்லர் வருந்தாமல் இருக்கவில்லை.

தம்முடைய பழைய மாணவர்கள் தம்மைக் காண வந்தால் டாக்டர் மில்லர் அவர்களை உள்ளன்புடன் வரவேற்று உபசரிப்பார். 'இப்பொழுது நேரமில்லை; மற்றொரு சமயம் பார்க்கலாம்,' என்று அவர் தம் பழைய மாணவர்களுக்கு ஒருபோதும் சொல்லி அனுப்பியதே கிடையாது. எத்தகைய வேலை இருந்தபோதிலும்

தம் பழைய மாணவர்கள் வந்து விட்டால் அவ்வேலையை விட்டு விட்டு அவர் அவர்களை வரவேற்று அவர்களுடன் அளவளாவிப் பேசிக்கொண்டிருப்பார்.

தமது பழைய மாணவர்கள், உலகில் ஒழுக்கமுள்ளவர்களாய்ச் சிறந்து விளங்குகிறார்கள் என்று கேள்விப்பட்டால் டாக்டர் மில்லர் அதைக் காட்டிலும் தாம் தம் பழைய மாணவர்களால் பெறக்கூடிய பேறு வேறு யாதொன்று மில்லையென்று சந்தோஷிப்பார்.

1885-ஆம் வருஷத்தில் கிறிஸ்தவக் கல்லூரியின் கோபுரம் இடிந்து விழுந்துவிட்டது. உடனே கல்லூரியின் மாணவர்கள் தாங்கள் கல்லூரியின் அபிவிருத்தி விஷயத்தில் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த விரும்பி அக்கோபுரத்தை மறுபடியும் கட்டி முடிப்பதற்காக எண்ணாயிரம் ரூபா நன்கொடை யளித்தார்கள். நிற்க.

தெலுங்கு நாட்டைச் சேர்ந்த இந்துமத வாலிபன் ஒருவன் ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்தவனாயினான். அதை அறிந்த இந்துமத வாலிபர்கள் பலவாறு ஆரவாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் பொது ஜனங்களின் பிரதிநிதிகளா யிருந்தவர்களில் நிதான புத்தியுள்ளவர்களும் கல்லூரியின் பழைய மாணவர்களும் கல்லூரியின் சார்பாகப் பேசி ஆரவாரத்தை அடக்கினார்கள். இச்சம்பவம் நடைபெற்ற காலத்தில் டாக்டர் மில்லர் சென்னையில் இல்லை; ஸ்காட்லண்டு தேசத்தில் தங்கி யிருந்தார். கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய இந்து வாலிபன் தன் சொந்த அபிப்பிராயத்தின்படி கிறிஸ்தவ மதத்தைத் தழுவினானே

யன்றிப் பிறருடைய தூண்டுதலால் அவன் கிறிஸ்து மதத்தைத் தழுவவில்லை என்பது ஈண்டு கவனிக்கத் தக்கது. நிற்க.

டாக்டர் மில்லர் கிறிஸ்தவக் கல்லூரி மாதாந்தச் சஞ்சிகை வாயிலாகவும் தம் பழைய மாணவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தார். அந்தச் சஞ்சிகை யில் அவர் தம் பழைய மாணவர்களுக்கான அநேகம் குறிப்புகளை எழுதி வந்தார். அக்குறிப்புகளை அவருடைய பழைய மாணவர்கள் பெரிதும் விரும்பிப் படித்துப் பயன் அடைந்து வந்தார்கள்.

இவ்வாறாக டாக்டர் மில்லரும் அவருடைய பழைய மாணவர்களும் ஒருவரை ஒருவர் இடையறா அன்போடு நேசித்து வருவாராயினர்.

இவ்வன்பு என்றும் நிலைத்திருப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று மில்லரின் பழைய மாணவர்கள் விரும்பினார்கள். அவர்கள் விரும் பிய அளவிலேயே விஷயத்தை நிறுத்தி விடாமல் செய்கை அளவிலும் கொண்டு வரலானார்கள். பிறகு அவர்கள் 1891-ஆம் வருஷத்தில், டிசம்பர் மாதக் கடைசியில், கிறிஸ்தவக் கல்லூரியில் அக்கல்லூரியின் வருடாந்தக் கொண்டாட்டத்தை முதன் முதலாகக் கொண்டாடினார்கள். அக்கொண்டாட்டத்தில் பழைய மாணவர்கள் பலர் கலந்து கொண்டார்கள். கொண் டாட்டம் காலை ஏழுமணி முதல் இரவு எட்டுமணி வரை யில் சிறப்பாக நடைபெற்றதிலிருந்தே அக்கொண்டாட் டம் மிகச் சிறப்புடையது என்று தெரிகிறது. அது

முதல் அக்கொண்டாட்டம் ஆண்டுதோறும் நடை பெற்று வருகிறது.

டாக்டர் மில்லர் தேக அசௌக்கியம் காரணமாய் இந்தியாவை விட்டுச் சென்ற பிறகும் அவர் தம் பழைய மாணவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண் டிருந்தார். அவர் ஆண்டுதோறும் கல்லூரி தினக் கொண்டாட்டத்தை ஒட்டித் தம் பழைய மாணவர் களுக்கு நற்செய்தி அனுப்பிக்கொண்டிருந்தார். இந்த நற்செய்திகளினிடையே அவர் அநேக நல்ல விஷயங்க ளைத் தமது மாணவர்களுக்கு எடுத்துரைத்திருக்கின்றார். பின்னும் அவர் தம் மாணவர்கள் மூலமாகத் தம் அபிப் பிராயங்களை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவாராயி னர். கல்லூரி சம்பந்தமான பஞ்சாங்கம் (calendar) வெளியிட்டு அதில் அவர் தம் பழைய மாணவர் களைக் குறித்த விஷயங்களையும் எழுதி வந்தார். அவர் தம் பழைய மாணவர்களுக்குத் தம்மாலான உதவி களைச் செய்யப் பின்வாங்குவது கிடையாது. அவர் தம்முடைய சுதேசத்திற்குச் சென்ற பிறகு தமது பழைய மாணவர்கள் 'இங்கிலாந்து' 'ஸ்காட்லண்டு' முத லான நாடுகளுக்கு வந்தால் அவர் அவர்களைப் பேரன் புடன் வரவேற்று அவர்களுடன் அளவளாவிப் பேசி அவர்கள் மூலமாக இந்தியாவைப் பற்றிய விஷயங்களை யும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியைப் பற்றிய விஷ யங்களையும் மிகவும் ஆவலுடன் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார். அவருடைய பழைய மாணவர்களும் ஸ்காட்லண்டுக்குச் சென்றால் அவரைக் காணாமல் வருவது கிடையாது. தம்முடைய பழைய மாணவர்கள்

சிலர் ஸ்காட்லண்டுக்கு வந்தபோது அவர்களுக்கு மில்லர் பெருந்தகையார் விருந்து முதலியவைகளைச் செய்து வைத்து அவர்களை உபசரித்தனுப்பி யிருக்கின்றார். வருஷம் எத்தனை ஆனாலும் அவர் தம் பழைய மாணவர்களின் குரலொலியைக்கூட மறப்பதில்லை.

டாக்டர் மில்லருக்குப் பல்லாயிரக் கணக்கான கல்வியாளர்கள் மாணவர்களாய் இருந்தார்கள். கிறிஸ்தவக் கல்லூரி ஆண்டு நிறைவு விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுவது வழக்கம். அப்போது பழைய மாணவர்களிற் பலர் விஜயம்செய்து தம் ஆசிரியரான டாக்டர் மில்லரைக் கௌரவிப்பார்கள். தமது பழைய மாணவர்கள் கல்லூரி விழாவில் கலந்திருப்பதைக் காணுந்தோறும் டாக்டர் மில்லருக்குச் சந்தோஷம் பெருகும். அவர் தம் மாணவர்கள் மத்தியில் தாம் இருப்பதையே பேரின்பமாகக் கருதுவார்.

டாக்டர் மில்லர் தமது வயோதிகப் பருவத்தில் ஸ்காட்லண்டில் தங்கித் தம் காலத்தைக் கழித்து வந்தபோது அவருடைய மாணவர்களில் அநேகர் உயர்தரக் கல்வியை அபிவிருத்தி செய்துகொள்வதற்காக ஸ்காட்லண்டுக்குச் சென்றனர். அப்போது டாக்டர் மில்லர் அவர்களின் செவிக்கு நல்லமுதத்தை ஊட்டி அவர்களைக் களிப்பித்து வந்தார்.

டாக்டர் மில்லரை உள்ளன்புடன் நேசித்த மாணவர்கள் பலராவர். அவர்களில் ஒருவர் ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியார் அவர்களாவர். செட்டியாரவர்களிடத்தில் டாக்டர் மில்லருக்கு அதிக விசுவாசம் ஏற்பட்டிருந்தது. செட்டியாரும் டாக்டர் மில்லரைத்

தமது குருநாதராகப் பாவித்து அவரைப் போற்றி வந்தார்.

ஒரு சமயம் ஸ்ரீமான் ஓ. கந்தசாமி செட்டியார் அவர்கள் ஸ்காட்லண்டுக்குச் சென்றிருந்தார். அப்போது அவர் தம் குருநாதராகிய டாக்டர் மில்லரைக் காணச் சென்றார். டாக்டர் மில்லர் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்து அவரோடு சென்னையைப் பற்றியும் சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையைப் பற்றியும் அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தார்.

டாக்டர் மில்லருக்கு, அவர் தம் வயோதிகப் பருவத்தில், கண் பார்வை ஒருவாறு மங்கி இருந்தது. எனினும், அவர், தம் பழைய மாணவர்களை அவர்களுடைய குரலோசையினாலும் இன்னும் இவைபோன்ற பிற விஷயங்களாலும் எளிதில் உணர்ந்து உடனே அவர்கள் பெயரைச் சொல்லி விடுவார். ஒருநாள் ஸ்ரீமான் ஓ. கந்தசாமிசெட்டியார், தாம் ஸ்காட்லண்டுக்குப்போய் இருந்தபோது, எங்கேயோ வெளியில் சென்றிருந்து டாக்டர் மில்லருடைய இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தார். அவர் தம் குரலை ஒலிக்கவேயில்லை. ஆனாலும் டாக்டர் மில்லர் அவருடைய காலடியினாலான ஓசையைக் கேட்டு, 'ஹோ! கந்தசாமி! வந்திருப்பவர் தாங்கள் தானா?' என்று கேட்டார். நிற்க.

ஸ்ரீமான் கந்தசாமி செட்டியார் ஸ்காட்லண்டுக்கு வருகிறார் என்பதை அவர் லண்டனில் இருந்து எழுதிய கடிதத்தால் உணர்ந்து ஸ்காட்லண்டிலுள்ள 'ஸ்டார்லிங்' இரயில்வே ஸ்டேஷனிலிருந்து தம் ஜாகைக்கு வரும் வழியைப் பற்றிய விவரங்களை டாக்டர் மில்லர் தெளி

வாக அவருக்கு எழுதி அனுப்பினர். அதோடு நில்லாமல் அவர் தம் ஆட்களில் ஒருவனையும் ஸ்டார்லிங் இரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பிச் செட்டியார் அவர் களை அழைத்து வரச் செய்தார்.

டாக்டர் மில்லர் சென்னையை விட்டு ஸ்காட்லண் டிலேயே வசித்துக்கொண் டிருந்தபோதும் தம் பழைய மாணவர்களையும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியையும் மறக்கவில்லை. அவர் ஆண்டுதோறும் கல்லூரி தினக் கொண்டாட்டத்தின்போது கல்லூரிக்கு ஒரு நற் செய் தியை அனுப்பிக் கொண்டிருந்தார். அவர் கடைசி யாகக் கல்லூரி தினக் கொண்டாட்டத்திற்காக அனுப் பிய செய்தி மறக்கத் தக்கதன்று. அச்செய்தியை ஒவ் வொருவரும் படித்தறிய வேண்டும் என்னும் பேரவா வினல் அதை இங்கு வரையலானோம். அது பின் வருமாறு:

‘ கனவான்களே,

தேக சம்பந்தமான கஷ்டங்களுக் கிடையிலும் மிகுந்த பலக் குறைவுக் கிடையிலும் கல்லூரி தினக் கொண்டாட்டத்தை ஒட்டி உங்கள் மூலமாகக் கல்லூரி யின் பழைய மாணவர்களுக்கு ஒரு நற்செய்தியை அனுப்பக் கடவுள் எனக்கு ஓர் அளவுக்குச் சக்தி கொடுத்திருப்பதற்காகவும் அச் செய்தியை உங்களுக்கு அனுப்பக் கூடிய நிலையில் நான் இருப்பதற்காகவும் நான் சந்தோஷிக்கின்றேன். இந்தியாவில் இப்போது பலவிதக் கிளர்ச்சிகள் தோன்றி யிருக்கின்றன வென் பதை நான் அறிவேன். ஆனாலும் என்னுடைய பழைய மாணவர்களும் தென்னிந்தியாவிலுள்ள கண்

ணியம் வாய்ந்த பெருமக்களும் மிதவாதத் தன்மை யுடனும் விவேகத்துடனும் அவ்விஷயங்களைக் கவனித்து வருவது என் மனத்திற்கு ஆறுதலை யளிக்கின்றது. நானும் என்னால் கூடிய உதவிகளை இந்தியாவின் அபிவிருத்திக்காகச் செய்துவரக் கடமைப்பட்டவனாவேன்.

'ஒரு நாடு ஜன சமுதாய விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலும் முன்னேற்றமடைய வேண்டுமானால் அந்நாட்டிலுள்ள ஜனங்களுக்கிடையில் மனமார்ந்த ஒற்றுமையும் கூட்டுறவும் ஏற்படல் வேண்டும். ஒருவர் மற்றொருவருடைய அபிப்பிராயங்களையும் கொள்கைகளையும் கூடியவரையில் மதித்து நடக்க வேண்டுமே யன்றித் தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்ற நிலையில் காரியங்களைச் செய்தல் கூடாது. பொறாமை என்பதை அடியோடு ஒழித்துவிட்டு நாட்டிலுள்ள பல வகுப்பினர்களும் தங்களுக்குள் ஒற்றுமையும் ஒருவரை யொருவர் உள்ளவாறுணர்ந்து நேசிக்கும் பான்மையும் ஏற்படப் பலரும் பாடுபட வேண்டும். இத்தகைய ஒற்றுமையும் சிநேகத் தன்மையும் ஏற்பட்டால்தான் இந்தியா உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியும்.

'அன்பொன்றினாலேயே நாம் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறலாம். அன்பின் வழியிலேயே மக்கள் வாழ்கிறார்கள். அன்புடன் செய்யப்படும் காரியமே என்றைக்கும் நிலைத்தோங்கும். அன்பை அடிப்படையாகக் கொள்ளாத எவ்விஷயமும் நிலைத்தோங்காது. புராதன ஐரோப்பிய சாம்ராஜ்யங்களில் பல அழிந்து விட்டமைக்குக் காரணம் அவை அன்பை

அடிப்படையாகக் கொண்டு காரியங்களைச் செய்யா மையேயாகும். ஆகவே இந்தியா ஜன சமுதாய விஷயங் களிலும் அரசியல் விஷயங்களிலும் முன்னேற்ற மடைய வேண்டுமானால், இந்தியாவின் அபிவிருத்தியில் நாட்டமுடையவர்கள் ஒவ்வொருவரும், அன்பைப் பிரதானமாகக் கொண்டு எதையும் செய்யவேண்டும். அன்பு எங்கும் நிலவுவதாக !'

இவ்வாறு மில்லர் துரையவர்கள் எழுதிய விஷயம் நம்மனோரால் பொன்னேபோலப் போற்றத் தக்கவை யன்றோ ?

## பதினெட்டாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரும் உபாத்தியாயர்களும்

டாக்டர் மில்லர் தமது கல்லூரியில் திறமை வாய்ந்தவர்களையே ஆசிரியர்களாகநியமித்தார். அதனால் கல்லூரியின் பெயர் எங்கும் சிறப்பாகப் பரவியது. டாக்டர் மில்லர் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியின் அபிவிருத்திக்கு மட்டுமன்றிச் சுதேசக் கல்வி அபிவிருத்திக்காகவும் அரும்பாடு பட் டார். அவருடைய பாடு பிரயோசன முள்ளதாயிற்று.

சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் தமிழ் அறிஞர் களாய் அமர்ந்திருந்த ஸ்ரீமான் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சுவாமி வேதாசலம், திரு. சின்னசாமி பிள்ளை, திரு. அரங்கசாமிராஜு, ஸ்ரீ மகாதேவ முதலி

யார், திரு. அனவரத விநாயகம் பிள்ளை முதலானவர்கள் தமிழ்ப் புலமையிலும் ஆங்கிலப் புலமையிலும் தேர்ந் தவர்களாவார்கள். இப்போது அக்கல்லூரியில் தமிழ்ப் பேரறிஞராய் இருப்பவராகிய ஸ்ரீமான் சற்குணர், பி.ஏ., அவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் பேரறிவு படைத்தவர் என்பதை அனைவரு மறிவர். அவருடைய பேராற்றலினால் பல மாணவர்கள் தமிழ்க் கல்வி பயின்று வருகிறார்கள். ஆங்கில பாஷாபிவிருத்தியில் கிறிஸ்தவக் கல்லூரி தலை சிறந்து விளங்குவதைப்போலவே தமிழ்ப் பாஷாபிவிருத்தியிலும் ஸ்ரீமான் சற்குணர் அவர்களின் தலைமையின் கீழ் தலை சிறந்து விளங்கி வருதல் பெரிதும் போற்றத்தக்கதாம்.

சில வருஷங்களுக்கு முன் வரையில் அரசாங்கக் கல்வி ஸ்தாபனங்கள் தவிர மற்றக் கல்வி ஸ்தாபனங் களில் வேலை செய்துகொண்டிருந்த உபாத்தியாயர் களுக்குப் பெரும்பாலும் அவர்களுடைய பிற்காலத்திற் குரிய க்ஷேமநிதி ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை. அவர் களுக்கு வேலை செய்தவரையில் பிழைப்புக்கு இடம் கிடைத்து வந்தது. அவர்களுடைய வயோதிகக் காலத்திலும் வேலைசெய்யச் சக்தியற்ற காலத் திலும் அவர்களுக்கு ஒருவிதமான உதவியும் அவர்கள் வேலைசெய்த பள்ளிக்கூடங்களிலிருந்து கிடையாம லிருந்தது. இதைக் கண்ட டாக்டர் மில்லர் உபாத்தி யாயர்களின் பிற்கால வாழ்க்கைக்கான அநுகூலங் களைச் செய்ய முயன்றார். உபாத்தியாயர்கள் பள்ளிக் கூடத்திலிருந்து விலகிச் செல்லும்போது அவர்களுக் குப் பண உதவி செய்ய டாக்டர் மில்லர் 'டீச்சர்ஸ்

ரிடையரிங் பண்ட்’ என்ற க்ஷேமநிதி ஒன்றை ஏற் படுத்தினர். இந்த நிதி உபாத்தியாயர்களுக்கு மிகவும் நன்மை செய்தது.

நமது அரசாங்கத்தினர் இப்போது அரசாங்கப் பள்ளிக்கூடமல்லாத மற்றப் பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் உபாத்தியாயர்களின் நன்மைக்கென ‘ப்ராவி டண்ட் பண்டு ஸ்கீம்’ என்னும் ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கின்றார்கள்.

டாக்டர் மில்லர் தம் மாணவர்களை நேசித்ததைப் போலவே உபாத்தியாயர்களையும் நேசித்து அவர்களுக் கான நன்மைகளை யெல்லாம் செய்து வந்தார். உபாத்தி யாயர்களும் டாக்டர் மில்லரைத் தங்களுடைய மூத்த சகோதராகப் பாவித்து அவருடைய ஆலோசனைகளை ஏற்று அவற்றின்படி நடந்து வந்தார்கள். மேல் வகுப்பு களுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர் களை ஒருவிதமாகவும் கீழ் வகுப்புகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களை மற்றொரு விதமாகவும் அவர் நடத்தியதே கிடையாது. எல்லா உபாத்தியாயர்களையும் அவர் ஒரேவிதமாக நேசித்து வந்தார்.

சில தலைமை உபாத்தியாயர்களும் கல்லூரித் தலை வர்களும் மேல் வகுப்புகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களை ஒருவிதமாகவும் கீழ் வகுப்புகளுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்கும் உபாத்தி யாயர்களை மற்றொருவிதமாகவும் நடத்துவதுண்டு. டாக்டர் மில்லரோ உபாத்தியாயர்கள் அனைவரும் ஒரே பாகுபாட்டில் அடங்குபவர் ஆவர் என்றும், அவர்

களிடம் உயர்வு தாழ்வு காட்டக் கூடாதென்றும், அவ்வாறு உயர்வு தாழ்வு காட்டுவதனுல் கலாசாலையில் முறையான கல்வி அபிவிருத்திக்குத் தடை ஏற்படுமென்றும் கருதினுர். நிற்க.

மாணவர்களுக்கு ஒழுக்கம், கல்வி ஆகிய இவைகள் இளம் வயதிலேயே ஏற்பட வேண்டும். இளம் வயதில் ஒழுக்கம் ஏற்பட்டால்தான் அவ்வொழுக்கம் நாளடைவில் விருத்தியாகி விழுப்பம் தரும். கல்வியும் இளமையிலேயேதான் கஷ்டமின்றி விருத்தியாகும். இளமையிற் கற்ற கல்வி பசுமரத்தாணியைப் போன்று உள்ளத்தில் பதிந்து நாளடைவில் கற்றதினுலாய பயனைத் தரும். அவ்வாறு இளமையில் கல்லாத கல்வி பெரும் பயனை அளிப்பது இல்லை. முதுமைக் கல்வி நுனிப் புல் மேய்ச்சலுக்குத்தான் தகுதியானதாகும். இதை நோக்கியே ஔவைப் பிராட்டியாரும் மக்கள் இளமையிற் கற்பது அவசியம் என்பதை உணர்த்துவான் வேண்டித் தாம் இயற்றிய ஆத்திசூடியில் கைம்மாறு கருதாமல் பரோபகார நிமித்தம், 'இளமையிற் கல்,' என்னும் உயர்ந்த வாக்கினை உவந்தளித்திருக்கின்ருர்.

டாக்டர் மில்லர் தமது மாணவர்களிடம் ஒழுக்கம் நிறைந்து இருப்பதற்காக அநேக நற்காரியங்களைச் செய்து வந்தார். நாடும் நாட்டிலுள்ள மக்களும் நல்ல நிலையை அடைவதற்கு இன்றியமையாததாய் இருப்பது ஒழுக்கமே என்பதை டாக்டர் மில்லர் நன்ருய் உணர்ந்திருந்தாராகையால் அவர் தம் மாணவர்களிடம் ஒழுக்கம் நிலைபெற்றிருப்பதற்காக அரும்பாடு பட்டார். ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே கல்வியாகுமென்றும்

மற்ற கல்வியெல்லாம் சொல்வன்மையைக் காட்டுவ தாகுமென்றும் மில்லர் கூறியுள்ளார். மாணவர்களே ஒரு தேசத்தின் பிற்கால பிரஜைகளாவர். அவர்கள் நல்ல முறையில் கல்வி பயின்று அதனாலான பிரயோ சனத்தைப் பெற்றிருந்தால் தான் அவர்களுடைய நாட் டுக்கும் நாட்டு மக்களுக்கும் அவர்களால் நன்மை உண் டாகக் கூடும்.

ஒரு தேசத்தின் முன்னேற்றமோ சீர்கேடோ அந்நாட்டு ஆசிரியர்களையே பொறுத்திருக்கிறது. ஆசிரி யர்கள் நல்லவர்களாகவும் ஒழுக்கம் நிறைந்தவர்களாக வும் இருந்தால்தான் அவர்களிடத்தில் கல்வி கற்கும் மாணவர்களும் ஒழுக்க சீலர்களா யிருப்பார்கள். டாக் டர் மில்லர் தம்முடைய ஒழுக்கமிகுதியினாலேயே தம் மாணுக்கர்களுக்குத் தம்மிடம் மதிப்பு ஏற்படும்படி செய்தார். 'அரசன் எவ்வழியில் செல்கின்றானோ அவ் வழியிலேயே குடிகளும் செல்வார்கள்,' என்பது பழ மொழி யல்லவா? டாக்டர் மில்லரும் அவர் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஒழுக்கமே உரு வெடுத்து வந்தாற்போ லிருந்தார்கள்.

## பத்தோன்பதாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரின் உறவினர்கள்

டாக்டர் மில்லர் கீர்த்தி வாய்ந்ததும் நன்னோக்கங்களுக்கு இருப்பிடமானதுமாகிய கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவரல்லவா? அவருடைய உறவினர்கள் தான தருமம் செய்வதில் பேர்போனவர்கள். அவர்கள் செய்த தருமங்கள் அநேகம் இன்றைக்கும் நடைபெற்று வருகின்றன. டாக்டர் மில்லருடைய மாமன்மாரில் ஒருவர் தர்ஸோ பட்டினத்தில் ஏற்படுத்திய கல்லூரி இன்றைக்கும் நடைபெற்று வருகிறது. டாக்டர் வில்லியம் மில்லருடைய தகப்பனாகிய வில்லியம் மில்லரும் இந்தியாவின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் கவலைகொண்டு உழைத்து வந்தார். டாக்டர் மில்லருடைய தாயாரும் தென்னிந்தியாவின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் ஊக்கம் காட்டி வந்தமைப் பாராட்டத் தக்கதேயாம்.

டாக்டர் மில்லருடைய மாமன்மாரில் ஒருவருடைய பெயர் 'டோனல்டு கன்' என்பதாகும். அவருடைய மனைவியின் பெயர் 'மார்காட் கன்' என்பதாகும். அவர்கள் இருவருக்கும் ஒரு குமாரன் இருந்தான். அந்தக் குமாரனின் பெயர் 'ஜாண் கன்' என்பதாகும். அக்குமாரன் காலகதியால் தன் தாய் தந்தையர் இறப்பதற்கு முன்னரே இறந்து விட்டான். பெற்றோர்கள் தங்களுக்கு ஏற்பட்ட புத்திர சோகத்தை நீக்கிக்கொள்ள வெண்ணிப் பலவிதமான தான தருமங்

களைச் செய்தார்கள். அவ்வாறு அவர்கள் செய்த தான தருமங்களில் அவர்கள் கிறிஸ்தவக் கல்லூரியில் ஏற்படுத்திய உபகாரச் சம்பள ஏற்பாடும் பொற்பதக்கப் பரிசளிப்பும் அடங்கும். 'மிஸஸ் மார்கரெட் கன்' தம் சொந்த ஹோதாவில் கிறிஸ்தவக் கல்லூரிப் புத்த காலய அபிவிருத்திக்காக ஓராயிரம் பவுன் நன்கொடை யாக அளித்துள்ளார்.

தருமங்கள் பலவகைப்படும். நமது முன்னோர்கள் தருமத்தை முப்பத்திரண்டுவிதமாகவகுத்திருக்கிறார்கள். அவைகளில் அன்னதானம் சிறந்ததேயாயினும் அதற் கடுத்த நிலையில் இருப்பது கல்வி தானமேயாகும். கல்வி ஒன்றே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு வகைப் புருஷார்த்தங்களையும் நல்கக் கூடியதா யிருத் தலினால் கல்வி தானமே சிறந்த தானமாகும். இதை யெல்லாம் உத்தேசித்தே நமது முன்னோர்கள் மடங் களையும் மடாலயங்களையும் கட்டி வைத்து அவைகளின் நிருவாகத்துக்கென்று அளவற்ற பொருள்களைத் தான மாக வைத்துச் சென்றார்கள். இத்தகைய நல்ல எண் ணத்தோடு நமது முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட மடங்கள் மடாலயங்கள் ஆகிய இவைகளிற் சில நாளடைவில் வேறு வகையில் மாறிச் சென்றன. நமது நாடு நல்ல நிலைக்கு வரவேண்டும். அதற்காக நாம் அனைவரும் பாடுபடவேண்டும். எங்கெங்கும் கல்வி மணம் கமழ்தல் வேண்டும். மக்கள் கல்வியாலாய பயனை எய்தி இறைவனை உணர்தல் வேண்டும். இஃதன்றோ மானிட யாக்கையை யடைந்தவர் பெரும்பேறாகும்.

நமது நாட்டுக்கு இதுகாலே வேண்டுவது சாதாரணக் கல்வி மாத்திரமன்று; தொழிற் கல்வியும் அவசியம் ஏற்படவேண்டும். நாடெங்கும் தொழிற்சாலேகள் ஏற்படவேண்டும். ஏழை மக்களின் பசிப்பிணி ஒழிதல் வேண்டும். ஏழைகளுக்காக ஆங்காங்குப் புத்தகாலயங்கள் ஏற்படல் வேண்டும். நிற்க.

டாக்டர் மில்லர் தாம் இந்தியாவுக்கு வந்து கல்வி அபிவிருத்திக்காகத் தம் உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றையும் அர்ப்பணஞ் செய்ததோடு தம் உறவினரிலும் இருவரை இந்தியாவுக்கு வந்து கல்விக்காக உழைக்கும்படி செய்தார். அவர்கள் இருவரும் டாக்டர் மில்லர் இஷ்டப்படியே இந்தியாவுக்கு வந்து கல்வி அபிவிருத்திக்காக அரும்பாடு பட்டனர். அவர்களில் ஒருவர் 'மாண்டீத் மெக்பெயில்' என்னும் பெயரினர் ஆவர். மற்ருெருவர் 'ரெவரெண்ட் ஜெ. எம். ரஸ்ஸல்' என்னும் பெயரினராவர். பின்னுல் சொல்லப்பட்டவர் 1913-ஆம் ஆண்டு வரையில் சென்னேக் கிறிஸ்தவக் கல்லூரியில் சேவை செய்து வந்தார். பிறகு அவர் உடல் நிலே தளர்ந்தது. அதனுல் அவர் வைத்தியர்களுடைய அபிப்பிராயத்திற் கிணங்கிச் சென்னேயை விட்டுத் தம் சுதேசம் சென்ருர். அங்கு ஐந்தாண்டுகள் சென்ற பின்னர் அவர் இறைவனுடைய திருவடி நீழலே அடைந்தார். மற்ருெருவராகிய 'மிஸ்டர் மாண்டீத் மெக் பெயில்' அவர்களும் டாக்டர் மில்லருக்குப் பெருந் துணேவராயிருந்து அநேக அரிய பெரிய காரியங்களேச் செய்து சென்னேக் கிறிஸ்தவக் கல்லூரியின் அபிவிருத்திக்காக இரவும் பகலும் ஓயாது உழைத்து

வந்தார். அவர் உழைப்பினுலும் கல்லூரிக்கு மிகவும் நன்மை உண்டாயிற்று.

டாக்டர் மில்லருக்கு ஓர் அரிய சகோதரர் இருந்தார். அவரும் கிறிஸ்தவக் கல்லூரியின் அபிவிருத்திக்காகப் பெரிதும் பாடுபட்டார். அவருடைய பெயர் 'ரெவரெண்ட் டாக்டர் அலெக்ஸாண்டர் மில்லர்' என்பதாகும். அவர் கிறிஸ்தவக் கல்லூரிக்குப் பல வகையிலும் உதவி செய்திருக்கிருர். அவ்வுதவிகள் அளவற்றன. நாம் கிறிஸ்தவக் கல்லூரியின் பஞ்சாங்கத்தை (Calendar) எடுத்துப் பார்ப்போமாயின் டாக்டர் அலெக்ஸாண்டர் மில்லருடைய உதவியைப் பற்றிய விவரங்களை அறியலாம். அவர் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி பயிலும் வித்தியார்த்திகளின் நன்மைக்காக உபகாரச் சம்பளம் பரிசளித்தல் முதலிய பல ஏற்பாடுகளையும் இன்னும் இவைபோன்ற பிறவிஷயங்களுக்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளார். அவர் ஆங்கிலம், கணக்கு, பூத பௌதிக சாஸ்திரம் ஆகிய இவைகளின் அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகளையும் செய்திருக்கிருர். அவர் சமஸ்கிருத பாஷையின் அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

முன்னே ஓர் அத்தியாயத்தில் டாக்டர் மில்லர் கல்லூரி ஆசிரியர்களின் நலத்தைக் கருதி 'ரிடையரிங் பண்ட்' என்னும் பெயரினைக் கொண்ட க்ஷேமநிதி ஒன்றை ஏற்படுத்தினுர் என்று கூறினேமல்லவா? அந்த நிதிக்கு டாக்டர் மில்லருடைய சகோதரராகிய ரெவரெண்ட் டாக்டர் அலெக்ஸாண்டர் மில்லர் என்பாரும் ஓர் ஆயிரம் பவுன் நன்கொடையாக அளித்துள்ளார்.

இவ்விஷயம் பெரிதும் போற்றத்தக்கதே யன்ஜே? அவர் 'ஹாஸ்டல்' 'என்னும் விடுதிச் சாலைகளிலுள்ள புத்தகாலயங்களுக்கும் அநேகம் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்திருக்கின்றார்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று'

என்பது பொய்யா மொழியல்லவா? அதற்கிணங்க டாக்டர் மில்லரும் அவருடைய சகோதாராய டாக்டர் அலெக்ஸாண்டர் மில்லரும் தோன்றிப் புகழ் எய்தியமை ஈண்டுப் பெரிதும் போற்றத் தக்கதாம்.

டாக்டர் அலெக்ஸாண்டர் மில்லர் இந்தியாவுக்கு வந்தபோது அவர் தம் சகோதரரின் விருந்தினராய் இருந்தார். எனினும், அவருடைய வருகையைக் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த அனைவருமே ஒரு பெரிய சம்பவமாகக் கருதி அவரை உள்ளன்புடன் வரவேற்று உபசரித்தனர். அவர் மூன்றுமாதகாலம் தென்னிந்தியாவில் சுற்றுப் பிரயாணஞ் செய்து அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டார். அவர் இந்தியர்களிடத்தில் அதிக அன்பும் விசுவாசமும் கொண்டிருந்தார்.

டாக்டர் மில்லருடன் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆசிரியராயிருந்து உழைத்தவர்களில் ஒருவர் டாக்டர் கூப்பர் என்பவராவர். அவர் டாக்டர் மில்லருக்கு அத்தியந்த நண்பராகவும் ஆன்ம நேயராகவும் இருந்தார். டாக்டர் கூப்பரைச் சிறந்த உள்ளத்துறவி என்றே கூறிவிடலாம். அவர் ஆடம்பரத்தை விரும்பினவர் அல்லர்; குழந்தையைப் போல ஆடம்பரமற்று இருப்பவராவர். ஆனால் அறிவிலோ அவர் ஒரு முனி

வரேயாவர். டாக்டர் மில்லர் எந்த விஷயத்தில் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் டாக்டர் கூப்பரோடு பேசி அந்தச் சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ளுவார். டாக்டர் கூப்பர் இந்தியாவுக்கு வந்தமைக்கு டாக்டர் மில்லரே காரணராவர். டாக்டர் கூப்பரை மாணவர்கள் பெரிதும் போற்றினர்கள். அவர் இந்தியாவை விட்டுத் தம் சுதேசம் செல்லப் புறப்பட்டபோது அவருடைய பழைய மாணவர்கள் அவருடைய திருவுருவப் படம் ஒன்றைச் செய்து அதைக் கல்லூரிக்குக் கொடுத்தார்கள். நீதிபதி சுந்தரம் ஐயரவர்கள் டாக்டர் கூப்பரைப் பற்றிக் கூறுகையில், 'டாக்டர் கூப்பர் ஒரு மகரிஷியாவர்,' என்று கூறினர்.

## இருபதாம் அத்தியாயம்

### டாக்டர் மில்லரின் அந்திய காலம்

டாக்டர் மில்லர் இடையரு உழைப்பை மேற்கொண்டிருந்தபடியால் அவர் அடிக்கடி தம் தேக நலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்காகத் தம் சுதேசம் சென்று அங்குச் சில மாதகாலம் தங்கி யிருந்து பிறகு சென்னேக்குத் திரும்பி வருவது வழக்கம். அவர் சேர்வராயன் மலேயிலுள்ள ஏர்க்காட்டில் 'எச்சின் காடு' என்ற பங்களா ஒன்றைக் கட்டி அதில் தம் உடல் நலத்தைக் கருதி விடுமுறை காலங்களில் சென்று வசித்து வந்தார். அவர் உடல் நலம் நாளடைவில் மிகவும் குன்றிவிட்டபடியால் அவர் தம் அந்தரங்க

நண்பராய டாக்டர் கூப்பர் வேலையை விட்டு விலகிச் செல்லும்போது அவருக்காகக் கூட்டப்பட்ட உப சாரக் கூட்டங்க ளனைத்திலும் கலந்து கொள்ள முடியவில்லை. அதற்காக அவர் பெரிதும் வருந்தினர். 1902-ஆம் வருஷத்தில் அவருடைய உடல் நிலையானது பெரிதும் குன்றிவிட்டது. அப்போது அவர் ஏர்க் காட்டில் வசித்துக்கொண்டிருந்தார். அதனல் அவர் சென்னைக்கு வந்து அந்த வருஷக் கடைசியில், டிசம்பர் மாதத்தில், நடைபெற்ற கல்லூரி தினக் கொண்டாட்டத் தில் கலந்து கொள்ளவில்லை. அவர் சேர்வாராயன் மலை யில் இருந்தாலும் அவருடைய எண்ணம் கல்லூரியைப் பற்றிய விஷயத்திலேயே பதிந்திருந்தது. அவர் எங்கிருந் தாலும் அவருடைய எண்ணமெல்லாம் கல்லூரியின் மீதே இருந்து வந்தமை பெரிதும் பாராட்டத்தக்க தன்றோ? அவர் வேத புத்தகமாகிய பைபிளின்பால் அதிக ஆர்வம்கொண்டு அதனைப் பெரிதும் விரும் பிப் படித்து வந்தார். அவர் ஷேக்ஸ்பியர் மகாகவியின் நாடகங்களையும் பிரியத்தோடு படிப்பார். அவைகள் அவருக்குத் துன்பமேற்பட்டபோது ஆறுதலை அளித்து வந்தன.

டாக்டர் மில்லர் 1904-ஆம் வருஷத்தில் தம் சுதேசமாகிய ஸ்காட்லண்டுக்குச் சென்ருர். அப் போது அவர் 'யுனைடெட் ப்ரீ சர்ச்' என்னும் மத சங்கத்தைச் சேர்ந்த 'ஜெனரல் அசம்பிளி' என்னும் பொதுக் கூட்டங்கள் பலவற்றில் கலந்து உழைத்து வந்தார். அப்போது இங்கிலாந்தில் பார்லிமெண்டில் லார்டு சபையார் செய்த ஒரு தீர்மானம் ப்ரீ சர்ச்

மிஷன் என்னும் மதச் சபையைச் சேர்ந்தவர்களுக்குப் பெருத்ததொரு தீமையை இழைக்கக்கூடியதாயிருந்தது. லார்டு சபையார் செய்த தீர்மானம் என்னவென்பதைக் குறித்து ஒரு சிறிது ஆராய்வோம் : 1900 வருஷத்தில் ஸ்காட்லண்டு ப்ரீ சர்ச் மிஷன் சங்கம் ஸ்காட்லண்டு 'யுனைடெட் பிரஸ் பைடிரியன் சர்ச் மிஷன்' என்னும் சங்கத்துடன் சேர்ந்து விட்டது. அதைச் சிலர் அங்கீகரியாமல் தாங்கள் வேறு பிரிந்திருந்தார்கள். அவர்கள் லார்டு சபையின் முன் தங்கள் குறைகளை விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அவ் விண்ணப்பத்தை ஏற்ற லார்டு சபையினர், 'ப்ரீ சர்ச் மிஷன் சங்கத்தாருக்கு அவர்கள் யுனைடெட் பிரஸ் பைடிரியன் சர்ச் மிஷன் சங்கத்தாருடன் சேர்வதற்கு முன் எவ்வளவு சொத்துக்கள் இருந்தனவோ அவ்வளவு சொத்துக்களையும் விண்ணப்பதாரர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும்,' என்று தீர்மானித்தனர். இத்தீர்மானப்படி 'ப்ரீ சர்ச் மிஷ'னைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குச் சொந்தமான பத்து இலட்சம் பவுன்களுக்கு மேற்பட்ட தொகையை இழந்துவிட வேண்டியவர்களானார்கள்.

விஷயம் இவ்வாருகவே டாக்டர் மில்லர் பின்னுஞ் சில மாதகாலம் ஸ்காட்லண்டிலேயே இருக்க வேண்டியவரானார். அவர் அங்குச் சும்மா இராமல் ஸ்காட்லண்டின் பல பாகங்களிலும் கிறிஸ்தவர்கள் இந்தியாவில் கல்வி அபிவிருத்திக்காகப் படும் பாட்டைக் குறித்துப் பிரசங்கம் செய்து வந்தார்.

பிறகு 1905-ஆம் வருஷத்தில், 'ராயல் கமிஷன்' ஒன்று நியமிக்கப்பட்டு நாம் மேற்கூறிய லார்டு சபை

யார் செய்த தீர்மானத்தைப் பரிசீலனை செய்தது. அந்த 'ராயல் கமிஷனின்' தலைவராய் அமர்ந்தவர் 'லார்டு எல்ஜின்' என்பவராவர். அக்கமிஷன் முன்னிலையில் டாக்டர் மில்லர் சாட்சியம் கூறுகையில் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியைக் குறித்தும் சென்னை 'யுனைடெட் ப்ரீ சர்ச் மிஷன்' சங்கத்தைக் குறித்தும் பல விஷயங்களை வெளியிட்டார். அவர் கூறிய விஷயங்கள் ஆணித்தரமானவை என்று கமிஷன் அங்கத்தினர் அறிந்து கொண்டனர். ஆகவே அவர்கள் தங்களுடைய தீர்மானத்தில், 'ப்ரீ சர்ச் மிஷன் சங்கத்தைச் சேர்ந்த சொத்துகள் எல்லாம் "யுனைடெட் ப்ரீ சர்ச்" மிஷனுக்குச் சேரவேண்டும். குறிப்பிடப்பட்ட மிஷன்களுக்கு எழுதி வைக்கப்பட்ட சொத்துகள் யுனைடெட் ப்ரீ சர்ச் மிஷன் சங்கத்துக்குச் சேரவேண்டும்,' என்று கூறினர்கள்.

கமிஷன் அங்கத்தினர்கள் மேற்கூறியவாறு தீர்மானஞ் செய்தமைக்குக் காரணம் டாக்டர் மில்லருடைய அரும்பெரும் முயற்சியேயாகும். டாக்டர் மில்லருடைய இடையரு உழைப்பு இல்லையானல் ப்ரீ சர்ச் மிஷனைச் சேர்ந்த சொத்துகள் லார்டு சபையினரின் தீர்மானத்திற் கிணங்க ஒரு சிறு குழுவினர் வசமே சேர்ந்திருக்கும்.

டாக்டர் மில்லருக்கு அவருடைய வயோதிகப் பருவத்தில் அதிக மனக் கவலையை யுண்டாக்கியது 'அர்ப்பத்னட் பாங்கி'யின் முறிவேயாகும். இந்தப்பாங்கியில் சிறந்த தனவந்தர் அநேகர் பணம் சேர்த்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய பணமெல்லாம்

இந்தப் பாங்கி முறிந்து விடவே ஒழிந்தது. இந்தப் பாங்கியின் முறிவு காரணமாக அநேகம் குடும்பங்கள் அழிவுற்றன. 'பணம் போய்விட்டதே' என்று ஏங்கி அதனுல் மாண்டவர் பலராவர்.

கிறிஸ்தவக் கல்லூரியின் ஆசிரியர்களான 'கெல் லட்,' 'இராகவைய செட்டி' முதலியவர்களின் ஞாபகார்த்த வைபவத்திற்காகப் பணம் வசூலிக்கப்பட்டு அஃது 'அர்ப்பத்னெட் பாங்கியில்' வட்டிக்கு விடப்பட் டிருந்தது. கல்லூரி தினக் கொண்டாட்ட நிதியும் கூப்பர் சன்மான நிதியும் அர்ப்பத்னட் பாங்கியிலேயே கட்டப்பட்டிருந்தது. அர்ப்பத்னட் பாங்கி முறிந்து விடவே அதில் கட்டப்பட்டிருந்த மேற்கூறிய நிதிகள் ஒழிந்தன. ஆனுல் நல்ல காலங் காரணமாகக் கல்லூரிக் குச் சொந்தமான தொகை அர்ப்பத்னட் பாங்கியில் கட்டப்படாமல் 'மெஸர்ஸ் பின்னி அண்டு கம்பெனி' யார் வசம் இருந்தபடியால் அந்தத்தொகைக்குப் பங்கம் ஏற்படவில்லை. அர்ப்பத்னெட் பாங்கி முறிந்துவிடவே ஜனங்கள் தாங்கள் பின்னி கம்பெனியில் கட்டி இருந்த பணத்தை வாங்க ஆரம்பித்தார்கள். எல்லோரும் ஒரே காலத்தில் பணம் கேட்கவே பின்னி கம்பெனியார் எல்லோர் பணத்தையும் ஒரே காலத்தில் திருப்பிக் கொடுக்க முடியாமல் விழித்துக்கொண் டிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் மில்லர் தம் சொந்தப் பணம் அந்தக் கம்பெனியில் இருந்தும் தாம் அந்தக் கம்பெனிக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாதென்று எண்ணி அந்தக் கம்பெனியில் பணம் போட்டவர்களின் கூட்டமொன்றை நடத்தி, 'கம்பெனியாரிடம் நமக்குக்

கொடுக்கவேண்டிய தொகைக்ககதிகமாகவே சொத்துகள் இருக்கின்றன. ஆகவே, நாம் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும்,' என்று கூறினார். மில்லர் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வெற்றி வீரனைப் போல நடந்துகொண்டார். கடைசியில் பின்னி கம்பெனியார் எல்லோருக்கும் முழுத் தொகையையும் கொடுக்கக் கூடியவர்களாயினர். டாக்டர் மில்லர் பொறுமையாய் இராமல் மற்ற ஜனங்களைப் போலவே தாமும் நடந்திருப்பாரானால் பின்னி கம்பெனிக்கு அதிக கஷ்டம் எற்பட்டு இருக்கக்கூடும். டாக்டர் பிறருடைய கஷ்டங்களையும் தம் கஷ்டம் போலவே நினைக்கும் சுபாவ முடையவர் என்று முன்னரே கூறினோமல்லவா? அதற்கேற்ப அவர் இச்சந்தர்ப்பத்தில் நடந்துகொண்டமை பெரிதும் பாராட்டத் தக்கதாம்.

டாக்டர் மில்லர் செய்து வந்த அரிய பெரிய காரியங்களினால் அவருடைய உடல்நிலை தளர்ந்து அவருக்கு அதிக கெடுதியை உண்டாக்கியது. அவர் அதைப் பொருட்படுத்தாமல் 'கருமமே கண்ணாயினார்' என்பதற்கிணங்கத் தாம் மேற்கொண்ட காரியங்களை நிறைவேற்றுவதிலேயே பெரிதும் உழைத்து வந்தார். இவ்வாறு அவர் உழைத்து வந்தமையால் அவருடைய கண் பார்வை குறைந்து கொண்டே வந்து நாளடைவில் மிகவும் குறைந்தது. முதலில் இவ்விஷயம் டாக்டர் மில்லருடைய வைத்தியரைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியவே தெரியாது. கடைசியில் டாக்டர் மில்லர் தம்முடைய கண் பார்வை குறைந்து வருகிறதென்றும், ஆகவே டாக்டர்கள் தம்மை உழைக்கக் கூடாதென்

றும் படிக்கக் கூடாதென்றும் கட்டளையிடுகிறார்களென்றும், அவர்களுடைய கட்டளையைத் தாம் மேற்கொள்வது அவசியமாய் இருக்கிறதென்றும் அவர் தம் பழைய மாணவர்களுக்கும் புதிய மாணவர்களுக்கும் கல்லூரித் தினக் கொண்டாட்டத்தின்போது தெரியப்படுத்தினர். அதைக்கேட்ட மாணவர்கள் அனைவருமே பெரிதும் வருந்தினர்கள்.

அப்போது டாக்டர் மில்லருடைய நண்பர்களில் பலரும் டாக்டர்களில் சிலரும் மில்லர் ஐரோப்பாவுக்குச் சென்று அங்குள்ள டாக்டர்களிடம் கலந்து கண்ணுக்குச் சிகிச்சை செய்து கொண்டால் கண் பார்வை சரிப்பட்டு விடுமென்று சொன்னர்கள். அவர்களுடைய வார்த்தையை மேற்கொண்ட டாக்டர் மில்லர் 1907-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் சென்னையை விட்டுப் புறப்பட்டுத் தம் சுதேசத்திற்குப் பிரயாணமானர்.

டாக்டர் மில்லருக்குச் சென்னையை விட்டுப் போகவே பிரியமில்லையெனினும் அவர் தேகநிலை காரணமாகச் சென்னையை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். தாம் சென்னையை விட்டுச் செல்லும்போது அவர் மாணவர்கள் நல்லவர்களாகவும் உண்மையாளர்களாகவும் நடக்கவேண்டுமென்றும், கல்லூரி நன்னிலையில் இருப்பதற்காக அவர்களால் கூடிய வரையில் உதவி செய்ய வேண்டுமென்றும், ஒழுக்கமே மாணவர்களுக்குப் . பிரதானமானதாகுமென்றும், ஒருவரும் ஒழுக்கத்தை விடக் கூடாதென்றும், இறைவனுடைய துணை பற்றி எக்காரியத்தையும் செய்ய வேண்டுமென்றும் கூறினர்.

# முடிப்புரை

டாக்டர் மில்லர் சௌக்கியமாகத் தம் சுதேசம் போய்ச் சேர்ந்தார். கடற் பிரயாணத்தினால் அவருடைய உடல்நிலை ஒருவாறு சுகப்பட்டதென்றாலும் கண் பார்வை சம்பந்தமாக நன்மை ஒன்றும் ஏற்படவில்லை. டாக்டர்கள் இனி கண் பார்வை சரிப்பட்டு வராது என்று கூறிவிட்டார்கள். ஆகவே டாக்டர் மில்லர் கண் பார்வை குறைந்தவராகவே இருக்கவேண்டியவரானார். அவர் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி அபிவிருத்தி விஷயத்திலும் தம் பழைய மாணவர்களுடன் கடிதப் போக்குவரவு செய்யும் விஷயத்திலும் சலிக்கவில்லை. இந்தியாவைப் பற்றிய விஷயங்களையும் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியைப் பற்றிய விஷயங்களையும் அவர் பிறர் படிக்கக் கேட்டும் இந்தியாவிலிருந்து தம்மிடத்திற்கு வந்த தம் பழைய மாணவர்கள் நண்பர்கள் ஆகிய இவர்கள் சொல்லக் கேட்டும் அறிந்து கொள்ளுவார்.

டாக்டர் மில்லர் 1907-ஆம் ஆண்டில் சென்னையை விட்டுச் சென்றாலும் 1909-ஆம் ஆண்டு வரையில் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியின் கௌரவ தலைமை ஆசிரியராய் இருந்தார்.

டாக்டர் மில்லருடைய தேகநிலை சென்னையில் இருக்கும்போதே இடையரு உழைப்பினுல் சீர்கே டுற்றது என்றுமல்லவா? அந்நிலை பிறகு மாறவில்லை. அவருடைய தேகநிலை நாளுக்குநாள் பலவீனப்பட்டது. அவர் தேகநிலை இவ்வாறு இருக்கையில் அவருக்குத் திடீரென்று 'இன்புளுவென்சா' என்னும் விஷக்காய்ச் சல் கண்டது. அதைக் கண்ட அவருடைய நண்பர்கள் அவருடைய நிலை கவலைக்கிடமானதாகுமோ வென்று ஐயுற்றுர்கள். என்றுலும் மில்லர் விஷக் காய்ச்சலி லிருந்து தப்பிப் பிழைத்தார். ஆயினும் அவருடைய பலம் குறைந்து கொண்டே வந்தது. கடைசியாக அவர் 1923-ஆம் வருஷம் ஜுலை மாதம் 15-ஆந்தேதி யன்று எடின்பரோ பட்டணத்தில் இறைவனுடைய திருவடி நீழலை யடைந்தார்.

டாக்டர் மில்லர் தம்முடைய இருபத்து நான் காவது வயதில் சென்னைக்கு வந்து நாற்பத்தைந்து வருஷ காலம் கல்வித் துறையில் இடையருது உழைத் தார். தென்னிந்தியாவின் கல்வி அபிவிருத்திக்கு மூல் காரணர் டாக்டர் மில்லரேயாவ ரென்பதில் ஐயமில்லை. அவருடைய ஞாபகம் என்றும் நிலைத்திருப்பதற்காகச் சென்னை வாசிகள் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரிக்கு எதிரிலுள்ள 'ஹைகோர்ட்'டுக்கு வெளியில் அவருடைய உருவச்சிலை ஒன்றை அமைத்திருப்பது பெரிதும்

போற்றத் தக்கதொரு செயலாகும். டாக்டர் மில்லர் அரசியல் விஷயங்களிலும், மத சம்பந்தமான விஷயங்களிலும், ஜனசார சீர்திருத்த விஷயங்களிலும், பொதுக் காரியங்களிலும் ஈடுபட்டு அரும்பெரும் ஊழியம் செய்திருப்பதை நாம் என்றும் மறக்கமாட்டோம்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்பது பொய்யா மொழியன்றோ? ஆகவே நாம் டாக்டர் மில்லரை மறவாதிருப்போமாக.

முற்றிற்று

58815